# குணா :
# பாசிசத்தின் தமிழ் வடிவம்

அ. மார்க்ஸ்
கோ. கேசவன்

# குணா : பாசிசத்தின் தமிழ் வடிவம்

அ. மார்க்ஸ் - கோ. கேசவன்

வெளியீடு

**மக்கள் கல்வி இயக்கம்**
**விடியல் பதிப்பகம்**

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | குணா: பாசிசத்தின் தமிழ் வடிவம் |
| பதிப்பாண்டு | : | பிப்ரவரி 1997 |
| நூல் ஆசிரியர்கள் | : | அ. மார்க்ஸ் - கோ. கேசவன் |
| உரிமை | : | © நூலாசிரியர்கள் |
| விலை | : | ரூ. 15.00 |
| வெளியீடு | : | மக்கள் கல்வி இயக்கம்<br>32.ஏ, கல்லூரி சாலை,<br>திண்டிவனம் -1.<br>விடியல் பதிப்பகம்<br>3, மாரியம்மன் கோவில் வீதி,<br>உப்பிலிப்பாளையம், கோவை - 15. |
| அச்சு கோர்ப்பு | : | குறிஞ்சி கிராபிக்ஸ்<br>321, ஆற்காடு சாலை, சென்னை - 24. |
| அச்சாக்கம் | : | அலங்கார் அச்சகம்,<br>சென்னை - 17. |
| முகப்பு வடிவமைப்பு | : | மதன் |

**கு. தருமலிங்கம்**
மாநில அமைப்பாளர்
மக்கள் கல்வி இயக்கம்

62, தடிகொண்ட
அய்யனார் கோவில் தெரு,
புதுக்கோட்டை - 622 001.

# பதிப்புரை

பல்வேறு சாதி சமயம் சார்ந்தவர்களிடையேயும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் மக்கள் கல்வி இயக்கம் பாடுபடுகிறது. இதன் அடிப்படையில் தான் 'வரலாறும் மதவாதமும்', 'இஸ்லாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள்' போன்ற நூல்களை வெளியிட்டோம்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழக ஆய்வுக்களத்தில் பல்வேறு ஆய்வுகளைச் செய்து வருபவர் தோழர் குணா. அவர் எழுதிய 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்னும் நூல் தமிழகத்தில் ஒருபெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கீழ் வெண்மணி, குறிஞ்சான்குளம் ஆகிய இடங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் மீது நடைபெற்ற தாக்குதலை அவர் தெலுங்கர்களுக்கும் தமிழர்களுக்குமான ஒரு போராட்டமாகப் பார்க்கிறார் என்பதை இந் நூலின் வாயிலாகக் காண முடிகிறது.

ஆனால், இவற்றைச் சாதி, வர்க்க அடிப்படைகளில் காண வேண்டும். அதற்கு ஒடுக்கப்பட்ட சாதிகளையும் அடிப்படை வர்க்கத்தையும் ஒன்றிணைத்துச் .சாதியத்தை எதிர்த்த வர்க்கப் போரட்டமாகக் கொண்டு சென்றால் தான் அதை வீழ்த்த முடியும் என இந்நூலின் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

மார்க்சிய அணுகுமுறை கொண்டே ·அணுகுவதாகச் சொல்லும் தோழர் குணாவின் நூலை மார்க்சிய ஆய்வாளர்கள் பேராசியர்கள் கோ. கேசவன், அ. மார்க்ஸ் ஆகியோர் விமர்சனம் செய்துள்ளதை வாசகர்களுக்கு மக்கள் கல்வி இயக்கம் மற்றும் விடியல் பதிப்பதகம் இணைந்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளது. இதை வாசித்துத் தங்கள் கருத்துக்களை நல்க வேண்டுகிறேன்.

இந் நூல் வெளிவருவதற்கு உதவிய அனைவருக்கும் ம.க.இ. சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

புதுக்கோட்டை
*1–6–96*

**கு. தருமலிங்கம்**

# முன்னுரை

20-5-1995 அன்று ஈரோட்டில் ஆதித் தமிழர் பேரவை, விடியல் பதிப்பகம், சமூகநீதப் பதிப்பகம், பெரியார் மாவட்ட கலை இலக்கிய கூட்டமைப்பு ஆகியவை தோழர் குணா பற்றிய கருத்தரங்கம் நடத்தின. இக்கருத்தரங்கில் தோழர்கள் கோ. கேசவன், அ. மார்க்ஸ் ஆகிய இருவரும் வாசித்த கட்டுரைகளே இச்சிறு வெளியீடாகும்.

தோழர் குணா எழுதிய 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' என்ற நூல் தமிழ்த்தேசிய அரங்கில் ஒரு விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்குறிப்பிட்ட நூல் வெளிவந்த ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே, தோழர் கருணா மனோகரனின் 'திராவிடத்தால் வீழ்ந்தோமா? சாதியத்தால் வீழ்ந்தோமா?' என்ற நூல் வெளிவந்தது. தோழர் 'விடுதலை' ராசேந்திரன் விடுதலை நாளிதழில் குணாவின் நூலுக்கு மறுப்பாக தொடர்ந்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நவம்பர் 1995ல் ஒரு நூலாக வெளிவந்துள்ளது. 'தமிழர்கள் உரிமைக்கு எதிரி யார்?' என்ற நூலை 20 பக்கங்கள் கொண்ட சிறிய வெளியீட்டினை திராவிடர் மனித உரிமை அமைப்பு வெளியிட்டுள்ளது. இந்நேரத்தில் தமிழகத்தில் மொழிச்சிறுபான்மையினர் யார்? அவர்களுடைய உரிமைகள் என்ன? என்ற கேள்விகள் முன்னுக்கு வந்துள்ளன.

தமிழக அரசு 1993-ஆம் ஆண்டு டிசம்பரில் துணை ஆட்சி மொழி ஆணை ஒன்றினைப் பிறப்பித்தது. இதனைக் கண்டித்து புரட்சிகர இளைஞர் முன்னணி 15-5-1994 அன்று பொன்னேரியில் நடத்திய மாநாட்டு துண்டறிக்கையில் தமிழகத்தில் யார் மொழிச் சிறுபான்மையினர்? என்பதை பின் வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகியவற்றின் எல்லைகளை ஒட்டி தமிழகத்தில் வாழக்கூடிய, அதே நேரம் தமது சமூகப்பொருளாதார வாழ்வுக்கு அடிப்படையாக தமிழல்லாது தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் ஒன்றைக் கொண்டு வாழ்பவர்களை மொழிச்சிறுபான்மையினராகக் கொள்ளலாம்.

ஆனால் ஜெ அரசு அறிவித்துள்ள பகுதிகளில் வீட்டில் மட்டுமே பிறமொழி பேசும் மக்கள் மொழிச் சிறுபான்மையினர் என்பதை அம்மக்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவர்கள் பன்னூறு ஆண்டுகளாக தமிழகத்தில் வாழ்ந்து தமிழர்களோடு கலந்து விட்டவர்கள். இவர்கள் பேசிவரும் மொழியும் வீட்டளவில் மட்டுமே, அதுவும் சிதைந்த வடிவில் பேசப்படும் மொழியாகி

விட்டது. மற்றபடி இவர்களின் சமூகப்பொருளாதார வாழ்வு அனைத்துக்கும் அடிப்படையாக இருப்பது தமிழே.

எடுத்துக்காட்டாக, தமிழகத்தில் பரவலாக வாழும் தெலுங்கு பேசும் மக்கள் பல நூறாண்டுகளுக்கு முன்பே தமிழரோடு கலந்து விட்டவர்கள். இவர்களில் பலருக்கு தெலுங்கு எழுதப் பேசத் தெரியாது. இவர்கள் பல்வேறு சாதியினராக இருக்கின்றனர். இவர்கள் தம்மைத் தமிழரென்று கருதுகின்றனரேயன்றி தெலுங்கு தேசிய இனமாகக் கருதுவதில்லை, அதற்கான தேவையும் இவர்களுக்கு இல்லை. சமூக மற்றும் உளவியல் அடிப்படையில் இவர்கள் தமிழர்களாகவே ஆகிவிட்டார்கள். இவர்களில் பலர் தமிழின அரசியல் இயக்கங்களிலும், கலை இலக்கிய துறைகளிலும் முதன்மையான பங்காற்றியுள்ளனர்.

தோழர் குணாவின் நூல் டிசம்பர் 94-இல் வெளிவந்த பிறகு 1995 அக்டோபர் 2 அன்று கோவையில் கூடிய தமிழ் தமிழர் இயக்கத்தின் செயற்குழு 'தமிழகத்தில் பிறமொழியார்' பற்றி விவாதித்து ஏழு தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அவற்றில் 4,5, மற்றும் 6-வது தீர்மானங்களைத் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வரவிரும்புகிறேன்.

தமிழ்த் தேசிய இனம் என்ற சமூக-வரலாற்று வரையறைக்குள் யாரெல்லாம் அடங்குவர் என்பது ஒரு முதன்மையான வினா. மரபினம் போல் அல்லாமல் தேசிய இனம் என்பது ஒரு சமூகக் கூறு. வரலாற்று வழியில் அது உருப்பெறுகிறது. பொதுவான மொழி, தேசிய மனநிலை, பொருளாதார வாழ்வு, வாழ்விடப்பரப்பு ஆகிய காரணிகள் வரலாற்று வழியில் - ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் உரிய தனிச்சூழலில் இணைந்து தேசிய இனம் உருப்பெருகிறது. இவற்றில் மொழி முதன்மையான காரணி.

தெலுங்கு அல்லது வேறு அயல்மொழியை பூர்வீகத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் நூற்றாண்டுக் கணக்கில் தமிழகத்தில் வாழ்ந்து, தெலுங்கு மொழியுடனும், தெலுங்கு நாட்டுடனும் தொடர்பற்றுத் தமிழையே வாழ்க்கை மொழியாக - சமூகத் தாய்மொழியாக ஏற்று வாழ்ந்து வருகிறார்கள். இவர்களும் தமிழ்த் தேசிய இனத்தின் பகுதியே ஆவார்கள். வேறு மொழிகளை பூர்வீகத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கும் இது பொருந்தும்.

தமிழ்நாட்டில் எல்லாத் தெலுங்கர்களும் தமிழ்த்தேசிய இனத்தின் பகுதி என்று இதன் பொருள் அல்ல. எவ்வளவு காலமான போதிலும் தெலுங்கு மொழியுடனும் நாட்டுடனும் தொடர்பில்லாமல் வாழ்கிறவர்கள், தமிழர்கள் என்ற தேசிய மனநிலைக்கு வராதவர்கள், எல்லைப் பகுதிகளில்

சிறுபான்மையினராய் இருப்பவர்கள். இவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் பகுதியல்ல. தமிழ்த் தாயகத்தில் சிறுபான்மையாக இவர்கள் இருக்க முடியும். சிறுபான்மை சிறுபான்மையாகவே இருக்கலாம். அது பெரும்பான்மையாக அனுமதிக்க முடியாது. சிறுபான்மையினர் தமக்குரிய உரிமைகளை அனுபவிக்கும்போதே, தமிழ்நாடு தமிழர்களின் தாயகம் என்ற தன்மைக்கு உட்பட்டாக வேண்டும். எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டின் ஆட்சிமொழி, நீதிமொழி யாவும் தமிழாகவே இருக்கும். தமிழ் கட்டாயப் பாடமாக இருக்கும். சிறுபான்மையினர் தம் தாய்மொழியை ஒரு பாடமொழியாகக் கற்கவும், தாய்மொழியைப் பயிற்று மொழியாகக் கொள்ளவும் வாய்ப்பிருக்கும்.

கோ. கேசவன் அவர்கள் தன்னுடைய கட்டுரையின் இறுதிப் பகுதியில் குறிப்பிட்டுள்ளது போலவும், அ.மார்க்ஸ் அவர்கள் தன்னுடைய கட்டுரை முழுவதிலும் வலியுறுத்தி இருப்பது போலவும், தமிழ்த் தேசிய போராட்டமானது பாசிசமாகவடிவெடுக்கக் கூடாது என்பதில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது.

திண்டிவனம் — இவண்

*24-06-96* — **பா. கல்யாணி**

# திராவிட இயக்கம் பற்றிக் குணாவின் கருத்துகள் : ஒரு மதிப்பீடு

முனைவர் கோ. கேசவன்

# திராவிட இயக்கம் பற்றிக் குணாவின் கருத்துகள் : ஒரு மதிப்பீடு

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழக ஆய்வுக்களத்தில் தம் பங்களிப்பை நிலைநிறுத்திக் கொண்டுவருபவர்களில் தோழர் குணா மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். தமிழ்த்தேசச் சூழலை மையமாகக் கொண்டு சாதியம், சமயம், தேசியம் ஆகிய சிறப்புத் துறைகளில் தம் ஆய்வுக் கவனத்தைக் குவிமையப் படுத்தியுள்ளார். அவரது ஆய்வுகளில் திராவிட இயக்கம் பற்றிய மதிப்பீட்டை முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோழர் குணாவின் படைப்புகள் தட்டச்சு, உருட்டச்சு, அச்சு எனப் பல வடிவங்களில் வந்துள்ளன. அவரது நூல்களின் முன்னுரைகளைப் படிக்கும்பொழுது கட்டுரை எழுதப்பட்ட அல்லது ஏதேனும் ஒரு கருத்தரங்கில் படிக்கப்பட்ட காலத்துக்கும் அச்சு வடிவில் வெளிவந்த காலத்துக்கும் உரிய இடைவெளியை அறிய முடிகிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் தட்டச்சு, உருட்டச்சு வடிவங்களில் கட்டுரை வெளிவந்ததையும் நம்மில் பலர் அறிந்திருக்கக்கூடும். நூல் அச்சாக்க முயற்சிகளில் உள்ள சிரமங்கள் ஒருபக்கம் இதில் அடங்கியிருப்பினும் குணாவின் படைப்புகளின் உற்பத்தி அம்சம் நிறைவுற்றவுடன் அதன் உடனடி நுகர்வோர் தளம் ஒரு சிறிய வட்டமாக மையங்கொண்டிருப்பதையும் அவர்களுக்கான உடனடி வினியோக வடிவங்களாகத் தட்டச்சு, உருட்டச்சு வகைகள் கையாளப்பட்டன என்பதையும் இந்தப் போக்கின் ஊடாகக் காணலாம். குணா படைப்புகளின் உற்பத்தி, வினியோகம், நுகர்வு ஆகிய தளங்க்ளில் செயல்படும் இந்த விதிமுறைகளுக்குப் பின்னால் அவரது படைப்புகளில் காணப்படலாகும் அரசியலும் அத்தகைய அரசியலை உடனடித் தேவைகளாக்கும் வாசகர் மனோபாவமும் உள்ளன என்பதைக் காணலாம். கடந்த 15 ஆண்டுக்காலமாக வேறு எந்த ஓர் ஆய்வாளரையும் விட குணாவுக்கே இத்தகைய தனித்தன்மை அமைந்துள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

திராவிட இயக்கம் எண்பது ஆண்டுக்கால (1916 - 1995) பலத்தோடும் பலவீனத்தோடும் உள்ளது. அன்றைய சென்னை மாகாணத் தமிழ்பேசும் பகுதிகளில் உருவான அதன் இயங்கு

தளம் இப்பொழுதும் தமிழ்நாடாகவே உள்ளது. வரலாற்றின வளர்நிலையில் ஒன்று இரண்டாவதைப் போலவே திராவிட இயக்கம் பல கட்சிகளாகப் பெருகியுள்ளன. இருப்பினும் இந்தக் கட்சிகள் அனைத்தையும், திராவிட இயக்கம் என்றே பொது அடையாளப்படுத்த இயலும். இயக்கத்தின் நோக்கங்கள், இயங்கு தளம், செயல்பாடுகளின் கீழ்-மேல் எல்லைகள் ஆகிய அம்சங்களின் பொதுவான நிலைபாடுகளையும் தொடர்ச்சி நிலைகளையும் கொண்டு இவ்வாறு அடையாளப்படுத்த இயலும். அந்தவிதத்தில், தென்னிந்திய மிதவியக் கூட்டமைப்பு (நீதிக் கட்சி) தொடங்கி மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம்வரை திராவிட இயக்கம் என்று வரையறைப் படுத்தலாம். முதல் உலகப் பெரும்போருக்கு முன்னும் பின்னும் உருவான நெருக்கடிகளால் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மக்களிடத்தில் இயல்பாக எழுந்த எதிர்ப்புணர்வுகளுக்கு வடிகால் கொடுக்க இந்தியத் தேசியக் காங்கிரசு முனைந்த காலத்தில் பெருநகர்ப்புறங்களில் திராவிட இயக்கம் உருவாயிற்று. அது இன்றைக்குத் தமிழகத்தின் குக்கிராமங்கள் வரை ஆழமாக ஊடுருவிப் பாய்ந்துள்ளது. திராவிட இயக்கத்தின் கருத்தோடு கலந்துவரும் அரசியல் காற்றே இங்கு நீக்கமற நிறைந்துள்ளது. திராவிட இயக்கத்தைக் குறுக்கீடு செய்யாமல் மக்கள்திரள் அரசியலில் முன்னோக்கிய நகர்வுகள் சாத்தியமற்றுப் போவதைத் தொடர்ந்து காணலாம். இந்தவிதத்தில் குணாவின் ஆய்வுகளில் திராவிட இயக்கம் எவ்வாறு மதிப்பிடப்பட்டுள்ளதெனக் காண்பது அரசியல் அளவில் காலப்பொருத்தம் உடையதாக உள்ளதெனலாம்.

எல்லா இயக்கங்களையும் போலவே திராவிட இயக்கமும் புறநிலைத் தேவை கருதியும் அகநிலை விருப்பார்ந்த தன்மையிலும் பிறந்துள்ளது. எதிர்ப்புணர்வுகளை உட்செரித்துத் தம்வயமாக்கிக் கொள்ளும் ஒரு முறையியலாகவே இந்தியாவில் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றின் ஓரம்சமாகவே அரசியல் சீர்திருத்தங்கள் அமைந்தன. ஏகாதிபத்தியத்தின் வழிகாட்டுதலிலான முதலாளிய வகைப்பட்ட அரசாங்கங்களில் படிப்படியாக இந்தியர் பங்கேற்க வாய்ப்புகள் தரப்பட்ட காலங்களில் நவீன அரசியல் இயக்கங்கள் தோன்றின. இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்தும் தளம் காலப்போக்கில் விரிவடையும் காலத்தில் நவீன அரசியல் இயக்கங்களின் தளங்களும் விரிவடையத் தொடங்கின. நவீன அரசியல் இயக்கங்களின் மையம் இதுவாக இருப்பினும் அதற்குப் பன்முகப்பட்ட பரிமாணங்கள் கிடைக்கலாயின. இத்தகைய

பன்முகப்பட்ட பரிமாணங்களை அங்கீகரிக்கவும் அவற்றை முன்னெடுத்துச் செல்லவும் ஆன வரலாற்றுத் தேவையைப் புறநிலைச் சூழலாகக் கொண்டு ஓர் இயக்கத்தில் பல கட்சிகள் உருவாகின்றன. தலைமைகளின் அகநிலை விருப்பங்களுக்கு உள்ளார்ந்த முறையில் இத்தகு புறநிலை இயங்குதலையும் காண இயலும். முதல் உலகப் பெரும்போர்க் காலத்தில் தொடங்கப்பட்ட திராவிட இயக்கம் இரட்டையாட்சியின் குழந்தை என்பர். இது அதன் தொடக்கப் பரிமாணமே. அதன்பின் பல்வேறு அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சூழமைவுகளில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டு பிளவுகளுக்கு ஊடே தம் இருத்தலை அவசியப்படுத்திக் கொண்டுவருகிறது. நீதிக்கட்சி தொடங்கி மறுமலர்ச்சித் தி.மு.க வரையிலான திராவிட இயக்கத்தின் பல்வேறு பரிமாணங்களைக் குணா மதிப்பீடு செய்தலைக் காண்போம்.

## I. குணாவின் ஆய்வு முறையும் அரசியலும்

மார்க்சிய அணுகுமுறையைக் கொண்டு ஆராய்வதே நோக்கம் என்று உறுதியாகக் குறிப்பிடும் குணா, வரலாற்றுப் பார்வை அற்ற எந்திரவியல் பார்வை தவிர்க்கப்பட வேண்டியதாகும் எனத் தெளிவுபடுத்துகின்றார் (தமிழர் மெய்யியல், பக் 3). புரட்சி செய்ய விரும்புதல் தமிழகத்தில்தான் என்றும் பல நாட்டினங்களைக் கொண்ட இந்தியப் பெருமண்ணில் ஒரே காலப்புரட்சி என்பது, டிராட்சிகிய செல்வாக்காகும் என்றும் கூறுகிறார் (முன்னூல், பக்.10).

பொருளியல் தாழ்வுநிலையே புரட்சி உணர்ச்சியைப் படைக்குமெனில் அதில் பாட்டாளிகள் அத்தகைய மாபெரும் புரட்சி ஆற்றலை முனைப்புடன் கொண்டிருத்தல் வேண்டும். அந்நிலை இப்போது இல்லை. அதற்கு மாறாகப் பொருளியல் தேவைகளை ஓரளவு நிறைவு செய்தவர்கள், மார்க்சியத்தை அறிந்து புரட்சியில் ஈடுபடுதலையும் காண்கிறோம். இத்தகைய புதிய பாணி மார்க்சியரைப் பொறுத்துத் தமிழகத்தின் வருங்காலம் உள்ளது (தமிழர் மெய்யியல், பக். 337) என்கிறார்.

குணாவைப் பொறுத்துப் புதிய குடியாட்சிப் புரட்சிக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒரு நாடு இன்னொரு நாட்டை வலிய நேரடியாக ஆட்கொண்ட நிலையில் ஒடுக்குண்ட நாட்டு மக்களுக்கும் ஒடுக்குகின்ற நாட்டுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடாக அமைந்து புதிய

குடியாட்சிப் புரட்சி, ஒரு தேசியக் குடியாட்சிப் புரட்சியாகிறது. இங்கு வல்லரசு எதிர்ப்பு, நிலக்கிழமை எதிர்ப்பு ஆகியவற்றில் வல்லரசு எதிர்ப்பே முதன்மைக் கடமையாகும். ஒரு நாட்டை, வல்லரசுகள் தம் கைப்பாவைகளைக் கொண்டு ஆட்சி செய்து, அந்நாட்டின் பொருளியலில் அரை நிலக்கிழமை உறவுகள் நிலவுமாயின் அங்கு நிலக்கிழமை எதிர்ப்பை முதன்மைக் கூறாகக் கொண்ட அரை நிலக்கிழமைக்கும் மக்களுக்கும் இடையிலான முதன்மை முரண்பாட்டைக் கொண்ட ஒரு மக்கள் குடியாட்சிப் புரட்சி தேவைப்படுகிறது. ஒன்று, தேசிய விடுதலை. இன்னொன்று, உழவர் புரட்சி.

இவை இரண்டையும் ஒன்றுக்கு இன்னொன்றை எதிராக நிறுத்தவில்லையென்றும் அதற்கு மாறாக ஒன்றின் ஊடே மற்றொன்றை எய்துவதே புதிய குடியாட்சிப் புரட்சியின் உத்தியென்றும் குணா வரையறை செய்கிறார். அதாவது ஒன்றின் ஊடே மற்றொன்றைச் செய்து முடிப்பதற்கான முன்னிலையை உருவாக்கிக் கொள்ள இயலும் என்கிறார் (தமிழியப் பொதுவுடைமை, பக். 5, 34). அதாவது ஒன்றைச் செய்து முடித்தலே இன்னொன்றைச் செய்தலுக்கான முன்னிபந்தனை ஆகும்.

இந்த விதத்தில் அடிப்படை முரண்பாடுகள் பல இருப்பினும் இந்தியத் துணை வல்லரசுக்கும் தமிழக மக்களுக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடாக இருப்பதாக வரையறை செய்து (மார்க்சியமும் பெரியாரியமும், பக். 13) தமிழகத் தேசிய விடுதலையை அரசியல் திட்டமாக்கிக் கொள்கிறார். நாட்டுப்பற்று கொண்ட பெரிய நிலவுடைமையாளர்களில் ஒருசிலரும் தேசிய முதலாளிகள் சிலரும் கூடத் தேசிய விடுதலைக் கூட்டணியில் அடங்கலாம் எனக் குறிப்பிட்டு, (தமிழியப் பொதுவுடைமை, பக். 34) தமிழினத்துக்குள் அடங்கிய முரண்பாடுகளைப் பின்னர்த் தீர்த்துக்கொள்ள வேண்டும் (திராவிடத்தால் வீழ்ந்தோம், பக். 61) என்கிறார். இது ஆயுத வலிமையின் மூலம் நாட்டுப்புறங்களிலிருந்து நகர்ப்புறத்தைச் சுற்றி வளைத்து இறுதியில் நகரங்களை விடுவித்து, நீண்ட கால மக்கள் போர் முற்றி இறுதியில் படையெழுச்சிமுறையும் (insurrection) இணைய ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதாக அமையும். பாட்டாளிய வல்லாண்மையை நிறுவி, அதன் வழியாகப் பொதுவுடைமைக்கு இது அடிகோலும் எனக் குணா குறிப்பிடுகிறார். ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து இத்தகைய அரசியல் நிலைப்பாட்டு வழியே குணா அனைத்தையும் கண்டறிந்து வருகிறார்.

*குணா: பாசிசத்தின் தமிழ் வடிவம்*

இந்திய அளவிலான புரட்சி என்பதைக் குணா நிராகரிக்கிறார். இந்தியா என்ற கட்டமைப்பு இருக்கும் வரையில் பார்ப்பன மேட்டிமையும் சாதியமும் இருக்கத்தான் செய்யும். பாரதக் கொள்கையை ஒழிக்காமல் சாதியத்தை எவரும் ஒழிக்க முடியாது என்று குறிப்பிட்ட பெரியாரியத் தெளிவே தமிழ்த் தேசியக் கொள்கைக்கு அடிப்படை என்பது குணாவின் நிலைப்பாடு (வகுப்பும் சாதியும் வரணமும், பக். 70). ஆனால் குணாவின் இன்னொரு நூலைப் பொறுத்த அளவில் (சாதியத்தின் தோற்றம்) சாதியம், திராவிடர்களின் பங்களிப்பு ஆகும். அரை நிலவுடைமைச் சமுதாயத்தின் அரசியல் பண்பாட்டுத் துறைகளின் உள் நோக்கமாகவும் அமைகின்ற ஒருவகைப் பொருளியல் சமுதாய வாழ்க்கை முறையே சாதியம் என்பது அவரது கருத்து.

பார்ப்பன மேட்டிமையையும் சாதியத்தையும் இந்தியக் கட்டமைப்போடு மட்டுமே இணைத்துக் கண்டால், அவற்றின் வேர்களைக் கண்டறிய இயலாது. குணா இதற்குமுன் குறிப்பிடுதலைப் போல அரைநிலவுடைமை அரசியல் ஆதிக்கத்தோடு அவற்றை இணைத்துக் காண வேண்டியுள்ளது. எனவே தமிழகக் கட்டமைப்பிலும் - அது அரை நிலவுடைமை அரசியல் ஆதிக்கக் கட்டமைப்பாக இருக்கும் வரையிலும் இவை நிலவத்தான் செய்யும். குணா இந்தியப் புரட்சியை. நிராகரிப்பதற்கான காரணமாக இதைக்கூடச் சொல்லவில்லை. பல தேசிய இனங்களைக் கொண்ட இந்தியாவில் ஒரே காலப் புரட்சி, கவைக்கு உதவாத பேச்சு என அவர் குறிப்பிடுகின்றார். ஒரே காலப் புரட்சி இல்லையென்பதற்குப் பல தேசிய இனங்கள் கொண்ட நாடு என்பது மட்டுமல்ல, சமூகப் பொருளாதார உருவாக்கங்களில் உள்ள சமனற்ற தன்மையே காரணம் ஆகும். ஒரே தேசிய இனத்தையே பெரும்பான்மையாகக் கொண்டுள்ள தமிழகப் புரட்சியையும் குணா ஒரே காலப் புரட்சியாகக் காணாமல் நீண்டகால மக்கள் போராகக் காண்கிறார். நீண்டகால மக்கள் போர் என்ற இராணுவ - அரசியல் யுத்த தந்திரத்தின் அடிப்படை, புரட்சிக்களத்தின் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு நிலைமைகளில் உள்ள சமனற்ற தன்மையாகும். இது தமிழ்த்தேசம் உட்பட இந்தியப் பெருநாட்டுக்கும் பொருந்துகிறது. செயல்பாட்டுத் தளம் ஒரு தேசிய எல்லைக்குள் மட்டுமே அமைகின்றாற்போன்று இன்றைக்கு வரலாற்றுச் சாத்தியம் இருக்கிறது என்பது உண்மையே. ஆனால் இந்தியப் புரட்சிக் கருத்தை நிராகரித்து, தமிழகப் புரட்சிக்கான கருத்துக்கு உரிய நியாயங்களைத் தோழர் குணாவிடம் கோர வேண்டியுள்ளது.

புரட்சியின் அடித்தளமாக எந்த வர்க்கத்தை ஏற்றுக் கொள்வது என்பது குறித்தும் குணா குறிப்பிடுகின்றார். உதிரிப் பாட்டாளிகளுக்குப் புரட்சி ஆற்றல் முனைப்பு இல்லை எனக் குறிப்பிட்டு, அதன்பின் மத்தியதர வர்க்கத்தின் குணாம்சத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்கிறார் (தமிழர் மெய்யியல்). பாட்டாளி வர்க்கத்துக்கு உரிய அத்தகைய ஆற்றலை இங்குள்ள பருண்மையான சூழலின் பின்னணியில் அவர் காண்பதைவிட மத்தியதர வர்க்கத்துக்கு மேலான முதன்மை தருகிறார். ஓரளவு பொருளியல் தேவைகளை நிறைவு செய்த மத்தியதர வர்க்கத்தின் அறிவுச் செயலாகவே மார்க்சியத்தை அவர் அடையாளப்படுத்துகின்றார். இங்குச் சமூக நடை முறையிலிருந்து அறிவு பெறுதலும் அதை உறுதிப்படுத்தலும் என்ற போக்குகள் துண்டிக்கப் பட்டுவிடுகின்றன. அவை மட்டுமல்ல; மத்தியதர வர்க்கம் இத்தகைய சமூக நடைமுறைகளின் மூலம் தம் வாழ்நிலையிலிருந்து தம்மை வர்க்க நீக்கம் செய்து கொண்டு அடிப்படை வர்க்க வாழ்வியலைப் பெற்றாக வேண்டும் என்ற கருத்தாக்கம் அடிபட்டுப்போயுள்ளது. குணா தன் மார்க்சியத்தை - புதிய பாணி மார்க்சியம் என்றே பெயரிட்டுள்ளாரெனினும் இது மத்தியதர வர்க்க மார்க்சியம் ஆகும். வறட்டுத்தனமான பொருளாதார வாதமாக மார்க்சியம் சுருக்கப்பட்டுவிட்டது என்ற குணாவின் குறைபாடு நியாயமானதெனினும், அதிலிருந்து விடுபடுதலுக்குப் பதிலாக மத்தியதர வர்க்க அறிவு மேட்டிமைக் கவர்ச்சிப் பின்னலுக்குள் மார்க்சியத்தை மீண்டும் குணா சுருக்கிக்கொள்கிறார்.

புதிய சனநாயகப் புரட்சிக்குத் தேசிய விடுதலைப் புரட்சி, உழவர் புரட்சி என்ற இரண்டு பக்கங்கள் உண்டு எனக் குணா கூறுவதை ஒப்புக் கொண்டாலும், முரண்பாடுகளைக் கையாளும்போக்கில் நாம் மாறுபாடுகொள்ள வேண்டியுள்ளது. அடிப்படை முரண்பாடுகளையும் பிரதான முரண்பாட்டையும் கையாளும்பொழுது, பிரதான முரண்பாட்டுக்குப் பின்னரே அடிப்படை முரண்பாட்டைக் கையாளுதல் (ஒன்றுக்குப் பின்னே இன்னொன்று), பிரதான முரண்பாட்டைக் கையாளுதலின் ஊடாகவே அடிப்படை முரண்பாட்டைக் கையாளுதல் (ஒன்றின் ஊடே இன்னொன்று) என்ற இரண்டு கருத்தாக்கங்களையும் குணா குறிப்பிடுதலை நாம் ஒப்புக்கொள்ள இயலாது. தமிழக மாணவர் முழக்கம் (சூலை- அக்., 1994) இதழில் குணா எழுதிய கட்டுரையிலும் இதே நிலை நீடிப்பதைக் கண்டு தோழர் கருணா. மனோகரன் தன் அண்மை நூல் ஒன்றில் (திராவிடத்தால்

வீழ்ந்தோமா சாதியத்தால் வீழ்ந்தோமா? பக். 96-97) இதை ஒரே குழப்பம் என வருணிப்பது நியாயமாகவுள்ளது. ஆனால் இந்தக் குழப்பத்துக்கும் ஒரு காரணம் உள்ளது.

இன்றைய காலத்தில் ஏகாதிபத்தியத்துக்கும் (இதைப் பார்ப்பனபனியா நலன்களை உருவகப்படுத்தும் அதிகார வர்க்கத் தில்லி வல்லரசு முதலாளியம் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் குணா எழுதியுள்ளார்) நாட்டுக்கும் இடையிலான முரண்பாடு, நிலப்பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய இரண்டும் அடிப்படை முரண்பாடுகளாக நிலவும்பொழுது புரட்சியின் திட்டம் இவற்றைத் தீர்ப்பதாக அமையும். ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவமும் புரட்சியின் இலக்குகளாகவும் அமையும். இரண்டும் அடிப்படை முரண்பாடுகளாக நிலவும் வரையில், இரண்டில் எது ஒன்று பிரதான முரண்பாடாக அமைந்தாலும், ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பே புரட்சியின் யுத்த தந்திரமாக அமைகிறது. எந்த முரண்பாடு பிரதான முரண்பாடாக அமைகிறதோ அதைப் பொறுத்துப் போர்த்தந்திரங்கள் மாறுபடுகின்றன.

குணாவின் ஆய்வில் இன்றைய காலக்கட்டத்திய யுத்த தந்திர இலக்கு அம்சங்கள் விடுபட்டுப்போயுள்ளன. அது மட்டுமல்ல; அவர் குறிப்பிடும் பிரதான முரண்பாட்டுக்குரிய தீர்வுக்குள் பிரதான முரண்பாடாக அமையாத இன்னொரு அடிப்படை முரண்பாட்டுக்குரிய தீர்வையும் இணைத்து ஒன்றின் ஊடே இன்னொன்று எனத் திணிக்க முயல்வதால் குழப்பம் ஏற்படுகிறது. போர்த்தந்திர இலக்கை யுத்த தந்திர இலக்குகளுக்கு உட்படுத்தியும் அதை நோக்கியும் அரசியல் முழக்கங்கள் முன்வைக்கப்படும் பொழுதே இதிலிருந்து விடுபட இயலும்.

மேலும் பிரதான முரண்பாட்டைக் கண்டடைவதற்கான பருண்மையான ஆதாரங்களையும் மக்களின் வாழ்வியல் நிலைமைகளையும் குணா விளக்கியாக வேண்டும் என்ற கருணா. மனோகரனின் ஆதங்கம் நியாயமானதாகவே உள்ளது. நிலவும் பொருளுற்பத்திப் பேதங்களுக்கும் தமிழ்த் தேசிய இன விடுதலைக்கும் உள்ள தொடர்பைக் குணா விளக்க வேண்டும். வெறும் வரைவிலக்கணமாக இல்லாமல் நிலைமைகளைப் பற்றிய பரிசீலனையிலிருந்து விளக்க வேண்டும் (கருணா மனோகரனின் முன்னூல், பக். 100-101).

குணாவின் ஒரு கருத்தை மனோகரன் மேற்கோளாகக் காட்டி, இம்மண்ணில் ஒருவர் சாதி, வர்க்கம், தேசிய இனம் ஆகிய

மூன்றையும் சார்ந்தவராக இருப்பதாகவும், குணாவோ ஒருவர் ஒரு மொழிக்காரராக இருப்பதே முதன்மை எனக் கருதுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது 1994இன் குணாவின் நிலைப்பாடு. 1982இல் குணா இதில் சரியான நிலைப்பாட்டை முன்வைத்துள்ளார். 1982இல் எழுதிய கட்டுரையில், தமிழகத்தை அரை நிலக்கிழமைப் பொருளியலாகப் பார்க்கையில் ஒரு தமிழ் மகனுக்கு ஒரு குறிப்பிட்ட சாதி, ஒரு குறிப்பிட்ட வர்க்க உறுப்பினர் என்ற இரண்டு தன்மைகள் உண்டு எனக் குணா குறிப்பிடுகின்றார். சாதி வழியில் முதலாளிய உறவுகளையும் அமைத்துக்கொண்ட அவலத்தையும் அவர் குறிப்பிடுகின்றார் (தமிழகத்தில் மத மாற்றம் 20-3-1982 கட்டுரை). இது மட்டுமின்றி 1981இன் கட்டுரையொன்றின் (பரிமாணம் -மார்க்சியமும் பெரியாரும்) இறுதியில், உழவர் புரட்சியில் சாதி எதிர்ப்பு இயக்கத்துக்குரிய போர்த்தந்திர வடிவங்களையும் குணா குறிப்பிடுகின்றார். இக்கட்டுரையின் முன்பகுதியிலும் இதற்கு முந்தைய படைப்புகளிலும் குணா, தேசிய விடுதலைப் புரட்சியைப்பற்றிக் கூறியிருப்பினும் கீழ்க்கண்ட விளக்கவுரை காணப்படுகிறது. நாட்டுப்புறத்தில் காலூன்றும் சாதி எதிர்ப்பு இயக்கம், வர்க்க இயக்கமாகவும் மாறிடவேண்டும் என்றும் இதைச் செய்ய வல்லது உழவர் புரட்சியே என்றும் அவர் குறிப்பிடுகிறார். புரட்சிவழியில் நாட்டுப்புறப் பகுதிகள் சிறிதுசிறிதாக விடுதலை பெற்று, நிலவுடைமையாளர் அதிகாரத்துக்கு மாற்றாக உழவர் அதிகாரம் நிறுவப்படும்பொழுது அது ஒடுக்கப்பட்ட சாதியினர் வல்லாண்மையாகவும் கூலி உழவர் - வறிய சிறிய உழவர் வர்க்கக் கூட்டு அதிகாரமாகவும் மருவும்பொழுது வர்க்கமும் சாதியும் மயங்கிவிடும் எனக் குணா எழுதியுள்ளார் (பக். 33). இதையொட்டி வெளியான இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும் என்ற நூலில் (இது முதன்முதலில் 17-10-1982இல் The Politics of Language and Linguistic States என்ற கட்டுரையாக எழுதப்பட்டு 1983இல் விரிவாக்கப்பட்டதாகும்) தமிழ்த் தேசிய உணர்ச்சி, அடியிலிருக்கும் பாட்டாளி வர்க்கத்தையும் விவசாயக் குடிகளையும் ஒடுக்கப்பட்ட சாதியினரையும் கருவாக வைத்து வளருமாயின் தமிழரிடத்தில் ஒரு மறுமலர்ச்சி தோன்றும் என்கிறார் (பக். 24). தொழிலாளர்கள், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட சாதிகள் ஆகியோரைத் தமிழகத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைக்கக்கூடிய குறிப்பான கண்ணிகளைக் குணா இங்குக் குறிப்பிட இயலாவிடினும், அத்தகைய விருப்பம் அவரிடம் அப்போது 1982இல் இருந்ததை அறிய முடிகிறது.

ஆனால் இது கூடப் பின்னாளில் அவரிடத்தில தேய்ந்து போயிற்று. பொருளுற்பத்தி, சமுதாய உறவு, அரசியல் நிறுவனங்கள் ஆகியனவற்றிலிருந்து மனிதச் சமூக அடையாளப் படுத்துதல்களைக் கண்டறியாமல் மொழி ஒன்றையே பிரதானமாக - பின்னால் மொழியை மட்டுமே கொண்டு - அடையாளப்படுத்த முனைதல்களை அவரிடத்தில் காண இயலும். இது அவரது பழைய நிலைப்பாடுகள் பலவற்றைக் கேள்விக்குட்படுத்தியது.

இவை எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்துக் காலரீதியாகக் காணும்பொழுது குணாவின் ஆய்வு நோக்கம், ஆய்வு அணுகுமுறை ஆகியனவற்றைப் பின்வருமாறு காண இயலும்.

1. புரட்சியின் களம் தமிழகமாதல்.
2. பாட்டாளி வர்க்கப் புரட்சியைப் பற்றிக் குறிப்பிட்டாலும் சமூக நடைமுறையோடும் வர்க்க நீக்கத்தோடும் தொடர்பு அற்ற அறிவுமேட்டிமை கொண்ட மத்தியதர வர்க்கத்தைப் பிரதானப்படுத்தும் புதிய பாணி மார்க்சியம்.
3. அடிப்படை முரண்பாடுகள் தீர்வாகாத காலம்வரையில் நீடித்து நிலவக்கூடிய புரட்சியின் யுத்த தந்திர இலக்குகள் குறித்த மௌனம்.
4. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குரிய போர்த்தந்திர இலக்கை யுத்த தந்திர இலக்குகளுக்கு உட்படுத்திக் காண மறுத்தல்.
5. பிரதான முரண்பாட்டைக் கண்டு அடைவதற்கான பருண்மையான பரிசீலனை இன்மை.
6. சமூகத் தளங்களில் சாதி, வர்க்கம், தேசிய இனம் ஆகிய அடையாளங்களில் மொழி வழியிலான தேசிய இன அடையாளத்துக்கே ஒற்றை அழுத்தம் கொடுத்தல்.

இத்தகைய அம்சங்களைக் கொண்டு சமூக நிகழ்வுப் போக்குகளைக் குணா ஆராய்கிறார். இதன் தொடர்பிலேயே அவரது திராவிட இயக்கம் குறித்த மதிப்பீடுகளைக் காணமுடிகிறது.

திராவிட இயக்கம் குறித்துக் கடந்த பத்தாண்டுகட்கும் மேலாகக் குணா எழுதிய படைப்புகளில் கூறப்படும் கருத்துரைகளைத் தொகுத்து மதிப்பிடலே சரியாக அமையும். அவ்வாறு காணும்பொழுது திராவிடக் கருத்துருவம், திராவிட இயக்கம், பெரியாரிய இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்

என்ற தலைப்புகளில் காணலாம். முதலில் திராவிடக் கருத்துருவம் பற்றிய குணாவின் மதிப்பீட்டைக் காண்போம்.

## II. திராவிடக் கருத்துருவம்

குணாவைப் பொறுத்துத் திராவிடம் என்பது ஒருமொழிக் குடும்பத்தைக் குறிக்கும் *(மார்க்சியமும் பெரியாரியமும், 1981)*. இதைக்கூடத் தமிழியம் என்றுதான் குறிப்பிட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார் *(இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும் 1986)*. திராவிடர் என்பதை இனத்தின் (Race) அடிப்படையில் காண இயலாதென்றும் தமிழர்களைத் திராவிடர் இனத்துக்குரிய உருவ, நிற அடையாளங்களோடு பொருத்திக் காண இயலா தென்றும் குணா குறிப்பிடுகின்றார் *(முன்னூல் 1986, பக். 411-415)*. ஆனால் தனித் திராவிட இனம் என்ற கருத்தானது இறைநெறிக் கழகம் (Theosophical Society) போன்ற பார்ப்பனிய மீட்சி இயக்கங்கள் உருவாக்கிய ஆரிய இன மாட்சிமைக் கோட்பாட்டிற்கு எதிர்வினைக் கருத்து எனக் குணா காண்கிறார் *(முன்னூல் 1986, பக். 354)*. கால்டுவெல் அய்யர் போன்ற அய்ரோப்பியரின் கற்பனையில் கருவெடுத்ததே திராவிடக் கொள்கை *(முன்னூல் 1986, பக். 411)*. ஆரியம், திராவிடம் என்பவை பொய்க்கற்பனைகள்; மாயைகள்; மீட்புனைவுகள்; இனவெறிக் கொள்கையின் உறுப்புகள்; இந்து, இந்தியா, ஆரியம், திராவிடம் - இனவெறிக் கொள்கையின் உறுப்புகள் *(முன்னூல் 1986, பக். 417)*எனக் குணா குறிப்பிடுகின்றார்.

திராவிடம் என்பது ஆழமான தேசிய இன விளக்கத்தைத் தழுவியதாக இல்லை *(முன்னூல் 1986, பக். 405)*. தேசிய இன விளக்கத்தைத் தழுவியதாக இல்லாததோடு மட்டுமின்றி, தமிழ்த் தேசிய உணர்வு குறைபேறாகக் கருக்கலைந்தமைக்குக் காரணமாகத் திராவிடக் கொள்கை அமைந்தது எனக் காண்கிறார் *(தமிழின மீட்சி, செப்டம்பர் 1986, பக். 17 மற்றும் 19)*. திராவிடக் கொள்கையைத் தமிழரல்லாதார் தமிழினத்தின் மீது சுமத்தினர் *(செப்டம்பர் 1986, பக். 19)*. திராவிடக் கொள்கையியலே தமிழினம் மேன்மேலும் கெட்டமைக்கான பெரிய காரணமாகும் *(திராவிடத்தால் வீழ்ந்தோம், 1994, பக். 1)*. திராவிட மாயை, தமிழரைத் தாழ்த்திவிட்டது; தமிழினம் ஒரு தேசிய இனம் என்பதை மூடி மறைத்துவிட்டது; தமிழன் தன் அடையாளத்தையும் இன (அதாவது தேசிய இன) ஓர்மையையும் இழந்தான் *(முன்னூல் 1994, பக். 76; எரிமலை வாயின் மேல் இந்து மதம், 1994-2, பக். 12)* என்றெல்லாம் குறிப்பிடுகின்றார்.

திராவிட மாயையால் தமிழர்களுக்கு நன்மையும் உண்டு; தீமையும் உண்டு; முடிவில் தீமை மேலோங்கியுள்ளது. பார்ப்பனரின் கொடுங்கோன்மையை இது அடியிலேயே அறுக்கத் தொடங்கிய தெனினும் ஓரிந்தியக் கொள்கையோடு ஒத்துப் போனதால் தன் எதிர்மறையாகத் திரிந்து பார்ப்பன - பனியா நலன்களைத் தன் வயமாக்கிக் கொண்டது எனக் காண்கிறார் (1986, பக். 416). தமிழ்ப் பார்ப்பனர்கள் ஆரியக் கொள்கையால் அறிவிழந்ததைப் போலவே தமிழ்ப் பார்ப்பனரல்லாதார் திராவிடக் கொள்கையால் அறிவிழந்தனர்; அதன் விளைவாகத் தமிழர்களை மட்டுமே பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் எனப் பிளவுபடுத்த முடிந்தது. திராவிடக் கொள்கை தமிழர்களிடையே தேசிய இன உணர்வைப் பின்னுக்குத் தள்ளிச் சாதி உணர்வை முன்னுக்குக் கொணர்ந்தது (தமிழின மீட்சி, பக். 18-19) எனக் காண்கிறார்.

தமிழ்த் தேசிய இன மக்களிடையே பரப்பப்பட்ட திராவிடக் கருத்துருவத்தின் விளைவாகத் தமிழினம் அடிமைப்பட்டுவிட்டது (திராவிடத்தால் வீழ்ந்தோம், பக். 18-19). தெலுங்கர்களின் நலன்களுக்கானதே திராவிடக் கொள்கையாகும் (தென்மொழிக் கட்டுரை மார்ச் 1992). ஆந்திராவில் உள்ள தெலுங்கர்கள் தம்மைத் திராவிடர் என அடையாளப்படுத்தாமல் தமிழகத்தில் உள்ள இரட்டைமொழித் தெலுங்கர்கள் தம்மைத் திராவிடர் எனக் கூறிக்கொண்டு திராவிடக் கருத்துருவப் பரவலால் மேனிலைக்கு வந்தனர். இந்த விதத்தில் திராவிடம் என்ற புழுக்கூட்டை உடைத்தாலன்றித் தமிழ்த் தேசியம் வெளியே வராது (1986, பக். 28). திராவிடக் கொள்கை இன்றைக்குச் சாகக் கிடக்கிறது (1994, முன்னுரை).

இவை திராவிடக் கருத்துருவம் பற்றிய குணாவின் கருத்துரைகளாகும். இவற்றை இங்கு விமரிசனமாகக் காண வேண்டிய அவசியம் உள்ளது. திராவிடக் கருத்துருவம் பற்றிய மதிப்பீட்டை வரலாற்று அடிப்படையிலும், சாதி / வர்க்க அடிப்படையிலும் மதிப்பிடலே பொருத்தமாக இருக்கும். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இதற்குரிய விளக்கங்கள் அகலப்பட்டுக்கொண்டே வந்தது.

குணா குறிப்பிடுவது போலத் திராவிடக் கருத்துருவம் ஆரியத்தைப்போல அய்ரோப்பியரின் கற்பனையில் உருவெடுத்தது; ஒரு பொய்க்கற்பனை என்பனவற்றைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம். தனித் திராவிட இனக்கருத்தாக்கம், ஆரிய இன

மாட்சிமைக் கோட்பாட்டுக்கு எதிர்வினையாகும். மொழியியல் அடிப்படையில் இராபர்ட் கால்டுவெல், இனவியல் அடிப்படையில் குஸ்தாவ் ஓபர்ட், ஹெர்பர்ட் ரிஸ்லி (1980), நெல்சன் ஆகியோரின் ஆய்வுகளில் வடமொழிக் குடும்பத்துக்கு இணையான தமிழ்மொழிக் குடும்பம், பார்ப்பனர் அல்லாத இந்துக்கள், தென்னிந்தியா ஆகியவற்றுக்கு இணையான மாற்றுச் சொல்லாகத் திராவிடம் என்ற சொல் பயன்பாடு உள்ளதைக் காணலாம். 1860 - 1920 காலக்கட்டத்தில் திராவிடர், பார்ப்பனரல்லாதார் என்ற கருத்தமைவுகள் பார்ப்பனர்களுடன் போட்டியிட விரும்பிய நகர்ப்புற அறிவாளிகள் தமக்கு இடையில் ஒன்றிணையப் பயன்பட்டது. இத்தகைய பயன்பாட்டுக்கு அன்று திராவிடக் கருத்துருவம் வரலாற்றுச் சாதகமாகவே அமைந்திருந்தது.

இதன் பயன்பாட்டுத் தளம் 1920 - 1930களில் விரிவடைந்தது. தமிழ் வேளாளர்கள், செட்டியார்கள், கவுண்டர், நாடார், தெலுங்கு பலிஜா நாயுடு, கோமுட்டி செட்டி, கம்மா, ரெட்டிகள், கன்னடத் தேவாங்கர் ஆகிய சாதிகளில் தோன்றிய நிலவுடைமையாளர்கள், தரகு வணிகர்கள், ஆலை முதலாளிகள், நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரைப் பொது அடையாளப் படுத்துதலுக்கான தேவை ஏற்பட்டது. இக்காலக்கட்டத்தில் கொண்டுவரப்பட்ட இரட்டையாட்சி முறையோடு மட்டுமே இத்தேவையைத் தொடர்புபடுத்திக் காணாமல், 1920 முதற்கொண்டு இங்குப் பெருக்கெடுத்த தமிழகப் பார்ப்பன முதலாளிகள், வட இந்திய முதலாளிகள் ஆகியோருக்கு எதிரான பொது அடையாளமாகவும் காண வேண்டும். திராவிடர்கள், தென்னிந்தியப் பார்ப்பனரல்லாதார் என்ற தொடர்கள் அன்றைய புழக்கத்தில் இருந்தன. இவற்றுள் ஆந்திரப் பகுதியில் இருந்த தெலுங்குத் தலைவர்கள் பார்ப்பனரல்லாதார் என்ற கருத்தமைவை விரும்பினர். தமிழகத் தலைவர்கள் திராவிடரைத் தேர்ந்தெடுத்தனர். குணா கருதுவதுபோலத் தமிழகத் தலைவர்களின் திராவிட மாயையோ இளிச்சவாய்த்தனமோ இத்தேர்ந்தெடுப்புக்குக் காரணமாக இருந்திருக்க முடியாது. வேறு காரணங்கள் உண்டு. ஆந்திரப் பகுதிகளில் 90 சதவீதம் தெலுங்கர்கள் என்பதோடு, தெலுங்கர் அல்லாத திராவிடர்கள் அங்கு நிலவுடைமையாளராகவோ முதலாளியராகவோ இல்லை. ஆனால் தமிழகத்தில் தமிழ் பேசும் மக்கள் 80 சதவீதத்துக்குச் சற்றுக் குறைவு என்பதோடு தமிழரல்லாத திராவிடர்கள் இங்கு வலுமிக்க விவசாய, வணிக, முதலாளியச் சக்திகளாக இருந்தனர்;

இங்குள்ள தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி பேசும் பார்ப்பனர்கள் பொருளாதார நிர்வாக ஆதிக்கச் சக்திகளாகவும் ஆரிய இன மேலாண்மைக் கருத்தாக்கத்தில் அமிழ்ந்து ஊறிய சக்திகளாகவும் இருந்தனர்; இவற்றோடு இணைத்துக் காண வேண்டும். இத்தகைய சூழலில் இந்தப் பகுதியில் உள்ள தமிழர்களுக்கும் தெலுங்கர்களுக்கும் திராவிடக் கருத்துருவம் நல்ல வலுமிக்க கேடயமாகவே இருந்தது.

1930களுக்குப் பின் கிராமப்புறங்களிலிருந்து பார்ப்பனர்கள் நகர அதிகார மையங்களை நோக்கிப் பெருமளவு நகர்ந்தனர். பார்ப்பனருக்கு அடுத்தடுத்த படிநிலைச் சாதிகள் தத்தம் இடத்திலிருந்து ஓர் இடம் மேல் ஏறினர்; பிற்பட்ட வேளாண்மைச் சாதிகள், கைவினைச் சாதிகள், சேவைச் சாதிகள் ஆகியனவற்றில் பொருளாதாரப் பண்பாட்டு மாற்றங்கள் ஏற்பட்டன. இவை பரவலான மக்கள் திரள் இயக்கத்துக்கு வழிகோலின. இக்கட்டத்தில் திராவிடக் கருத்துருவத்தின் எல்லை விரிவடைந்தது. நகர்ப்புற கிராமப்புற வசதியுடைய சமூகச்சக்திகளின் வெளிப்பாடாக 1930க்கு முன்புவரை இருந்த நிலை விரிவடைந்து, நகர்ப்புற / கிராமப்புறக் கைவினைச் சாதிகள், சேவைச் சாதிகள் ஆகியோரின் ஆரியப் பார்ப்பனர் எதிர்ப்புணர்வின் வெளிப்பாடாக அமைந்தது. இதைக் குறிப்பாகப் பண்பாட்டுத்தளத்தில் காண இயலும். இதன் அரசியல் பண்பாட்டு முதன்மை குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் 1950களுக்குப் பிந்தைய சூழலில் மொழிவாரி மாநிலங்கள் அமைந்தபின், திராவிடக் கருத்துருவம் தேசிய இன அளவிலும் சாதிய எதிர்ப்பு அளவிலும் பயன்தரவில்லை. இதை உணர்ந்திருப்பினும் அண்ணாதுரை இதில் பாதிப்பயணம் மேற்கொண்டார். திராவிடர் என்றதை மாற்றித் திராவிட என்ற புவியியல் தன்மையைக் கொடுத்துத் திராவிடப் பூமியில் எந்த இனத்தவரும் இன்னலின்றி இன்ப வாழ்வு வாழப் பணியாற்றுவதே தி.மு.க.வின் இலட்சியம் என அண்ணாதுரை குறிப்பிட்டார் (15-11-1947). இங்கு இன இறுக்கம் தளர்த்தப்பட்டுப் புவியியல் தன்மை கொடுக்கப்பட்டது. அண்ணாதுரை பார்ப்பனர்களைத் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டாலும் கட்சியின் பெயரில் திராவிடத்தை விடவில்லை.

திராவிடம் என்பது ஆழமான தேசிய இன விளக்கத்தைத் தழுவியதாக இல்லை என்ற குணாவின் கூற்று சரியே. அது மொழிக்குடும்பம் சார்ந்தோ, மரபு இனம் சார்ந்தோ, புவியியல்

பகுதியைச் சார்ந்தோ இருப்பதாகும். தமிழ்த் தேசிய இன உணர்வு குறைபேறாகக் கலைந்ததற்குத் திராவிடக் கொள்கையை முற்றாகக் காரணமாக்க இயலாது. தமிழ்த் தேசிய இனத்துக்குள் உள்ள சாதிய / வர்க்க முரண்பாடுகள் அதற்குக் காரணமாக எண்ணத்தக்கவை.

திராவிடக் கொள்கையால் தெலுங்கு முதலாளிகளும் நிலவுடைமையாளரும் பயன்பட்டிருக்கலாமே தவிர அது தெலுங்கர்களின் நலன்களுக்கானதாக மட்டுமே அமைந்தது எனக் குணா சொல்லுதல், மிக வலிந்து கூறுதலாகும்.

இன்றைக்குத் திராவிடம் என்ற சொல்லாட்சியின் பயன் மிகவும் மாறித் தேய்ந்துபோயுள்ளது. இச்சூழலில் குணாவின் கருத்துகளைக் காண வேண்டியுள்ளது. இன்றைக்குத் தெலுங்கர்கள் தம் சொந்த அடையாளங்களோடே அமைப்புகளைத் தொடங்குகின்றனர். அவர்களுக்கு இப்போது திராவிடம் தேவை இல்லை. எனினும் திராவிடக் கட்சிகள் திராவிடத்தையே பயன்படுத்துகின்றன.

அண்ணாதுரை புவியியல் தன்மையோடு கொடுத்த வரையறை, எம்.ஜி.ஆர் காலத்தில் விரிவடைந்து இந்தியத் தன்மையுடன் இணைந்து அனைத்து இந்திய அ.தி.மு.க. எனப் பெயரிடப்பட்டது. மேலும் இந்தியாவில் இருக்கும் அனைவரும் திராவிடர்கள் என இதற்கு எம்.ஜி.ஆர் விளக்கம் வேறு கொடுத்தார் (மக்கள் குரல், 2.10.1976). எம்.ஜி.ஆர் விளக்கம் புதியது அல்ல. ஏற்கனவே மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை பரதகண்டம், தெக்கணம், திராவிட நல்திருநாடு என ஒரு படிநிலை வரிசையைக் குறிப்பிட்டிருந்தார். மறைமலை அடிகள் இந்தியாவே திராவிட நாடுதான் என விளக்கமும் கொடுத்திருந்தார் (மறைமலை அடிகள் வரலாறு, பக். 298). சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், அண்ணாதுரை, எம்.ஜி.ஆர் ஆகியோருக்கு இடையில் உள்ள தொடர்ச்சியான நிலைப்பாடுகள் திராவிடம், திராவிடர் ஆகியனவற்றின் தனித்தன்மைகளை நீர்த்துப் போகச் செய்துள்ளன. மேலும் திராவிடக் கட்சிகளில் பார்ப்பனரைச் சேர்க்க மறுப்பு என்பதில் இருந்த உறுதி குலைந்து பார்ப்பனரைச் சேர்த்தல் என்பது தொடங்கி (இதில் 1944 வரை பெரியாரும் ஊசலாட்டத்தோடு இருந்தார்) இன்றைக்கு ஒரு கட்சி பார்ப்பனரைத் தலைமையாக - அதுவும் நிரந்தரத் தலைமையாக - ஏற்றுக்கொண்டது வரை கண்டால், திராவிடம் அதன் எதிர்மறையாகிவிட்டது. இருப்பினும் திராவிடச் சொல், அரசியல் பயன்பாட்டிலேயே உள்ளது. இதற்கும் காரணம் உண்டு.

பாராளுமன்ற வாத நடைமுறைகளிலும் தேர்தல் அரசியலிலும் மக்களிடத்தில் நீண்ட காலமாகப் புழக்கத்தில் பயன்படுத்திய எந்தவொரு அடையாளத்தையும் (சொல்லாக்கம், கட்சியின் பெயர், சின்னம், கொடி) இழந்துவிட எந்தவொரு கட்சியும் தயாராக இல்லை. இன்றைக்கும் திராவிடம் என்ற சொல்லை எல்லாக் கட்சிகளுமே பயன்படுத்திக்கொண்டு வருகின்றன. பிளவுகள் வரலாற்றின் தவிர்க்க வியலாத பிரசவங்கள் எனக் கண்டால், ம.தி.மு.க. கூட இனிமேல் பிளவுபடலாம். அப்பொழுது தோன்றும் புதிய அமைப்பின் பெயரிலும் திராவிடம் ஒட்டிக் கொண்டிருக்கும். பாராளுமன்ற வாத நடைமுறையில் மக்களிடத்தில் பழகிய ஒன்றைத் தூக்கி எறிவது சுலபமன்று.

தமிழ்த் தேசிய இன ஓர்மையை இழப்பதற்கும், சாதி உணர்வை முன்னுக்குத் தள்ளுவதற்கும், தமிழர்களை அடிமைப்பட வைப்பதற்கும் திராவிடக் கருத்துருவம் பயன்பட்டுக் கொண்டிருப்பதாகக் குணா கருதுதல், வரலாற்றுக்கு முரணாக மட்டுமின்றி இன்றைய அரசியல் யதார்த்த விபரங்களின் எதிர்மறையுமாகும்.

## III. திராவிட இயக்கம் பற்றிப் பொது மதிப்பீடு

குணாவின் படைப்புகளை ஒருசேரக் காணும்பொழுது திராவிட இயக்கம் குறித்த பொது மதிப்பீட்டையும் காண்கிறோம். திராவிட இயக்கக் கட்சிகள் குறித்த தனித்தனி மதிப்பீடுகளையும் காண்கிறோம். இங்குப் பொது மதிப்பை மட்டும் காணலாம்.

திராவிட இயக்கத்தின் பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் மறுப்பு போன்றவற்றின் உள்ளடக்கம் நிலக்கிழமை எதிர்ப்பும் தமிழ்த் தேசிய இயக்க மறுமலர்ச்சியும் ஆகும் (தமிழர் மெய்யியல், பக். 320). நீதிக்கட்சியும் தன்மான இயக்கமும் கட்டிய பார்ப்பனர் எதிர்ப்புக் கூட்டணியால் பார்ப்பனரிடம் இருந்த அதிகாரம் சூத்திர மேல் சாதி நிலவுடைமை வகுப்பாரிடம் சென்றடைந்தது (மார்க்சியமும் பெரியாரியமும், பக். 34). பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், அடிப்படையில் தெலுங்கர்களின் இயக்கமாகவுள்ளது (இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும், பக். 419). தமிழகத்தின் எல்லைகளைக் காப்பதில் திராவிட இயக்கத்துக்கு அக்கறை இருந்ததில்லை (திராவிடத்தால் வீழ்ந்தோம், பக். 42-47). திராவிட இயக்கத்தின் தலைமையில் தொடர்ந்து தமிழரல்லாதோரே இருந்துள்ளனர். திராவிட இயக்கத்தின் உதிரி அரசியலால் ஊழல்,

தனிமுகட்டை எட்டியது; பொது வாழ்வில் தனியாள் ஒழுக்கம் சீர்குலைந்தது; கள்ளத்தனங்கள் அமைப்புரீதியாகவே செயல்பட்டன (முன்னூல், பக். 67-69). இவை குறித்துக் காண்போம்.

இங்கு முதலில் திராவிட இயக்கத்தின் பார்ப்பன எதிர்ப்பைச் சாதகமாகக் குணா காண்கிறார். பார்ப்பனர் எதிர்ப்புக் கூட்டணியால் சூத்திர மேல் சாதி நிலவுடைமை வர்க்கத்திடம் அதிகாரம் சென்றடைந்தது எனவும் குணா குறிப்பிடுதல் சரியானதாகும். ஆனால் நீதிக்கட்சியையும் தன்மான இயக்கத்தையும் இந்த அம்சத்தில் ஒருசேர சமமாகப் பாவிக்க இயலுமா என்பது அய்யமே. தன்மான இயக்கத்தில் பார்ப்பனர் உறுப்பினராக இல்லை; நீதிக்கட்சியில் இருந்தனர். இது மட்டுமின்றி நீதிக்கட்சியும் தன்மான இயக்கமும் பார்ப்பன நிலவுடைமையாளர்களை நிலவுடைமைப் பொருளியல் எதிர்ப்புக் கண்ணோட்டத்தில் எதிர்க்கவில்லை என்பது உண்மையெனினும், நீதிக்கட்சி பார்ப்பனிய நிலவுடைமைக் கலாச்சாரத்தை எதிரியாகக் காணவில்லை; நீதிக்கட்சித் தலைவர்களில் பலர் அத்தகைய பார்ப்பனியக் கலாச்சாரத்தில் பாரம்பரியமாக ஊறித்திளைத்திருந்தனர். ஆனால் தன்மான இயக்கம் இதற்கு நேர் மாறானது. பார்ப்பனியக் கலாச்சாரத்தைத் தமிழக மக்களின் முதல் எதிரியாகக் கண்டறிந்தது. இந்த விதத்தில் இரண்டு அமைப்புகளையும் சமப்படுத்தக்கூடாது. மேலும் பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் மறுப்பு ஆகியனவற்றின் உள்ளடக்கம் நிலக்கிழமை எதிர்ப்பு என முற்றாகக் குணா கூறுதலை, நிலக்கிழமை எதிர்ப்பின் ஒரு பரிமாணம் என்று மட்டுமே சுருக்கிக்கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் தன்மான இயக்கம் நிலக்கிழமையின் பார்ப்பனர் அற்ற உயர் சாதியத் தன்மைகளையோ அதன் பொருளாதாரத் தளத்தையோ அதன் அரசியல் தளத்தையோ தொடர்ந்து கேள்விக்கு உட்படுத்தவில்லை. இந்த விதத்தில் நீதிக்கட்சிக்கும் தன்மான இயக்கத்துக்கும் இடையிலான வேறுபாடுகளையும் தன்மான இயக்கத்தின் வரம்பையும் காணவேண்டியுள்ளது.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் தெலுங்கரின் இயக்கமாகவும் அதன் தலைமை தமிழரல்லாதோரிடமும் இருந்தது எனக் குணா கூறுவதை ஏற்கனவே 40 ஆண்டுகளுக்கு முன்னரே ம.பொ.சிவஞானம் கூறியுள்ளார். இது ஒரு குறிப்பிட்ட காலத்திய பகுதி உண்மையை முழுமையாக்கக் கூடிய அதீத மதிப்பீடாகும். பார்ப்பனரல்லாதோர் இயக்கத்தின் இயங்கு

தளங்களைப் பல்வேறு காலக் கட்டங்களில் அவற்றின் வளர்நிலைகளோடு காண வேண்டும். தெலுங்கு / தமிழ் வணிகர்கள், நிலவுடைமையாளர்கள், முதலாளிகள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரே இந்த இயக்கத்தில் பங்கெடுப்பதாக (இவர்களுள் தெலுங்கர் ஆதிக்கம் முதலில் இருந்தது) இருப்பினும், 1930களில் தமிழ் வணிகர்கள், முதலாளிகள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரின் பொருளியல் பெருக்கத்தோடு அவர்கள் தெலுங்கர்களின் ஆதிக்கத்துக்கு இணையாகப் போட்டி இட வந்ததைக் காணலாம். அதே நேரத்தில் 1930களில் கிராமப்புறங்களில் பிற்பட்ட சாதிகள், கைவினைச் சாதிகள், சேவைச் சாதிகள் ஆகியனவற்றில் உருவெடுத்த பார்ப்பன மேலாதிக்க எதிர்ப்பு, நீதிக்கட்சி தலைமையின் தளத்தை விரிவடையச் செய்தது. 1937 தேர்தலுக்குப் பின்னும் 1939 இந்தி எதிர்ப்புப் போருக்குப் பின்னும் நீதிக்கட்சியின் தலைமையில் மாநில அளவிலும் தள அளவிலும் தமிழரே நிரம்பியிருந்தனர்.

இந்த விதத்தில் பெரியார் மொழி வழியில் கன்னடராக இருப்பதைக் குணா அழுத்தமாகச் சுட்டுகிறார். ஆனால் தன் அரசியல் செயல்பாடுகளினால் பெரியார் தமிழர் தலைவராகவே இருந்தார். ஒரு மொழிவழித் தேசிய இனத்தவரே அதன் இயக்கங்களில் முன்னணியாக நேர்மையுடன் செயலாற்ற முடியும் என்பதைக் குணா ஒரு கோட்பாடாகவே வகுப்பதாகத் தெரிகிறது. இது ஆபத்தானது. வரலாறு அப்படி இருந்ததில்லை. தேசிய இனச் சிக்கலின் ஜனநாயகத் தன்மை கருதி அத்தேசப் பிரதேசத்திலே நீண்ட காலம் வாழ்பவரோ அல்லது குடியிருந்தவரோ அதன் ஜனநாயகப் போராட்டத்துக்கு நேர்மையான தலைமை கொடுக்க முடியும். வரலாற்றில் எடுத்துக்காட்டுகள் பலவுண்டு.

பிரெஞ்சு தேசத்தைச் சேர்ந்த ரெசிஸ்டேப்ரே தென் அமெரிக்க நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் முன்னணியில் நின்றார். அர்சென்டைனாவைச் சேர்ந்த எர்னஸ்டோ செகுவேரா கியூபாவின் தேசியப் புரட்சியில் நேர்மையாகப் பங்களித்தார். ஆங்கிலேயராகப் பிறந்தாலும் கிறிஸ்டோபர் கால்டுவெல், பாசிசத்துக்கு எதிரான ஸ்பானிய உள்நாட்டுப் போரில் முனைப்பான ஈடுபாடு கொண்டு மரணமடைந்தார். வங்காளத் தேசிய இனத்தைச் சார்ந்த எம்.என். ராய் மெக்சிகோ பொதுவுடைமை இயக்கத்தைத் தோற்றுவித்துத் தலைமை கொடுத்தார். ஆப்கானியரான அமீர் ஹைதர்கான் சென்னை மாகாணத்தில் தலைமறைவு பொதுவுடைமைக் குழுவைக்

கட்டினார். கன்னடத் தேசிய இனத்தவரான சீனிவாசராவ் தமிழ்த் தேசிய இனக் கூலி விவசாயப் பறையர்களின் மீதான பொருளாதார, பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினார். இவற்றுக்கு எல்லாம் தேவை, சனநாயகத்துக்காகத் தொடர்ந்து போராடும் அரசியலை ஏற்றுக் கொள்ளுதலாகும்; அதை முனைப்பாக நடைமுறைப்படுத்துதலாகும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் எப்போதும் தமிழரல்லாதோரே தலைமையினராக இருந்தனர் என்ற குணாவின் கருத்து முழு உண்மையையும் காட்டவில்லை; வரலாற்று ரீதியில் அத்தகைய தலைமையின் அழுத்தம் குறைந்து கொண்டே போயிற்று. அது மட்டுமல்ல; பிற மொழி பேசுவோரை அந்தக் காரணத்துக்காவே அவர்களின் அரசியல் நேர்மையைச் சந்தேகித்தலும் தவறாகும். இதை ஒரு கோட்பாடாகவே முன்னிறுத்த முயலும் குணா, ஒரு தேசிய இனப் போராட்டம் அத்தேசிய இனத் தலைவரால் மட்டுமே தலைமை தாங்கப்படுவதாகக் காண்கிறார். ஆனால் இன்னொரு இடத்தில் தேசிய இனங்களின் சிக்கலையும் தீர்வையும் புதிய சனநாயகப் புரட்சியின் கட்டமைப்புகளில் ஒன்றாகக் குணா பார்க்கிறார். அதே நேரத்தில் இங்குப் பிறமொழி பேசுவராயின், அவர்க்கு உள்ள சனநாயகப் புரட்சி ஆர்வத்தையும் தலைமைப் பண்பையும் மறுக்கிறார். இது ஒரு விதத்தில் குணாவிடத்தில் இயங்கும் சனநாயக மறுப்பு ஆகும். இதைக் குணாவிடம் உள்ள முரணாக மட்டும் காணாமல், அவரது முழுமுற்றான - தூய்மையான மொழி பற்றிய கருத்தாக்கத்தின் விரிவாகவும் தூய்மையான தேசிய இனத் தலைமைக் கருத்தாக்கமாகவும் காண இயலும்.

திராவிட இயக்கம் தமிழக எல்லைகளைக் காக்கப் போதிய அக்கறை செலுத்தவில்லை என்பதையும் தமிழகப் பொது வாழ்க்கையை இலஞ்ச ஊழல் முறைகேடுகளாலும் கள்ளத்தனங்களாலும் (கள்ள வாக்கு அளித்தல், கள்ளச் சாராயம் விற்றல் எனபன) சீர்குலைத்தது என்பதையும குணா குறிப்பிடுகின்றார். இது பொதுவாக ஒப்புக்கொள்ளத்தக்கது. தேவிகுளம், பீர்மேடு போராட்டத்தில் (1956) தி.மு.க., ம.பொ. சிவஞானத்தோடு இணைந்து பணியாற்றியது என்ற விபரத்தை மட்டும் குணா இங்கு மறந்துவிட்டார். எனினும் இங்கே குறிப்பிடும் குணாவின் விமரிசனங்களை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் அதற்கான காரணத்தைத் தலைமையில் தமிழரல்லாத தன்மைகளில் குணா காண்பதை ஒப்புக்கொள்ள இயலாது. குணா இங்குக் குறிப்பிடும் குறைபாடுகளுக்கும் பொதுவாழ்வுச்

சீர்குலைவுகளுக்கும் திராவிட இயக்கத்தின் பாராளுமன்ற வாதப் பங்கெடுப்பு அரசியலே முக்கியமான காரணமாகும்.

பெரியாரின் இயக்கம் எப்போதும் தேர்தலில் நின்றதில்லை; ஆனால் தேர்தல் முறையை ஒப்புக்கொண்டது. தேர்தலில் அரசியல்வாதிகளை ஆதரித்தல்; பின்னர் வெற்றி பெற்ற கட்சியை ஆதரித்தல் (சில விதிவிலக்குகள் தவிர); ஒரு நிர்ப்பந்தக் குழுவாகச் செயல்படல்; சில கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளல் என்ற அடிப்படைகளில் இது இயங்கியது. நீதிக்கட்சி, தி.மு.க. என்பன போன்ற பிற கட்சிகள் தேர்தலில் பங்கேற்றன; எதிர்க்கட்சிகளாயின; ஆளும் கட்சியாயின.

தேர்தல் கட்சிமுறை அரசியலில் விஷயங்களுக்காக அரசியல் செயல்பாடு என்ற நேர்மையான முறையெல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் குழுநலன்களுக்கான அரசியல் செயல்பாடு/செயல்பாடின்மை என்ற முறை பின்பற்றப்படுகிறது. தேவைப்படும் காலங்களில் விஷயங்கள் அரசியல் செயல்பாட்டுக்காக எடுத்துக்கொள்ளப்படும். கட்சிகளின் இத்தகைய அகவய நோக்கிலான செயல்பாட்டுகளுக்கு ஊடே புறநிலை விளைவுகள் சாதகமாக / பாதகமாக ஏற்பட்டுவிடுகின்றன.

1953 முதல் பெரியார், காமராசரை ஆதரித்துக்கொண்டு இருந்தார். காங்கிரசு ஆட்சிக்கு நெருக்கடி தராத வகையிலே அவரது அரசியல் செயல்பாடுகள் அமைந்தன. தமிழக எல்லைகள் விஷயத்திலே பெரியாரின் அணுகுமுறையை அவரது காங்கிரசு ஆதரவோடு வைத்துத்தான் காணமுடியும். தி.மு.க.வும் காமராசரை ஆதரித்துக்கொண்டு இருந்தது. குல்லுகபட்டர் இராசாசியின் இராசதந்திரத்தால் காமராசர் வீழ்ந்துவிடக் கூடாது என்ற கவலை அதற்கு இருந்தது. ஆனால் தேர்தலில் நிற்பதெனத் தி.மு.க., முடிவெடுத்த பின்னர், அது தன் நிலைப்பாட்டை மாற்றி அமைத்துக்கொண்டது. தமிழக எல்லைகளைக் காப்பதில் 1953-54களில் தி.மு.க.வுக்கு இல்லாத அக்கறை 1956இல் ஏற்பட்டுவிட்டது. 'கொடி எதுவானாலும் குடி தமிழன் எனில் தேவிகுளம் பீர்மேடு காக்க வாரீர்' எனத் தமிழர்க்குத் தி.மு.க. அறைகூவல் விடுத்தது. எனவே திராவிட இயக்க அரசியல் நிலைப்பாடுகளை அதன் பாராளுமன்ற வாத நடைமுறையோடு கணிக்க இயலும்.

இதுபோல ஊழல், இலஞ்சம், நிர்வாகச் சீர்கேடு, கள்ளத்தனம் ஆகியவற்றையும் முதலாளியச் சமூக விளைபொருள்களாகவும்

பாராளுமன்றவாத விளைவுகளாகவும் கண்டறிய வேண்டும். இதில் காங்கிரசு, திராவிட இயக்கம், பொதுவுடைமை இயக்கம் என்பனவற்றுக்கு இடையில் வேறுபாடுகள் மிகவும் குறைவு எனலாம். இன்றைய சமூகத்தை முதலாளிகள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோர் இணைந்து கூட்டுக்கொள்ளை அடிப்பதில் இவர்களுக்கு ஊடாக மேற்சொன்ன ஒரு படிநிலை வரிசை உண்டு. முதலாளிகள் தம்மிடம் மூலதனம் உள்ள வரையிலும், அதிகாரிகள் ஒய்வுபெறும் வரையிலும், அரசியல்வாதிகள் பதவியில் இருக்கும் வரையிலும் இவ்வாறு இருக்கலாம். ஊழல்கள் வெளியாவதில்கூட இத்தகைய ஒரு படிநிலை வரிசையுண்டு. தேனைத் தொட்டவன் நக்காமல் இருப்பானா என்பது தமிழ்ப் பழமொழியாக இருக்கலாம். ஆனால் நக்குவதற்காகவே தேனைத் தொடுவது என்பதே இம்மூவரின் பழக்கமாகும். திராவிட இயக்கத்தின் ஊழல் பரிணாம வளர்ச்சியில் பூதாகரமாக ஊதிப்புடைத்துப் பருத்துக் காணப்படும் இன்றைய நிலையை மிகக் கடுமையாக விமரிசிக்கும் நேரத்தில், இவை எல்லாவற்றுக்கும் திராவிட இயக்கமே காரணம் எனச் சொல்வது கடும் பிழையாகும். துக்ளக் போன்ற பத்திரிகைகளின் திராவிட இயக்க ஊழல் எதிர்ப்புக்கும் குணா போன்ற நேர்மையாளர்களின் ஊழல் எதிர்ப்புக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் இருத்தல் வேண்டும். துக்ளக், மத்திய அரசின் ஊழலை அம்பலப்படுத்துவதைவிடத் திராவிட இயக்க ஊழலை அம்பலப்படுத்துதலைப் பிரதானமாகக் கொண்டுள்ளது; திராவிட இயக்கத்திலும் கூடச் செயலலிதா ஊழல் அடக்கி வாசிக்கப்பட்டும் கருணாநிதி ஊழல் முரசொலிக்கப்பட்டும் வருகிறது. திராவிட இயக்கத்தைப் பார்ப்பனியக் கண்ணோட்டத்தில் விமரிசிப்பதற்கும் பொதுநிலையில் விமரிசிப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

## IV. நீதிக்கட்சி பற்றி

நீதிக்கட்சி, முதலாளியக்கட்சி என்பது உண்மை (முன்னூல், பக். 23). அது கல்வித்துறையிலும் அரசு அலுவலகங்களிலும் பதவிகளிலும் வகுப்புவாரி ஒதுக்கீடு, பார்ப்பனிய ஒழுக்கங்களையும் பூசாரித் தொழிலின் சுரண்டல் கொள்கையையும் எதிர்ப்பது போன்ற வடிவங்களில் வெளிப்பட்டது (பக். 391). இதன் உள்ளடக்கம், நிலக்கிழமைப் பண்பாட்டு எதிர்ப்பு ஆகும். நீதிக்கட்சி, நிலக்கிழமையைக் கட்டிக்காக்க விரும்பியதே அன்றித் தெற்கத்திய முதலாளிகளின்

நலன்களை உருவகப்படுத்தவில்லை என்னும் கூற்று முழுமை ஆகாது (அதே நூல், பக். 392) எனக் குணா காண்கிறார். பார்ப்பனியர் - வடவர் முதலாளிய நலன்களுடன் முரணிய பார்ப்பனரல்லாத கிழார்கள், வணிகர்கள் தொழிலுரிமையரும் சேர்ந்து தோற்றுவித்த புதிய சூழல், நடுத்தர வறிய வகுப்பினர் மற்றும் ஒடுக்கப்பட்ட சாதியினர்க்குச் சில நன்மைகளைப் பயத்தது; இதைப் பிற்போக்கு இயக்கம் என்பது வரலாற்று இருட்டடிப்பு ஆகும் (இதே நூல், பக். 392) என்கிறார். காங்கிரசுக்கும் நீதிக்கட்சிக்கும் இடையில் நிறையப் பொதுக்கூறுகள் உண்டு. இரண்டின் உருவாக்கத்திலும் ஆங்கிலேய அதிகாரிகளின் பங்கு இருந்தது; இரண்டும் உடனடிச் செயல்பாட்டு அளவில் அவ்வப்பொழுது ஏகாதிபத்தியத்தோடு முரண்பட்டாலும் அடிப்படையில் இசைவோடு இருந்தன. இவற்றில் இரண்டுக்குமிடையில் பொதுக்கூறுகள் இருப்பினும், நீதிக்கட்சியை மட்டுமே பொதுவுடைமையர் பழித்துரைக்கும் போக்கு ஒருதலையானது (அதே நூல், பக். 393, 398) எனக் குணா குறைபட்டுள்ளார். நீதிக்கட்சியின் தலைமை தெலுங்கர்களின் வசமே இருந்தது. நீதிக்கட்சி ஆட்சிக் காலங்களில் தமிழ்ப் பார்ப்பன அதிகாரிகளை அகற்றிய இடங்களில் தெலுங்கர்களும் மலையாளிகளும் நிரம்பினர் (தமிழ் இன மீட்சி, பக். 17-18) எனவும் வருந்துகிறார். இவை குறித்துக் காண்போம்.

நீதிக் கட்சி, முதலாளியக் கட்சி என்ற வரையறையை ஒப்புக் கொள்ளலாம். அதன் முதலாளிய நிலைப்பாடும் நிலவுடைமை எதிர்ப்பும் வரையறுக்கப்பட்ட தளங்களில் மட்டுமே இயங்கின. ஏகாதிபத்தியத்தால் இந்த எதிர்ப்பின் வரையறை உருவாக்கப்பட்டது. மேலும் குணா கூறுதல் போலப் பார்ப்பனியச் சடங்குகள் குறித்த எதிர்ப்பு நிலை பாட்டை நீதிக் கட்சி எடுக்கவில்லை. இந்த விதத்தில் நீதிக் கட்சியின் உள்ளடக்கம் நிலக்கிழமைப் பண்பாட்டு எதிர்ப்பு எனக் குணாவரையறை செய்தல் பொருந்தாதது ஆகும். முதல் உலகப் போரை ஒட்டிச் சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டதில் பதவிகளை இந்தியர்மயமாக்குதலில் முதலில் அது பார்ப்பனர் மயமாகி இருந்தது. இத்தகைய பார்ப்பனர் ஏகபோகத்தைத் தகர்ப்பதற்கு நீதிக் கட்சி பயன்பட்டது. அதுமட்டுமன்றி ஆரிய இன மேட்டிமை உணர்வுகொண்ட தன்மைக்கு எதிராகத் திராவிடக் கருத்துருவத்தை நீதிக் கட்சியின் தலைமையின் ஒரு பகுதியினர் உயர்த்திப் பிடித்தனர். இவை எல்லாம் வரலாற்றுச் சாதகங்கள் ஆகும்.

நீதிக் கட்சி குறித்த மதிப்பிடலில் குணா அக்கட்சியின் ஏகாதிபத்தியச் சார்பைக் காணாமற் போவது வியப்பளிக்கிறது. குணாவின் அரசியல் திட்டம் தேசிய விடுதலை என்பதையும் தில்லி அரசுக்கும் தமிழக மக்களுக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடாக உள்ளது என அவர் கூறுவதையும் இணைத்துக் கவனித்தால் இத்தகைய விடுபடல் கவலையளிக்கத் தக்கதாகும். மேலும் அன்றைய காலத்தில் தில்லி அரசு நேரடியாகவே ஏகாதிபத்தியத்தால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுபடாமல் தமிழக விடுதலை இல்லையென்பதால் நீதிக் கட்சியின் ஏகாதிபத்தியச் சார்பைக் குணா கடுமையாகக் கண்டித்திருக்க வேண்டும். அவ்வாறு காணாமற்போவது, அவரது ஆய்வின் உள்ளார்ந்த பலவீனம் ஆகும்.

மேலும் காங்கிரசுக்கும் நீதிக் கட்சிக்கும் இடையிலான ஒற்றுமை அம்சங்களைப் பற்றிக் குணா குறிப்பிடுதலை ஒப்புக் கொள்ளலாம். இவற்றுக்கு இடையில் உள்ள வேற்றுமைகளுக்கான காரணம், வளர்ச்சியடைந்த தரகு முதலாளிகளின் நலன்களைக் காங்கிரசின் தலைமை எதிரொலித்தமையிலும், ஒப்பீட்டளவில் அதிக வளர்ச்சிபெறாத தரகு முதலாளிகளின் நலன்களைத் திராவிட இயக்கத் தலைமை எதிரொலித்தமையிலும் உள்ளது எனலாம்.

நிலைமை இவ்வாறு இருக்க, காங்கிரசை மட்டும் விட்டுவிட்டுப் பொதுவுடைமையர்கள், நீதிக்கட்சியை மட்டுமே பழித்துரைக்கும் போக்கு ஒருதலைப்பட்சமாகும் என்ற குணாவின் கூற்று சரியாகும். ஆனால் திராவிட இயக்கம், காங்கிரசு ஆகிய இரண்டுமே ஏகாதிபத்திய ஆதரவைச் சாராம்சமாகக் கொண்டவை என வெளிப்படையாகக் குணா எங்கும் கூறாமல் குணாவும் ஆழ்ந்த மௌனம் சாதித்து விடுகின்றார்.

இன்னொன்று, 1939இல் நீதிக் கட்சி கேட்ட முழுத் தனியுரிமையாயினும் திராவிட நாட்டு விடுதலைக் கோரிக்கையாயினும் அவை ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு உட்பட்ட தன்னரசு (Colonial Swaraj) என்ற விளிம்பைத் தாண்டவே இல்லை. பொதுவுடைமையர் இத்தகைய விடுதலைக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை எனக் குணா ரொம்பவும் குறைபட்டுக் கொள்கிறார். குணாவின் கவலையில் நியாயம் இல்லை. பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தப்பட்ட இளைஞர்களே 1906இல் இந்திய நாட்டுக்கு முழு விடுதலை

கோரினர். இதற்கு அடுத்து ஏகாதிபத்தியச் சாய்வுகளற்ற முழுவிடுதலையை 1920களில் பொதுவுடைமையரே முன் வைத்தனர். பொதுவுடைமை யர்கள் முன்வைத்த தன்னுரிமை (Right to Self Determination) கோரிக்கையின் அழுத்தமே பின்னாளில் முழுவிடுதலை முழக்கமாகக் காங்கிரசில் பரிணமித்தது. மேலும் 1940களில் பல தேசிய இனக் கட்டமைப்பு கொண்ட ஒரு நாட்டில் தேசிய இனத் தன்னுரிமை என்பதையும் பொதுவுடைமைக் குழு முன்வைத்தது. இவற்றில் எங்கும் ஏகாதிபத்தியச் சார்போ சாய்வோ இல்லை. ஆனால் பெரியாரின் தனி நாட்டுக் கோரிக்கை 1947 வரை ஏகாதிபத்திய எதிர்ப்பில் இல்லை; 1950களுக்குப் பின் சில சீர்திருத்தங்களைப் பெறுதலுக்கான பேராற்றலைப் பெறும் முயற்சியாக இழிந்து போயிற்று. எனவே பொதுவுடைமையரின் தேசியத் தன்னுரிமைக் கோரிக்கையோடு பெரியாரின் தனிநாட்டுக் கோரிக்கையைச் சமப்படுத்தல் சமனற்ற ஒப்பீடாகும்; அது மட்டுமின்றி, விபரங்களிலிருந்து உண்மையைக் கண்டறிய மறுத்தலாகும்.

ஓரளவு வளர்ச்சியடைந்த இந்தியத் தரகு முதலாளியரின் நலன்களைக் காங்கிரசு எதிரொலித்தது போலவே, ஒப்பீட்டளவில் வளர்ச்சியடையாத தமிழ்த் தரகு முதலாளிகள் நலன்களைத் திராவிட இயக்கம் எதிரொலித்தது என்பதை மனங்கொள்ள வேண்டும். அப்பொழுதே காங்கிரசுக்கும் நீதிக் கட்சிக்கும் இடையிலான அடிப்படை ஒற்றுமையையும் சிற்சில வேறுபாடுகளையும் கண்டறிய இயலும். இங்குக் கூடத் தரகு முதலாளிகளைக் குறிப்பிடும் பொழுது தமிழ்ப் பார்ப்பனத் தரகு முதலாளிகள், கன்னட, தெலுங்குத் தரகு முதலாளிகள் என வகைப்படுத்தும் வல்லமை பெற்ற குணா (திராவிடத்தால் வீழ்ந்தோம், பக். 54 மற்றும் 58) **தமிழ் முதலாளியர்** என்றே பொதுவாக வகைப்படுத்தி, மிகவும் தயக்கத்துடன் சில இடங்களில் **தமிழரில் தரகு முதலாளியர்** எனச் சிரமப்பட்டு வரையறை செய்கின்றார் (அதே நூல், பக். 61). **வர்க்க வரையறைகளில் கூடத் தூய்மையான தேசிய இனப் பாதுகாப்புக் கருத்தாக்கம்** இங்கு வலிமையுடன் செயல்படுகிறது; அத்துடன் இன்றைய காலக்கட்டத்திய புரட்சியின் இலக்குகள் **குறித்த வரையறையின்மையும்** இங்குத் தெளிவாகின்றது. அது மட்டுமின்றி ஏகாதிபத்தியத்துக்கும் (அதாவது தில்லித் துணை வல்லரசுக்கும்) தமிழ் நாட்டுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாக அமையும் பொழுது ஏகாதிபத்தியம், தில்லித் துணை வல்லரசு, பார்ப்பன பனியா மார்வாரி தரகு

முதலாளிகள் மட்டுமின்றிக் கன்னட, தெலுங்கு, மலையாள, தமிழ்த் தரகு முதலாளிகளும் மக்களின் எதிரிகளும் புரட்சியின் இலக்குகள் ஆவர். குணா குறிப்பிடும் தமிழகத் தேசியப் புரட்சியின் இலக்குகளும் இவர்களே ஆவர். ஆனால் இங்குத் தமிழ்த் தரகு முதலாளிகள் விடுபட்டுப் போகின்றனர். ஏகாதிபத்தியம் பற்றிய திராவிட இயக்கக் கண்ணோட்டமே குணாவிடம் இயங்கிக் கொண்டிருப்பதை இது காட்டுகிறது.

## V. தன்மான இயக்கம். திராவிடர் கழகம். பெரியாரியம், பெரியார்.....பற்றி

பெரியாரின் நாத்திகம், சமூகச் சீர்திருத்தம் ஆகியன பற்றியும் பெரியாரியம் பற்றியும் தமிழர் மெய்யியல், மார்க்சியமும் பெரியாரியமும் ஆகிய படைப்புகளில் குணா ஆராய்ந்துள்ளார். பெரியாரின் நாத்திகம், கடவுள் மறுப்பு என்ற கருத்தையே மையமாகக் கொண்டதனால், கடவுள் கோட்பாடு தோன்றுதலுக்கான சமூக அடிப்படையைப் பெரியார் ஆராயவில்லை. பொருள்களின் பொருண்மை நிலையைச் சிறுமைப்படுத்தி அவற்றின் தோற்றங்கள், பெயர்கள் ஆகிய குறியீடுகளை முதன்மையாக்கும் பெயர் - உருக்கோட்பாடு, முழுமைக்கும் பகுதிக்கும் இடையிலான இயங்கியல் உறவை வெளிப்படுத்தாது; புண்ணுக்குப் புனுகு பூசுவதாக அமைந்த அவரது சமூகச் சீர்திருத்தக் கோட்பாடு ஏறத்தாழத் தோற்றுவிட்டது. இருப்பினும் பெரியாரின் கருத்துப் போராட்டங்களினால் ஏற்பட்ட சாதகங்கள் குறிப்பிடத்தக்கவை; பார்ப்பனரின் கொட்டம் ஓரளவு அடங்குதல், கீழ்ச் சாதியினர் தலைநிமிர்ந்து நிற்கும் உணர்ச்சி பெறல் ஆகியன அவையாகும். முதலாளியக் குடியாட்சிப் புரட்சிக் கட்டத்துக்கு உரிய நல்லதொரு தமிழ்த் தலைவர் ஆகப் பெரியார் அமைந்துள்ளார் (தமிழர் மெய்யியல், பக். 321-335). குணாவின் இத்தகைய கருத்துகளின் வளர்நிலையாகவே பெரியாரியக் கோட்பாட்டு உருவாக்கத்தை அவர் வரையறை செய்துள்ளார்.

கருத்து முதல்வாதம், கொச்சைப் பொருள்முதல்வாதம், வர்க்க உடனபாட்டுக் கோட்பாடு, மெல்லியல் (Liberalism) போக்கு, மக்களின் எதிர்வன்முறை மறுப்பு ஆகிய தளங்களில் இயங்கிய பெரியாரியம், சமூகத்தில் அளவுமாற்றத்தைத் தோற்றுவித்ததே தவிர இயல்புமாற்றத்தைப் படைத்திடவில்லை என்கிறார்

(மார்க்சியமும் பெரியாரியமும், பக். 30-34). தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதையும் ஒரு நாடென்பதையும், வடவராலும் ஆரிய இனவெறிக் கொள்கையாலும் தமிழர்கள் ஒடுக்கப்பட்டு வருவதையும் தமிழ் மக்களுக்கு முதன்முதலில் பரவலாக உணர்த்தியது தந்தை பெரியாரின் தன்மான இயக்கமாகும் (தமிழியப் பொதுவுடைமை, ஆகஸ்டு 1985). தமிழக முதலாளியக் குடியாட்சிப் புரட்சிக்குச் சில முற்போக்கு முழக்கங்களைத் தன்மான இயக்கம் கொடுத்தது (இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும், பக். 288). பெரியாரின் தனி நாட்டுக் கோரிக்கை தோல்வியடைந்தது. அதற்குக் காரணங்கள் பல. தமிழர்களிடம் ஒற்றுமையில்லை. பெரியாரின் வன்முறை மறுப்பு, நீதிக்கட்சியில் தெலுங்கரின் ஆதிக்கம், ஏகாதிபத்திய அரசுக்கு நீதிக் கட்சி வழங்கிய தங்குதடையற்ற ஆதரவு, பார்ப்பனர்க்கு இடையிலான முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் செயல் தந்திரம் இன்மை என இன்னோரன்ன பல காரணங்களைக் குணா குறிப்பிடுகின்றார் (முன்னூல், பக். 402-410). பாரதம் என்னும் புதிய பார்ப்பனியச் சூழ்ச்சிக் கொள்கையை வீழ்த்தாமல் சாதியத்தை எவராலும் வீழ்த்த இயலாது என்ற விளக்கமே பெரியாரின் தனித்தன்மை ஆகும். இத்தெளிவே தமிழ்த் தேசியக் கொள்கைக்கு அடியெடுத்துக் கொடுத்தது. ஆனால் இதற்குத் துப்பாக்கி ஏந்திய விடுதலைப் போராட்டப் பாதையை ஏற்றுக் கொள்ளாததே பெரியாரின் பெரிய தோல்வியாகும் (வகுப்பும் சாதியும் வரணமும், 1988, பக். 70) என்றும் குணா குறிப்பிடுகின்றார். இப்போதும் குறிப்பிடுகின்றார்.

பார்ப்பன - பனியாக்களின் கட்சியெனக் காங்கிரசுக் கட்சி பெரியாரால் அடையாளம் காட்டப்பட்டது. 1947க்குப் பிறகு பட்டிதொட்டிகளிலெல்லாம் திராவிட அரசியல் ஏற்றம் பெற்ற காலத்தில் மார்வாரிகளின் பெருக்கமும் அமைந்தது. இக்காலக்கட்டத்தில் அண்ணாதுரை எதிர்ப்பு, காங்கிரசு ஆதரவு ஆகியவற்றில் கவனம் கொண்ட பெரியார் மார்வாரி எதிர்ப்பை முதன்மை நோக்கமாகக் கொள்ளவில்லை. இதற்குப் பெரியாரின் காலடியில் மார்வாரிகள் காசைக் கொட்டியிருக்க வேண்டும். பெரியாரும் காஞ்சி சங்கரமடத் தலைவரும் கன்னடர்கள்; இருவரும் தமிழைப் பழித்தவர்கள். பெரியாரின் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, தமிழ் ஆதரவுக்கானது அல்ல. 1938இலும் 1950 இலும் பெரியார் முன்வைத்த தமிழ்நாடு தமிழருக்கே முழக்கம் தமிழரினத்தின் தேசிய இன விடுதலைக்கானது அன்று; அது அவரின் அரசியல் தேவைகளுக்கான அரசியல் உத்தி. பெரியாரின்

இந்தி எதிர்ப்பு ஆங்கிலத்துக்குச் சார்பானது. அவரது தமிழ் விரோதம், நாயக்கர் மரபில் வந்தது. 1965க்கு முன்பு வரையிலான பெரியாரின் இந்தி எதிர்ப்பு போலியானதாகும். 1965ஆம் ஆண்டில் தமிழகத்தில் நடந்த போராட்டத்தைப் பெரியார் எதிர்த்தார். தமிழருக்கெனத் தமிழ்த் தேசியத்தன்மை கொண்ட அரசியல் அமைப்பு ஏற்பட பெரியார் என்றுமே தடையாக இருந்தார். இவை எல்லாம் குணா குறிப்பிடும் கருத்துகள் ஆகும். இன்னமும் குணா குறிப்பிடுகின்றார்.

மொழி அடிப்படையிலான மாநிலப் பிரிவினைக்குப் பின்னர், தமிழ்நாடு பிரிவினையைப் பெரியார் கோரினார். தட்சணப் பிரதேசத் திட்டத்தை மத்திய அரசு முன்மொழிந்தபொழுது அதைப் பெரியார் எதிர்த்தார். இந்த நேர்வுகளில் நடப்பு மெய்ம்மை பற்றித் தெளிவும் துணிவும் பெரியாருக்கு இருந்தன. தமிழர்களைப்பற்றித் தரக்குறைவான கருத்துகளையே அவர் கொண்டிருந்தார். தமிழக எல்லைகளைக் காப்பதில் அவருக்கு அக்கறை இல்லை. பெரியாரின் பார்ப்பன எதிர்ப்புப் போராட்டங்கள், தி.மு.க.வின் வடவர் எதிர்ப்புப் போராட்டக் கவனத்தைத் திசைதிருப்பவும் அவரது கட்சியைத் தக்க வைப்பதற்கும் ஆன போராட்டங்களாகும். காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராகப் பெரியார் போராடியது இல்லை. இராசாசி, பக்தவச்சலம் ஆகியோர் தலைமைகளிலான காங்கிரசு அரசாங்கங்களைத் தவிர்த்து ஏனைய அரசாங்கங்களையும் பெரியார் எதிர்க்கவும் இல்லை.

பெரியாருக்குப் பின்னர், திராவிடர் கழகம் பழைய பார்ப்பனியத்தையே விடாப்பிடியாக எதிர்த்து வருகிறது. புதிய பார்ப்பனியத்தால் வரும் கேட்டைச் சரிவரப்புரிந்து கொள்ள இயலாமல் அது பழைய பார்ப்பனியத்தை எதிர்ப்பதனால், புதிய பார்ப்பனியம் வலுப்பெறலாகியுள்ளது (ஒடுக்குண்ட கிருத்துவர்களும் தமிழ்த் தேசியமும், பக். 16). இனி, குணாவின் கருத்துகளை மதிப்பீடு செய்யலாம்.

பெரியாரியம் பற்றிய குணாவின் ஆய்வு குறிப்பிடத்தக்க பங்களிப்பு ஆகும். மிக முக்கிய அம்சம் குணா இங்குப் (1981) பெரியாரை நல்லதொரு தமிழ்த்தலைவராக (தமிழர் தலைவராகக் கூட அல்ல) ஏற்றுக் கொண்டிருப்பதாகும். இது பின்னாளில் தறிகெட்டு விடுகிறது. பெயர் உருக் கோட்பாடு, கொச்சைப்பொருள் முதல் வாதம், கருத்து முதல்வாதம், கருத்துப் போராட்டத்தின் சாதகங்கள், வர்க்கச் சமரசக் கொள்கை,

மெல்லியல் போக்கு, மக்களின் எதிர்வன்முறை மறுப்பு ஆகிய பெரியாரியப் போக்குகளைச் சரியாகச் சுட்டிக் காண்பிக்கும் குணா, பெரியாரின் பின்னடைவுகளுக்குப் பொதுவுடைமையரைக் காரணமாக்குதல் பொருத்தமற்றதாகும்.

பாரதம் என்னும் புதிய பார்ப்பனியச் சூழ்ச்சியைக் கண்டறிந்த பெரியாரின் செயலே தமிழ்த் தேசியக் கொள்கைக்கு அடியெடுத்துக் கொடுத்தது என்றும் இது ஆயுதப் போராட்டமாக மலராததால் தோல்வியடைந்தது என்றும் குணா குறிப்பிடுகிறார். குணாவின் கருத்துப்படி பெரியார் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தால் தமிழ்த் தேசம் விடுதலை பெற்றிருக்கக்கூடும் என்பதாகும். இங்குப் பெரியாரின் கோரிக்கை, அதன் வர்க்க அடிப்படை, அதன் தேசிய உள்ளடக்கம் ஆகியனவற்றைக் குணா கணக்கில் எடுக்கவில்லை. பாரதத்தின் சுருக்கப்பட்ட பதிப்பாகவே திராவிடத்தையும் பின்னர்த் தமிழ் நாட்டையும் கண்ட பெரியார் அதன் அளவு மாற்றத்தை மட்டுமே குறிப்பிட்டிருந்தார். ஓரளவு பெரியாரியச் சாய்வு அடிப்படையிலான விமரிசனக் கண்ணோட்டத்தை முதலில் முன் வைத்த குணா, பின்னர் பெரியார் குறித்து மாறுபட்ட கருத்துகளை முன்வைத்துள்ளார்.

1947க்குப் பின் இந்தியாவின் பொருளாதாரத்தில் வட இந்திய முதலாளிகள் ஆதிக்கம் பெருத்ததையொட்டி, அவர்களின் இந்திய அளவிலான குடியேற்றம் பெருகியது. தமிழகத்தில் குறிப்பாக அதன் பெருநகரங்களில் வட இந்திய முதலாளிகள் அதிக அளவில் குடியேறினர். இந்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம், வடவர் எதிர்ப்புப் போராட்டங் களை முன் வைத்தது. 1949இல் பெரியாரிடமிருந்து விலகியபின், குறிப்பாகத் தேர்தல் பாதையைத் தேர்ந்தெடுக்கும் சூழல் உருவானபின் தி.மு.க., பார்ப்பனர் எதிர்ப்புப் போராட்டங்களில் முனைப்பாக இல்லை. எல்லா இனத்தவரும் இன்புற்று வாழ்வதே அதன் இலட்சியமானபின் பார்ப்பனர் நலன்களைத் தி.மு.க., புறக்கணிக்க இயலாது. ஆனால் வடவர் எதிர்ப்புப் போராட்டங்களைத் தி.மு.க., முன் வைத்தது. பெரியாரின் போராட்டங்களை வரிசைப்படுத்திக் கண்டால் வடவர் எதிர்ப்புப் போராட்டங்களைவிடப் பார்ப்பனர் எதிர்ப்புப் போராட்டங்கள் எண்ணிக்கையில் அதிகமாக அமைந்தன. இவ்வாறு அமைந்து போனதற்கான காரணத்தை அண்ணாதுரையின் தேர்தல் அரசியல் பாதையோடும் பெரியாரின் காமராசர் ஆதரவுப் போக்கோடும் காணவேண்டும். ஆனால் வடவர் எதிர்ப்புப் போராட்டங்களில் பெரியார் அதிகம்

ஈடுபடாததற்கும், தி.மு.க. வடவர் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தும் பொழுது அவற்றைத் திசைதிருப்புவதற்காகப் பார்ப்பனர் எதிர்ப்புப் போராட்டங்களைப் பெரியார் அதிகம் நடத்தியதற்கும் பெரியார் மார்வாரிகளிடம் பணம் கைக்கூலியாகப் பெற்றார் எனக் குணா குறிப்பிடுகின்றார். இது ஆதாரமற்ற வீண்பழி. இதற்கான ஆதாரமாகக் குமரிமைந்தன் எழுதிய படைப்பு ஒன்றைக் (தட்டச்சுப்படியாக மட்டுமே உள்ளது) குணா குறிப்பிடுகின்றார்.

1991இல் திராவிடர் கழகப் பொதுச்செயலர் கி. வீரமணி தமிழக முதல்வரும் பார்ப்பனருமான செயலலிதாவிடமிருந்து சுயமரியாதை இயக்கப் பிரச்சார நிறுவனத்துக்கு என ரூ. 5 இலட்சம் பணம் பெற்றார். பார்ப்பனரிடம் பணம் பெறலாமா? எனக் கேள்விகள் எழுந்தபொழுது, பெரியாரும் இப்படிப் பார்ப்பன முதலாளிகளிடம் பணம் பெற்றுள்ளார் என்றும், இப்படிப் பணம் பெறுதல் பெரியாரியப் பாதையிலிருந்து விலகல் இல்லை என்றும் வீரமணி அறிக்கையொன்றில் பதிலளித்தார் (விடுதலை, 3-10-1991). ஆக, பார்ப்பனரிடம் பெரியார் பணம் பெற்றமைக்கு நமக்கு வீரமணியே சான்றாவார். ஆனால் மார்வாரிகளிடமிருந்து பணம் பெற்றமைக்கான எவ்வித ஆதாரத்தையும் குணா வழங்காமல், ஒருவர் எழுதிய தட்டச்சுப்படியில் குறிப்பிட்டுள்ள ஒரு கருத்தை எவ்விதத்தும் சோதித்துப் பார்க்காமல் அப்படியே எடுத்தாளுதல் ஆய்வு நேர்மையாகாது (குணா மேற்கோள் காண்பிக்கும் தட்டச்சுப்பிரதியை எழுதிய திரு. குமரிமைந்தனை ஈரோட்டில் 20.5.1995 அன்று நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தபொழுது, இது குறித்து ஆதாரம் எதுவும் உண்டா என அவரிடம் கேட்கப்பட்டது. பெரியார் இறந்தபொழுது கட்சிக்கு ரூ. 125 கோடி சொத்து இருந்தது என வீரமணி குறிப்பிட்டுள்ளார். இவ்வளவு கோடி சொத்து மார்வாரிகள் நன்கொடை இல்லாமல் எப்படி சேர்ந்திருக்கும் என்ற ஊகத்தில் எழுதினேன் எனக் குமரிமைந்தன் பதில் சொன்னார். அப்போது தோழர் ஈரோடு குறிஞ்சி உடனிருந்தார். குமரிமைந்தன் கருத்தே ஊகம். இதை ஆதாரமாகக் கொண்டு குணா எவ்விதப் பரிசீலனையும் இன்றி எழுதியுள்ளமை அவரளவுக்குப் பொருத்தமாக இல்லை).

பெரியார் மார்வாரி எதிர்ப்பை முதன்மைப் படுத்தாததையோ தக்காணப் பிரதேசத் திட்டத்தை எதிர்த்ததையோ தமிழக எல்லைகளைக் காப்பதில் அவருக்கு அக்கறை இல்லாததையோ வேறு வழிகளில் காணாமல், பெரியாரின் காமராசர் ஆதரவு

நிலைபாட்டோடு காண வேண்டும். காமராசர் ஆதரவு, காங்கிரசு ஆதரவு, அரசாங்க ஆதரவு, அரசு ஆதரவு, அதன்பின் உள்ள வர்க்கங்களை ஆதரித்தல் என்கிற பெரியாரிய நிலைப் பாட்டோடு தொடர்புபடுத்திக் கண்டால்தான் விளங்க முடியும். அரசாங்கத்தை ஆதரிப்பதன் மூலம் அல்லது அதை நடுநிலைப்படுத்துவதன் மூலம் பார்ப்பனரல்லாத சமூகச் சக்திகளில் ஒரு குழுவினர் நலன்களைப் பேண இயலும் என்ற பெரியாரியச் செயல்பாட்டைக் காண இயலும். இந்த அடிப்படை மையம் என்றுமே மாறவில்லை. இதிலிருந்து காங்கிரசு ஆதரவு / எதிர்ப்பு, அண்ணாதுரை எதிர்ப்பு / ஆதரவு என்று பெரியார் சுயமுரண்பாடாகத் தோன்றும் பல முனைகளைத் தொட்டுக்.கொண்டே இயங்கினார்.

1938இல் நடந்த பெரியாரின் இயக்கத்தைத் தேசிய குடியாட்சிப் புரட்சியின் அம்சமாக முன்னர் கண்ட குணா, அதை அரசியல் தேவைக்கான அரசியல் உத்தியாகப் பெரியார் நடத்தியதாகப் பின்னாளில் காண்கிறார். பெரியார் 50 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஓர் இயக்கத்தின் தலைமையில் நீடித்து இருக்கும்பொழுது இயக்கத்தின் பல்வேறு கட்டங்களில் இயக்கத்தை நடத்திச் செல்வதற்கான உத்திகள் கையாளப்பட்டிருப்பினும் அவற்றால் ஏற்பட்ட சமூக அரசியல் விளைவுகள் புறநிலையாகவும் மதிப்பிடப்பட வேண்டியுள்ளன.

1938/1950களில் பெரியாரின் இயக்கம் புறநிலை அளவில் எழுச்சிகளை ஏற்படுத்தியது. பெரியாரின் இந்தி எதிர்ப்புக் கொள்கையை நாம் ஒப்புக்கொண்டாலும் அது தமிழ் ஆதரவில் மையம் கொள்ளாமல் ஆங்கில ஆதரவில் மையம் கொண்டிருப்பதை நாம் ஆதரிக்க இயலாது. இதுவே திராவிட இயக்கத்தின் தற்காப்பு ரீதியிலான மொழிக் கொள்கை. இதை நாம் விமரிசனம் செய்யும்பொழுது 1965க்கு முன்பு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் அனைத்தும் போலியானவை என்பது தவறான மதிப்பீடு ஆகும். 1938 இந்தி எதிர்ப்பு இயக்கம் அதன் தொடக்கக் காலத்தில் தமிழ் அறிஞர்களின் இந்தி எதிர்ப்பு இயக்கமாக இருந்தது. 1938, 1948, 1960 எனப் பல்வேறு ஆண்டுகளில் நடந்த போராட்டங்களை அதன் தலைமை நடத்திய விதம், முடித்துக்கொண்ட பாங்கு என இவற்றில் நாம் எத்தகைய விமரிசனங்களை முன்வைத்தாலும் இவற்றின் ஊடாகத் தொடர்புடைய கட்சிகள் தம்மைத் தக்க வைக்கும் நோக்கம் செயல்பட்டது என நாம் சரியாக எடுத்துக் காட்டினாலும், அரசாங்க எதிர்ப்பு உணர்வுகளில் மக்கள் குவிமையமாக இவை

வாய்ப்பு வழங்கின என்பதையும் மொழி அளவில் சமத்துவமற்ற தன்மையைக் கடுமையாக இவை அம்பலப்படுத்தின என்பதையும் புறநிலை விளைவுகளாகக் காணலாம்.

பெரியாரைப் பற்றிய விமரிசனக் கண்ணோட்டத்தின் மோசமான இறுதிநிலை ஒன்றுண்டு. கன்னடர் என்ற அளவிலும் தமிழைப் பழித்தவர்கள் என்ற அளவிலும் சங்கராச்சாரியையும் பெரியாரையும் ஒருசேரப் பாவிக்கும் நிலை குணாவிடம் உருவாயிற்று எனலாம். எந்த இரண்டு பொருள்களுக்கும் இணையான ஏதாவது சில பொது அம்சங்களைக் குறிப்பிட்டுச் சிலேடைக் கவிதைகள் பாடுவதில் வல்லமைபெற்ற மத்தியக் காலத் தனிப் பாடல் கவிஞர்களைவிடக் குணா பெற்றுள்ள தேர்ச்சியும் திறமையும் பாராட்டத்தக்கன. ஆனால் இத்தகைய ஒப்பீடு நிராகரிக்கத் தக்கதும் அருவெறுக்கத்தக்கதும் ஆகும்.

பெரியார், பிறவி வழியாகக் கன்னடராக அமைந்ததை நாமோ பெரியாரோ ஒன்றும் செய்ய இயலாது. ஆனால் கன்னடராக இருப்பதனாலேயே பிற தேசிய இனப் போராட்டத் தலைமையில் உள்ளார்ந்த நேர்மையில் செயல்படாதிருப்பதாகக் காண்பது *சதிவாதத்துக்கு* ஒப்பானதாகும். இத்தகைய முத்திரை குத்துதல், எல்லாவற்றுக்கும் எளிதான ஒரே வரித் தீர்வை எவ்விதச் சிரமுமின்றி எடுத்துச் சொல்லிவிடுகின்றது.

பெரியார் பல கட்டங்களில் தமிழ்மொழிக்கு ஆதரவாக இல்லை; தமிழுக்கு விரோத நிலைப்பாடு எடுத்திருந்தார். இதையும் அவரது கன்னடப் பிறவியோடு எண்ணக்கூடாது. அப்படியாயின் அவர் கன்னடத்தை உயர்த்திப்பிடித்திருக்க வேண்டும். மொழிபற்றிய பெரியாரின் நிலைப்பாடுகளை அவரது ஆங்கிலச் சார்பு அரசியலோடும் மொழியின் பயன்பாட்டு மதிப்பு பற்றிய நிலைப்பாட்டோடும் இணைத்துக் காண வேண்டும்.

## VI. திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதற்குப் பிந்தைய கட்சிகள் பற்றி

15-8-1947 அன்று துக்க நாளாகக் கடைப்பிடிக்கப் பெரியார் விடுத்த அறிக்கையை, 'இரண்டு பேர் சவாரி செய்ததில் ஒருவன் ஒழிந்ததில் பாதிச் சுமை குறைந்தது அல்லவா?' என அண்ணாதுரை விமரிசித்தார். இதைப் பெரியாரின் கையறு நிலைக்கு வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்ச உள்ளிருந்தே எழுந்த ஒருகுரல் எனக் குணா மதிப்பிடுகின்றார் (*இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும்*, பக். 409). இங்கு அண்ணாதுரையின்

நிலைபாட்டைக் குணா சாதகமாகக் காணவில்லை. ஆனால் தி.மு.க. தோன்றிய பின்னர் அதன் விரைவான வளர்ச்சிக்கு அதில் இலைமறைகாயாக இருந்த தமிழ்த் தன்மையே காரணமென்றும் அத்தன்மையைத் திராவிடக் கொள்கை அழுத்தி மறைத்தது என்றும் குறிப்பிடுகின்றார் (தமிழின மீட்சி, பக். 29). தெளிவான பொருளியல் கொள்கை பெரியாருக்கு இல்லையெனினும் திராவிட ஓர்மையின் அடிப்படையில் வடவரின் பொருளியல் சுரண்டலைப்பற்றிய நல்லதோர் அறிவு அண்ணாதுரைக்கு இருந்தது எனக் குறிப்பிடுகிறார். வடவர் எதிர்ப்பு ஓர்மையை அண்ணாதுரை திரட்டினார். எனினும் 1957க்குப் பின் அண்ணாதுரையின் திராவிட அரசியல் பொருளியல் கொள்கைகளில் மிகப் பெரிய பின்னடைவு தொடங்கியது எனக் குணா காண்கிறார். இது வளர்ந்து 1967இல். தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் வடவர் எதிர்ப்புக் கொள்கை முற்றாக மறைந்துபோனதுடன் மார்வாரிகளின் மிகப்பெரிய வேட்டைக்காடாகத் தமிழகம் உருமாறிவிட்டது எனக் குணா குறிப்பிடுகின்றார்.

மொழிவழி மாநிலங்கள் அமைந்த பின்னும் தி.மு.க., திராவிடநாடு கோரிக்கையை முன்வைத்த செயல் கவைக்கு உதவாததாகும். நடப்பு மெய்ம்மையைப் பற்றிய தெளிவும் துணிவும் பெரியாருக்கு இருந்த அளவுக்கு அண்ணாதுரைக்கு இல்லை. பிரிவினைத் தடைச்சட்டம் வந்தபின் திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டமைக்கு அண்ணாதுரையின் இயல்பான கோழைத்தனமும் வாக்குவேட்டை அரசியலும் காரணங்கள் எனபதைவிட, திராவிடம் என்றுமே கைகூடாது என அவர் பெற்ற தெளிவே பெரிய காரணமாகும் என்கிறார் (திராவிடத்ததால் வீழ்ந்தோம், பக். 14, 15, 37).

கலைஞர் மு. கருணாநிதி, தி.மு.க.வை வெற்றுப் பிண்டமாக்கியவர்; ஊழலின் தனிநாயகம்; கழக அரசியலில் ஒரு மஃபியா கும்பலின் தலைவர் எனக் குணா குறிப்பிடுகின்றார். கலைஞர் திராவிட ஓர்மையோ தெலுங்கு வழியினர் என்ற அடிமனத்துப் பற்றோ காரணமாகக் கொண்டிருந்ததால், நகரி ஆற்று நீர்ப்பங்கீட்டில் தெலுங்கர்கட்குச் சார்பாக இவரது செயல்கள் அமைந்தன (முன்னூல், பக். 63-64). இவ்வாறு குணா குற்றம் சாட்டுகின்றார்.

ஈ.வெ.கி. சம்பத் தொடங்கிய தமிழ்த் தேசியக் கட்சியின் தொடக்கத்தைச் சாதகமாகக் குணா காண்கிறார். திராவிடக்

கூட்டை உடைத்துக்கொண்டு அதிலிருந்த தமிழ்த் தேசிய உணர்ச்சியை அரசியலாக்கிய பெருநிகழ்வு இக்கட்சியின் தொடக்கமாக இருந்தது என்கிறார். ஆனால் சம்பத்திடம் இருந்த குழப்பங்கள், உறுதியற்ற நிலைமை, வலிமை இன்மை ஆகியவை தமிழ்த் தேசிய இயக்கத்தைப் பரந்த அளவில் கட்டும் வாய்ப்பை நல்கவில்லை. முதலாளியத் தேர்தல் சாக்கடை அரசியலில் பின்னர் இது மூழ்கியது (தமிழின மீட்சி). பிற்காலத்தில் குணாவின் இத்தகைய மதிப்பீடு மாறுகிறது. தமிழ்த் தேசியக் கட்சி, சோவியத் ஒன்றியத்தின் தேசிய இனக் கொள்கையின் போலி என்றும் தி.மு.க., வை எதிர்த்த அரசியல் சித்து என்றும் குறிப்பிட்டு, கன்னடர் என்பதால் சம்பத்திடம் தமிழ்த் தேசிய உணர்வு உள்ளார்ந்து இருக்க நியாயமில்லை எனப் பின்னாளில் முடிவுக்கு வருகிறார் (திராவிடத்தால் வீழ்ந்தோம், பக். 38).

அ.இ.அ.தி.மு.க.வை நிறுவிய எம்.ஜி.ஆர் மலையாளி. தமிழகத்தை மலையாளிகளின் துணைத் தாயகமாக்கியவர்; தமிழக அரசியலை மேன்மேலும் உதிரி மயமாக்கியவர்; பார்ப்பனிய மறுமலர்ச்சித் துணையாளர் என்றும் குணா குறிப்பிடுகின்றார். பெரியார் கண்ட திராவிட இயக்கத்தின் அறுதிநிலையாம் அ.இ.அ.தி.மு.க. பார்ப்பனியத்தின் தொண்டரடிப்பொடியாராகி நிற்கிறது (முன்னூல், பக். 65-66, 72). இவை குணாவின் குற்றச்சாட்டுகள்.

ம.தி.மு.க. பொதுச்செயலர் வை. கோபால்சாமியின் தனிக்கட்சிக்குப் பின்னால் தெலுங்கரினமே அணிவகுத்து நிற்பதாகவும் நாயக்கர் ஆட்சியை நன்கு நிலைப்படுத்தும் முயற்சியாக இது இருப்பதாகவும் மதிப்பிடுகின்றார் (முன்னூல், பக். 66). இவை குறித்துக் காண்போம்.

அண்ணாதுரையைப் பொறுத்துக் குணா மிகவும் மென்மையான விமரிசனத்தையே முன்வைக்கிறார். தி.மு.க.வின் வடவர் எதிர்ப்புப் போராட்டங்கள், தமிழ்த்தன்மை (அதாவது தமிழரான அண்ணாதுரையே தி.மு.க.வின் தலைமையாக இருந்தமையைக் குணா இவ்வாறு குறிப்பிடுகிறார்) ஆகியனவற்றைக் குணா சாதக அம்சங்களாகக் கண்டறிகிறார். ஆனால் 1957க்குப் பிந்தைய தி.மு.க. வின் தன்மைகளைக் குணா விமரிசிக்கிறார். 1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் வடவர் எதிர்ப்புக் கொள்கை முற்றாக மறைந்து போய்விட்டது. ஆனால் இவையெல்லாம் பாராளுமன்றப் பங்கெடுப்புக்கான அரசியல் நடைமுறையின் விளைவுகளாகும். பிரிவினைத் தடைச்சட்டம் வந்தவுடன்

திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை எவ்வித உட்கட்சி விவாதமும் இல்லாமல் கைவிட்டதற்குக் காரணம், திராவிடம் என்றுமே கைகூடாத ஒன்று என அண்ணாதுரை பெற்ற தெளிவே ஆகும் எனக் குணா கூறுதல் மிகவும் நகைப்புக்குரியது. சாதுரியமிக்க அரசியல்வாதி எனப் பெரியாரால் குறிப்பிடப்பட்ட அண்ணாதுரை தமிழகப் பகுதியில் காங்கிரசுக்கு மாற்றாகப் பொதுவுடைமைக் கட்சி வளர்ந்து விடாதபடி அந்த இடத்தில் தி.மு.க. வை நிலைத்துவைக்கப் பல தந்திரங்களைக் கையாண்டார். இந்த விதத்தில் தமிழக ஆளும் வர்க்கத்திற்கு மிகவும் இலாவகமாகப் பயன்பட்டார். பாராளுமன்றவாத அயோக்கியத்தனங்களையும் முதலாளியச் சமூக அராசகங்களையும் நியாயப்படுத்தும் சித்தாந்தங்களை உருவாக்குவதில் அண்ணாதுரை வல்லமை பெற்றிருந்தார். இதுவே அண்ணாயிசம் ஆகும். அண்ணாதுரை பிறவி வழித் தமிழராக இருந்துவிட்டதாலேயே அவர் மீதான நியாயமான விமரிசனங்களைக்கூடக் குணா முன்வைக்க விரும்பவில்லை.

ஆனால் மு. கருணாநிதி தெலுங்கு தேசத்திலிருந்து இங்குக் குடியேறிய இசை வேளாளர் பரம்பரையைச் சேர்ந்தவர் என யாராவது ஊகித்துக் குணாவுக்குக் கூறியிருக்க வேண்டும். அவரையும் தெலுங்கர் என்றே கருதி அவர் மீது கடுமையான விமரிசனங்களை முன்வைத்து, அவரது செயல்களுக்கு உள்நோக்கம் கற்பிக்கிறார். அண்ணாதுரையின் சித்தாந்தத்தைத் தனக்கு ஏற்றவிதத்தில் கருணாநிதி செயல்படுத்தினார். கருணாநிதி மீதான குணாவின் விமரிசனங்கள் கடுமையாகத் தோன்றினும், கருணாநிதி என்ற அரசியல் சாதுரியமிக்க தனித் திறனாளர் ஊடாக முதலாளிய அராசகங்கள் இயங்கின என்பதே உண்மையாகும்.

ஈ.வே.கி. சம்பத் தமிழ்த் தேசியக் கட்சி தொடங்கியதை முற்றிலும் வேறுபட்ட இரண்டு பரிணாமங்களில் குணா காண்கிறார். தமிழ்த் தேசிய உணர்ச்சியை அரசியலாக்கிய பெருநிகழ்வு என முற்காலத்திலும், தி.மு.க. வை எதிர்த்த அரசியல் சித்து எனப் பிற்காலத்திலும் குறிப்பிட்டுள்ளார். இங்கும் கன்னடர் என்பதால் சம்பத்திடம் தேசிய இன நேர்மை இருந்திருக்க வியலாது என்ற குணாவின் கூற்று மிகவும் அபத்தமாகும்.

எம்.ஜி.ஆர். மலையாளி என்றும், செயலலிதா கன்னடப் பிராமணர் என்றும் மிக நன்கு தெரிந்துதான் மக்கள் அவர்களுக்கு அபரிமிதமான வாக்குகளை அளித்துள்ளனர். இதில் யாருக்கும்

சந்தேகம் தேவையில்லை. தேர்தல் முறை அரசியலில் வெகுசனத் தொடர்பு ஊடகங்களின் மூலமாகக் கவர்ச்சிவாதமே மேலோங்கிய சூழலில் இதுவே சாத்தியமாகும். அண்ணாதுரை, கருணாநிதி, எம்.ஜி.ஆர்., செயலலிதா ஆகியோர் தொடர்பு ஊடகக் கவர்ச்சிப் பிம்பங்கள் ஆவர். இந்தப் போக்கைத் திராவிட இயக்கத்தின் உள்ளிருந்து கொண்டு அம்பலப்படுத்தவோ அகற்றவோ இயலாது. இந்த இடத்தில் பெரியார் கண்ட திராவிட இயக்கத்தின் அறுதிநிலை அ.தி.மு.க. எனக் குணா கணிக்கிறார். இப்படிக் காணவியலாது. திராவிட இயக்கத்தின் பெரியார்வழி அமைப்புகளுக்கும் அண்ணாதுரைவழி அமைப்புகளுக்கும் இன்னமும் அறுதிநிலை எய்திவிடவில்லை. இன்னமும் சேர்க்கைகளும் பிளவுகளும் உண்டு; வரலாறும் உண்டு.

வை. கோபால்சாமியின் வளர்ச்சிக்குப் பின்னால் உள்ள தெலுங்கரினத்தைக் குணா குறிப்பிடுதலில் பகுதி உண்மை உள்ளது. தெலுங்கரிலேயே உயர் சாதிய முதலாளிய, பணக்கார விவசாயத்தன்மை கொண்ட சக்திகள் தமக்குரிய பல செல்வாக்குக் குழுக்களிலே (கச்ஸஸகூக்கூ) ஒன்றாக ம.தி.மு.க. வை எடுத்துக்கொண்டுள்ளனர். இது ம.தி.மு.க.வுக்கும் பயன்படும் வாய்ப்பு உள்ளது. ஆனால் இது ஒரு பரிமாணமே. தெலுங்கு பேசுபவர்களிலேயே தாழ்த்தப்பட்ட சாதிகள், உதிரித் தொழிலாளர், கூலி விவசாயிகள் ஆகியோர் இதன் பின்னணியில் இல்லை. அவர்களையும் தெலுங்கர்கள் என்ற பதாகையில் திரட்ட முனையும் முயற்சி பல இடங்களில் பின்னடைவையும் தோல்வியையும் தழுவியுள்ளது. சமூக வாழ்நிலைகளில் பாரதூரமான வேற்றுமைகளை வைத்துக்கொண்டு அரசியல் ஓர்மை காணுதல் சாத்தியமில்லாத அளவுக்கு இன்றைக்கு ஓரளவு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனவே குணாவின் மதிப்புரை இங்கு ஒரே வேகத்தில் (நனுக்கி கூநூகீ) செல்வதாக உள்ளது.

## VII. குணா மதிப்பீடு : ஒரு விமரிசனம்

திராவிட இயக்கம் குறித்த குணாவின் மதிப்பிடலை அவரது தேசிய விடுதலைப் புரட்சி அரசியல் நிலைபாட்டோடுதான் பொதுவாக இணைத்துக் காண இயலும். இங்குச் சமூகத்தில் பிரதான முரண்பாட்டைக் கணக்கிலெடுப்பதில் பருண்மையான நிலைகளிலிருந்து தொடங்கும் பரிசீலனை குணாவிடம் இல்லை என்ற மனோகரனின் விமரிசனத்தை மீண்டும் பதிவு செய்தல் தேவை. அதே நேரத்தில் தேசிய விடுதலைப் புரட்சி என்ற

நிலையில் கூட, அடிப்படை முரண்பாடுகள் தீர்வாகாத நிலையில் ஏகாதிபத்திய - நிலவுடைமை எதிர்ப்பு என்ற புரட்சியின் யுத்த தந்திர இலக்குகள் குறித்த மௌனம் ஒரு முறையியலாகவே குணாவிடம் இயங்குகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் குணா திராவிட இயக்கத்தை இரண்டு வழிமுறைகளில் விமரிசனத்துக்கு உட்படுத்துகின்றார்.

முதகாலக்கட்டத்தில், திராவிட இயக்கத்தை விமரிசனத்துக்கு உட்படுத்தி அதன் சாதக பாதகங்களைச் சுட்டிச் சாதகங்களைப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் உத்தி கையாளப்பட்டது. இரண்டாம் காலக்கட்டத்தில் குணாவின் உத்தியில் மாற்றம் ஏற்பட்டுத் திராவிட இயக்கத்தின் உள்ளுயிர்ப்புகளைத் தாக்கித் தகர்த்து எறியும் உத்தி கையாளப்படுகிறது. இதற்கேற்பவே அவரது அணுகுமுறைகள் மாறியுள்ளன.

சாதி, வர்க்கம், தேசிய இனம் என மூவகைப்பட்ட அடையாளங்களுக்கு முற்பகுதியில் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் மாறி, பின்னாளில் மொழிவழியிலான தேசிய இனத்துக்கு மிகை அழுத்தம் கொடுக்கப்பட்டது. தூய்மையான மொழிப் பயன்பாடு என்பதன் விரிவாகவே தூய்மையான தேசிய இனத் தலைமை என்ற அவரது கருத்தாக்கம் அமைந்துள்ளது.

தேசிய விடுதலைப் புரட்சியின் சனநாயகச் சாராம்சத்தை முதலில் குணா ஏற்றிருந்ததை அறிகிறோம். தேசியச் சிறுபான்மையினர் என்ற விதத்தில் தமிழகத்தில் வழிவழியாக வாழ்ந்துவரும் இருமொழியர்க்குத் தரவேண்டிய மக்களுரிமைகளைக் கட்டாயம் உறுதி செய்ய வேண்டும் என முதலில் குணா குறிப்பிட்டிருந்தார். தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை இந்திய வல்லரசு பயன்படுத்திக்கொண்டு எல்லாத் தேசிய இனங்களையும் பிரித்துப் பார்த்து, சுரண்டிக் கொழுக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார் (தமிழின மீட்சி, செப்டம்பர் 1986). பின்னாளில் தேசியச் சிறுபான்மையினர்க்குச் சாதாரண வாழ்வுரிமைகளைக் கூடக் குணா வழங்கத் தயாராக இல்லை; தேசிய இனம் என்ற ஒரே அடையாளத்தைக் குணா பயன்படுத்துவதால் சிறுபான்மைத் தேசிய இனத்தின் ஒடுக்கப்பட்ட சாதி / வர்க்கம் ஆகியவற்றில் உள்ள மக்களை அதன் உயர் சாதி / வர்க்கம் ஆகியவற்றோடு குணா இயந்திரக் கதியில் சமப்படுத்தி விடுகிறார். ஒரு தேசிய இனப் பகுதியில் சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் வாழ்வுரிமையை மறுத்தல் என்பது சனநாயக விரோதம்;

சிறுபான்மைத் தேசிய இனத்தவரில் ஒடுக்கப்பட்ட சாதி/வர்க்கத்தை அதன் ஒடுக்கும் சாதி/வர்க்கத்தோடு இணைத்துக் காண்பதும் அடிப்படைச் சக்திகளின் கண்ணோட்டத்தில் தேசிய இனச்சிக்கலைக் காண மறுக்கும் போக்காகும். இதன் விளைவாக ஒரு தேசிய இனப் பகுதியில் பெருந்தேசிய இனத்தவர்க்கும் சிறுபான்மைத் தேசிய இனத்தவர்க்கும் இடையிலான முரண்பாடு தேசிய இன அளவில் பகைமைத் தன்மையைப் பெறுதலோடு, சாதிய அளவிலும் வர்க்க அளவிலும் இரண்டு தேசிய இனங்களின் அடிப்படைச் சக்திகள் நிரந்தரமாகப் பிளவுபடுதலுக்கும் வழி வகுக்கும். இந்த முரண்பாடு இத்தோடு முடிவடைவது இல்லை. தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை இந்திய வல்லரசு பயன்படுத்திக் கொண்டு சுரண்டிக் கொழுக்கிறது என ஏற்கனவே குணா குறிப்பிட்டுள்ளார். அதுவே யதார்த்தமாக மாறும் சூழ்நிலை ஏற்படும். எனவே தேசிய விடுதலைப் புரட்சியிலோ தேசிய இனச் சிக்கலிலோ சனநாயகச் சாராம்சத்தை வலியுறுத்தாமல் இருந்தால் அது தேசிய இன வாதத்துக்கும் பெருந்தேசிய இனவெறிக்கும் இட்டுச்செல்லும் என்பதோடு இந்திய வல்லரசின் யுத்தத் தந்திர வலைப்பின்னலுக்குள் சிக்கித் தவிக்கவும் நேரிடும். இதற்குரிய தீர்வு என்னவெனில் தேசிய இனச் சிக்கலின் சனநாயகச் சாராம்சத்தை உணர்ந்து கொள்ளுதலும் ஒடுக்கப்படட சாதி/வர்க்கக் கண்ணோட்டத்தில் தேசிய இனச் சிக்கலை அணுகுதலும் ஆகும். இவற்றைக் குணா ஏற்க மறுக்கிறார். இதனால் இவரது பயணம் மார்க்சியத்தில் தொடங்கினாலும் தேசிய இனவாதத்தில் போய் இதுவரை முடிந்துள்ளது.

தேசிய விடுதலைப் புரட்சி அடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையில் அமைய வேண்டியதாகும். ஆனால் குணா இதை முற்றாகச் சகல தளங்களுக்கும் விரிவுபடுத்தத் தயங்குகின்றார். ஏகாதிபத்தியம் இந்திய வல்லரசின் மூலமே இங்கு இயங்குகிறதெனினும் இது வெறும் வட இந்தியத் தரகு முதலாளிகள் அல்லது தமிழரல்லாத தரகு முதலாளிகள் மூலமே இயங்குகிறது எனக் கூற இயலாது. அது தமிழ்த் தரகு முதலாளிகள் நலன்களையும் உள்ளடக்கிய எல்லாத் தேசிய இனங்களின் தரகு முதலாளிகளின் நலன்களுக்காக இயங்குகிறது; இன்னும் சொல்லப்போனால் தமிழ்த் தேசிய இனத் தரகு முதலாளிகள் ஒப்பீட்டளவில் வேறுசில தேசிய இனத் தரகு முதலாளிகளை விட வாழ்வும் வளர்ச்சியும் கொண்டவர்கள்; ஏகாதிபத்தியத்தின் நீண்ட காலத் தூண்களாகவும் உள்ளனர். அந்த விதத்தில் தில்லித் துணை வல்லரசின் கூறுகளும் ஆவர்.

குணா: பாசிசத்தின் தமிழ் வடிவம்

திராவிட இயக்கம், பார்சி-பனியா-மார்வாரி தரகு முதலாளிகளை நட்பு முரண்கொண்டு பாவித்துச் செயல்பட்டமை திராவிடத் தரகு முதலாளிகட்குச் சாதகமளித்தது எனக் கண்டோம். இது திராவிட இயக்கத் தலைமையின் செல்வாக்கு மிக்க ஒரு பகுதியாக விளங்கிய தரகு முதலாளியக் கண்ணோட்டத்தை அம்பலப்படுத்தியது. ஆகவேதான் திராவிட இயக்கத்தால் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை அரசியல் தளத்தில் முன்வைக்க இயலவில்லை. அதே நேரத்தில் திராவிடத் தரகு முதலாளிகளின் குன்றிய வளர்ச்சி நிலையால் அது காங்கிரசு இயக்கத்தைப் போல ஏகாதிபத்தியத்துடன் வலுமிக்க பேரங்களை நடத்திப் பேர ஆற்றலைப் பெறவும் இயலவில்லை. தேசிய விடுதலைப் புரட்சிகர அரசியல் நிலைப்பாட்டிலிருந்து திராவிட இயக்கத்தை அணுகிய குணா, திராவிட இயக்கத்தின் ஏகாதிபத்திய ஆதரவு நிலைப்பாட்டைக் கடுமையாக எதிர்க்கவில்லை; இது குணாவின் ஆய்வின் உள்ளார்ந்த பலவீனம் ஆகும். இங்கு இன்னொன்றையும் இத்துடன் சேர்த்துக் கவனிக்க வேண்டியுள்ளது.

திராவிட இயக்கத்தைப் போலவே குணா தமிழ்த் தரகு முதலாளிகளை எதிரிகளாகப் பாவிக்கத் தயாராக இல்லை. ஆனால் தமிழகத்தில் உள்ள வட இந்திய மற்றும் தமிழரல்லாத தரகு முதலாளிகளை எதிரிகளாக்கிக் கொண்டுள்ளார். திராவிட இயக்கம் திராவிடர் அல்லாத தரகு முதலாளிகளை எதிரிகளாகப் பாவித்ததைப் போலக் குணாவும் தமிழரல்லாத தரகு முதலாளிகளை எதிரிகளாகப் பாவிக்கின்றார். இதைப் பொறுத்து திராவிட இயக்கத்தின் சுருக்கப்பட்ட தமிழ்ப்பதிப்பாகவே குணா காணப்படுகின்றார்.

ஒரு தேசிய விடுதலைப் புரட்சிக்கான திட்டத்தில் சொந்த நாட்டின் தரகு முதலாளிகட்கும் அயல் தேசத் தரகு முதலாளிகட்கும் இடையிலான முரண்பாடு மிகவும் பகைமையாகிய ஒரு குறிப்பான இடைக்காலக் கட்டத்தில் சொந்த நாட்டின் தரகு முதலாளிகளையும் சில நிபந்தனைகட்கு உட்பட்டு இணைத்து அய்க்கிய முன்னணி கட்ட வேண்டிய இடைக்காலக் கட்டத்திய போர்த்தந்திரம் வகுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது என்பதை மறுக்க இயலாது. சீனாவில் இரண்டாம் உலகப் பெரும்போரின் பொழுது சீனத் தரகு முதலாளிகளோடும் அவர்களது கட்சியோடும் சீனப் பொதுவுடைமைக் கட்சி இத்தகைய அய்க்கிய முன்னணியை இடைக்காலப் போர்த்தந்திர உத்தியாகக் கட்டியமைத்தது.

ஆனால் திராவிட இயக்கம் இத்தகைய அய்க்கிய முன்னணியை இடைக்காலத்திய போர்த் தந்திரமாக இப்படிக் கட்டவில்லை. குணாவும் இத்தகைய காலத்திய பருண்மையான ஆய்வுகள் எதுவுமின்றி நிபந்தனைக்கு உட்பட்ட இடைக்காலப் போர்த்தந்திரத்தை நிபந்தனைகளற்ற முழுக்காலத்திய தந்திரமாக முன்வைக்கிறார். இத்தகைய இணைவுகள் திராவிட இயக்கத்துக்கும் குணாவுக்கும் உண்டு. இத்தகைய உள்ளார்ந்த இணைவுத்தன்மைகள் அடித்தளத்தில் இயங்கிக் கொண்டிருப்பதன் காரணமாகவே, திராவிட இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பற்ற தன்மையைக் குணா அம்பலப்படுத்தாமல் இருப்பதோடு அதன் அரசியல் தந்திரங்களையும் சுவீகரித்துக் கொண்டுள்ளார் என அறிகிறோம்.

முதல் உலகப் போருக்குப் பின் உலகளாவிய நிலையில் ஒரு நாட்டின் தேசிய இனச் சிக்கல் சனநாயகச் சாராம்சத்தைக் கொண்டதோடு மட்டுமின்றிச் சோசலிசப் புரட்சிக்குரிய உள்திறன்களைக் கொண்டதாகவும் அமைகிறது எனக் காண வேண்டி உள்ளது. ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆதிக்கத்தையோ உள்நாட்டு அரசின் மூலமான ஆதிக்கத்தையோ எதிர்த்துத் தேசியக் குடியாட்சிப் புரட்சியை முன்வைக்கும்பொழுது இவ்வாறு காண வேண்டியது அவசியமாகும். இதனால்தான் முதல் உலகப் போருக்குப் பிந்தைய தேசிய விடுதலை இயக்கங்கள் பாரம்பரியமான முறையில் முதலாளிகளின் தலைமையின் கீழ் இல்லாமல் புதிய சனநாயகப் புரட்சியாக நடத்த வேண்டி உள்ளது. இதைக் கோட்பாட்டு அளவில் குணா தன் ஆய்வின் முற்காலத்தில் குறிப்பிடுகின்றார் (தமிழியப் பொதுவுடைமை). ஆனால் ஆய்வின் பிற்காலத்தில் அவர் எழுதிய விரிவாக்க ஆய்வுரைகள் அவ்வாறு அமையவில்லை.

மேலும் தமிழ்த் தரகு முதலாளிகளுடனான நிபந்தனையுடன் கூடிய அய்க்கியம் குறித்து ஒரு குறிப்பான இடைக்காலக்கட்டத்தில் தற்காலிகமாக முன்வைக்க வேண்டிய ஒரு போர்த்தந்திரத்தைக் குணா எவ்விதப் பருண்மையான ஆய்வும் புறநிலைத் தேவையும் இன்றி முழுமுற்றான தந்திரமாக முன்வைத்தல், அவர் விரும்புகிற தமிழ்த் தேசியத்துக்கு உகந்ததாக அமையாது; அது எதிரிடையாகவே உள்ளது. அது தமிழ்த் தரகு முதலாளிகள், தேசிய வேடம் புனைந்து கொள்ளப் பயன்படும். திராவிட இயக்கத்தைத் தாக்கித் தகர்த்து எறிவதாகக் குணா அகவயமாக நினைத்துச் செயல்பட்டாலும் திராவிட இயக்கம் முன்வைத்த அரசியல் தந்திரங்களிலிருந்து குணா வேறுபட்டு நிற்கவில்லை.

## VIII. தமிழ்த் தேசிய இன ஓர்மை

திராவிடத்தால் வீழ்ந்தோம் என்பது குணாவின் இன்றைய நிலைப்பாடு. நாம் வீழ்ந்தோம் என்பதில் குணாவுக்கு உள்ள நியாயமான வருத்தத்தை நாமும் பகிர்ந்து கொள்வது அவசியம். இங்கு நாம் என குணா அடையாளப்படுத்துவது, தமிழ்த் தேசிய விடுதலைச் சக்திகளை ஆகும். இத்தகைய சக்திகளைக் கணக்கிலெடுக்காமல் இத்தகைய சக்திகளோடு விமரிசன ரீதியில் இணைந்து செயல்படாமல் இன்றைக்குச் சனநாயக புரட்சிகரப் போராட்டங்கள் சாத்தியம் இல்லை.

இங்கும் தமிழ்த் தேசியச் சக்திகளின் வீழ்ச்சியைக்கூடக் குணா அறிவியல் நெறியில் காணவில்லை; அகவயப்பட்ட நெறியில் காண்பதாகவே தெரிகிறது. மேலும் வீழ்ச்சிக்குரிய காரணங்களைத் திராவிட இயக்கம் என்ற ஒற்றைப் பரிமாணத்தில் மட்டும் தேடிக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. இது அறிவியல் வகைப்பட்ட சுயவிமரிசனமாக இல்லை. அளவுக்கு அதிகமான பாரத்தைச் சுமக்கும் ஒட்டகத்தைத் திருப்திப்படுத்த அதன் முதுகில் உள்ள வைக்கோல் கற்றை ஒன்றை எடுத்து அதனிடம் காண்பித்துத் தூக்கி எறிந்து அதை மீண்டும் நடத்திச் செல்ல முயல்வதைப் போல இதுவுள்ளது.

இங்குத் தமிழ்த் தேசிய இன ஓர்மைக்குத் திராவிடம் தடையாக இருந்தது எனக் குணா குறிப்பிடுகின்றார். ஆனால் நம் தேசிய இனம் சாதிகளாகவும் வர்க்கங்களாகவும் பிளவுபட்டுள்ளது. இத்தகைய பிளவு பல நேர்வுகளில் பகைமைத் தன்மையோடும் உள்ளது. இத்தகைய சமூகச் சூழ்நிலையில் எல்லாச் சாதிகளின் எல்லா வர்க்கங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்த் தேசிய இன ஓர்மை என்பது வரலாற்றுக்கு முரணாகும். அத்தகைய ஓர்மையைக் கருத்தளவில் முன்வைத்த அனுபவங்கள் அனைத்தும், உயர் சாதிய/ மேல்நிலை வர்க்கங்களின் மேலாதிக்கத்தை ஒத்துக்கொள்வதில் போய் முடிந்தன. இங்கு இரண்டு கேள்விகள் முதன்மை பெறுகின்றன.

(1) எந்தத் தமிழர்க்கான விடுதலை?

(2) சிறுபான்மைத் தேசிய இனத்தவர் நிலைப்பாடு என்ன?

தேசிய இனச் சிக்கலுக்கான தீர்வை ஒட்டுமொத்தத் தேசிய இனப் பார்வையிலிருந்து அணுக இயலாது. தமிழ்ச் சமூகம் தமக்குள் பகைமை கொண்டுள்ள சாதிகளாகவும்

வர்க்கங்களாகவும் பிளவுகொண்ட இன்றைய சூழலில் இது வரலாற்று முரணாகும். அது மட்மல்ல, இத்தகைய பார்வை உயர் சாதியினரும் மேல்நிலை வர்க்கத்தினரும் தமக்கான அரசியலைத் தமிழ்த் தேசிய அரசியலாக்கி ஒடுக்கப்பட்ட சாதியினரையும் அடிப்படை வர்க்கங்களையும் தம் அரசியல் வலைப்பின்னலுக்குள் இறுக்கிக் கொள்ளவும் முடியும். தமிழ்த் தேச விடுதலைக்குப் பின்னர் இன்னொரு போராட்டத்தை ஒடுக்கப்பட்ட சாதியினர்க்காகவும் அடிப்படை வர்க்கத்துக்காகவும் நடத்திக் கொள்ளலாம் என்ற குணாவின் நிலைப்பாட்டை அப்படியே நம்பிவிட முடியாது. அதற்கான அரசியல் உத்திரவாதமும் அமைப்பு உறுதிப்பாடும் தேவைகளாகும்.

உயர் சாதிகள், ஆதிக்க வர்க்கங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான தமிழ்த் தேசிய இன ஓர்மை இயல்பாகவே உள்ளது; அல்லது எளிதில் கட்டப்பட்டு விடுகின்றது. ஆனால் ஒடுக்கப்பட்ட சாதிகள் அடிப்படை வர்க்கங்கள் ஆகியவை கொண்ட தேசிய இன ஓர்மை தேவைப்படுகின்றது. இது சாதிய ஆதிக்கத்தையும் வர்க்கச் சுரண்டலையும் எதிர்த்த போராட்டங்களின் மூலமே கட்டப்படும். சேரவாரும் செகத்தீரே என முழக்கமிடுவதன் மூலம் ஏற்பட்டுவிடாது. இத்தகைய தேசிய இன ஓர்மை ஓரளவு உருவாகிவரும் காலத்தில் உயர் சாதியினரும் ஆதிக்க வர்க்கங்களும் இவற்றைக் கலைத்துவிடவும் இவர்களுக்குள் பகைமையை உருவாக்கவும் ஆன எல்லா முயற்சிகளையும் மிகக் கடுமையாகச் செய்வர். இத்தகைய முயற்சிகளை எதிர்த்த போராட்டங்களின் மூலம் ஒடுக்கப்படும் சாதிகள்/அடிப்படை வர்க்கங்கள் ஆகியவை கொண்ட தேசிய இன ஓர்மை உறுதிப்படும். தமிழர்களின் விடுதலை எனும்பொழுது அடிப்படைத் தமிழர்களின் விடுதலையைப் பிரதானமாகக் கொள்ள வேண்டியுள்ளது. எகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், டில்லித் துணை வல்லரசு ஆகியன தமிழகத்தில் ஆதிக்க வர்க்கங்களின் மூலமாகவும் உயர்சாதிய மனோபாவத்தின் மூலமாகவும் இயங்கிக்கொண்டு ஒடுக்கப்பட்ட சாதிகளையும் அடிப்படை வர்க்கங்களையும் அடிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. எனவே சிறுபான்மைத் தமிழர்களின் மூலமாகப் பெரும்பான்மைத் தமிழர்கள் நசுக்கப்படும் பொழுது பெரும்பான்மைத் தமிழர்களின் விடுதலையை உறுதியோடு முன்வைக்க வேண்டி உள்ளது. இந்தப் போராட்டம் ஆதிக்க வர்க்கமாகவும் உயர் சாதிய மனோபாவச் சக்தியாகவும் உள்ள சிறுபான்மைத் தமிழர்க்கு

எதிரான போராட்டமாகும். இதுவன்றி நாம் எல்லோரும் தமிழர்கள் என நாமமிடுதல் மொழி வழியிலான நியாயமாக மட்டும் இருக்கலாமே தவிர, சமூக விடுதலைக்கான நியாயமாக இருக்காது.

தமிழகம் நீண்ட காலமாகக் குடியேற்றப் பகுதியாக இருந்து வருகிறது. பிற மொழியினர் இங்கு வரலாற்று ரீதியில் தேசியச் சிறுபான்மையினராக உள்ளனர். தெலுங்கர்கள், கன்னடர்கள், மராட்டியர்கள் இங்கு ஆட்சி செய்த காலங்களில் அவர்களில் எல்லாச் சாதியினரும் இங்குக் குடியமர்த்தப்பட்டனர். அவர்கள் இன்னமும் 600 ஆண்டுக் காலமாகப் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து இங்கே குடியிருந்து வருகின்றனர். ஆங்கிலேயரின் வருகையைத் தொடர்ந்து இங்குப் பார்சி, பனியா, மார்வாரி ஆகிய வட இந்திய முதலாளிகள் குடியேறி வருகின்றனர். இவ்வாறு குடியமர்ந்தவர்கள் / குடியமர்த்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு இடையில் வேறுபாடுகள் பல உள்ளன.

600 ஆண்டுகட்கு முன்வந்த கன்னடர், தெலுங்கர் ஆகியோரின் பரம்பரையினர் இன்றைக்குத் தம் சொந்தப் பண்பாட்டு அடையாளங்கள் பலவற்றை இழந்துகொண்டு வருகின்றனர். இன்னமும் சில பகுதிகளில் வழிபடும் தெய்வம், வழிபடுமுறை, சடங்குகள், திருமணமுறை ஆகியனவற்றில் சில தனித்துவப் பண்பாட்டு நெறிகளையும் கொண்டுள்ளனர் என்பதையும் கணக்கிலெடுக்க வேண்டி உள்ளது. இவர்கள் வீட்டில் தம் பரம்பரை மொழியையும் வெளியில் தமிழையும் பேசுபவர்களாக உள்ளனர். இவர்களுக்கு உள்ளேயும் பல மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இவர்களில் தம் பரம்பரை மொழி தெரியாத பிரிவினர் கூட இன்றைக்கு உள்ளனர். நல்ல தமிழ்ப்பற்றாளர்களும் அறிஞர்களும் கூட இவர்களில் உண்டு. இத்தகைய ஒரு மாறுதல் போக்கின் ஊடே இவர்களைக் காணும்பொழுது இவர்கள் இன்னமும் தம் மொழி, பண்பாட்டு நிகழ்வுகள் ஆகியனவற்றை முற்றாகக் கைவிடாத சூழலில் இவர்கள் பொதுநிலையில் இன்னமும் சிறுபான்மைத் தேசிய இனத்தவராகவே கருதப்படும் நிலையுள்ளது. இவர்கள் எல்லோரையும் வந்தேறிகளாகக் காண இயலாது.

வரலாற்றுக் காலந்தொட்டு இங்கு வந்து நம்மை அடக்கி ஏறி ஆண்ட தெலுங்கு, கன்னட மன்னர்கள், நிலப்பிரபுக்கள், இராணுவத் தளபதிகள் இருந்தனர். அதைப்போன்று இவர்களில் இன்றைக்குத் தரகு முதலாளி முதற்கொண்டு கூலி விவசாயி

வரையும் உள்ளனர்; பிராமணரிலிருந்து செருப்பு தைத்து வாழ்க்கையை நடத்த வேண்டிய சக்கிலியர் வரை உள்ளனர். சிறுபான்மைத் தேசிய இனத்தவரிலும் நாம் ஒடுக்கப்பட்ட சாதிகள், அடிப்படை வர்க்கம் ஆகியவற்றின் கண்ணோட்டத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இங்கு இன்னொன்றைக் கவனிக்க வேண்டும். வரலாற்றுக் காலந்தொட்டு இங்கே பரம்பரை பரம்பரையாகக் குடியிருந்து வரும் சிறுபான்மைத் தேசிய இனத்தவர்க்கு - அவர்கள் எந்த வர்க்கம் ஆயினும் எந்தச் சாதி ஆயினும் - இங்கே தங்கியிருக்கக்கூடிய வாழ்வுரிமையை நாம் மதித்தாக வேண்டும். அதே நேரத்தில் சிறுபான்மைத் தேசிய இனத்தின் ஒடுக்கப்பட்ட சாதிகளையும் அடிப்படை வர்க்கத்தையும் கொண்ட சாதிய / வர்க்க ஓர்மை திரட்டப்பட்டாக வேண்டும். இதைச் சிறுபான்மைத் தேசிய இனத்தவருள் உயர் சாதிகளின் ஆதிக்கத்தையும் மேல்நிலை வர்க்கங்களின் சுரண்டலையும் எதிர்த்த போராட்டங்களின் மூலமாகக் கட்ட இயலும். அதாவது சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் வாழ்வுரிமை, மொழியுரிமை ஆகியவற்றை மதிக்க வேண்டிய அதே நேரத்தில், சிறுபான்மைத் தேசிய இனத்துக்குள் காணப்படலாகும் சாதிய ஆதிக்கத்தையும் வர்க்கச் சுரண்டலையும் எதிர்த்த போராட்டங்களின் மூலமாகச் சிறுபான்மைத் தேசிய இனத்தின் ஒடுக்கப்பட்ட சாதிகள், அடிப்படை வர்க்கங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான ஓர்மை உருவாக்கப்படல் வேண்டும்.

இன்றைய போராட்டத்தின் தன்மை சனநாயகத்தன்மை கொண்டது என்ற விதத்தில் தமிழரிலும் பிற மொழியினரிலும் உள்ள உயர் சாதிப் பிறப்பாளர்களில் சனநாயகச் சக்திகளும் புரட்சிகரச் சக்திகளும் இத்தகைய சனநாயகப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள முடியும். இதற்கு உயர்சாதிப் பிறப்பாளர்களின் சனநாயக உணர்வு பல விதங்களில் நடைமுறையில் வெளிப்படுத்தப்பட்டுச் சோதிக்கப்பட்டாக வேண்டும். இவர்கள் தம் உயர்சாதியப் பெருமிதத்தையும் சாதிய உணர்வையும் முற்றாக நீக்கிக் களைந்து கொள்ளவும் தம் வர்க்க வாழ்நிலையைக் களைந்து அடிப்படை வர்க்க வாழ்நிலையையும் சிந்தனையையும் தம் இரத்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

எனவே தமிழ்த் தேசிய இனத்தவரிலும் சிறுபான்மைத் தேசிய இனத்தவரிலும் ஒடுக்கப்பட்ட சாதிகள், அடிப்படை வர்க்கங்கள் ஆகியவை கொண்ட ஓர்மை தேவைப்படுகிறது. இங்குத் தமிழ்த்

தேசிய இன ஒடுக்கப்பட்ட மக்களின் ஓர்மை என்பது பரிமாண வளர்ச்சிபெற்றுத் தமிழக ஒடுக்கப்பட்ட மக்களின் ஓர்மை என்று கட்டப்படலே வரலாற்று நியதியாகும். எனவே தமிழக ஒடுக்கப்பட்ட மக்களின் கண்ணோட்டமே தேவை.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்துதான் எந்தத் தமிழர்க்கான விடுதலை, சிறுபான்மைத் தேசிய இனத்தவர் மீதான நிலைபாடு என்ன என்ற கேள்விகட்கு விடை காண வேண்டும். தமிழக ஒடுக்கப்படும் மக்களின் கண்ணோட்டத்திலிருந்தே திராவிட இயக்கத்தின் சாதக பாதகங்களை வரலாற்று ரீதியில் மதிப்பிட வேண்டும். ஆனால் தோழர் குணா, சாதிகள் / வர்க்கங்கள் கடந்த ஒரு முழுமுற்றான தமிழ்த் தேசிய இன நலக் கண்ணோட்டத் திலிருந்து மதிப்பிட விரும்புகிறார். சாதி, வர்க்கம் ஆகிய அடையாளங்கள் குறித்த கருத்துகளைக் குணா அங்குமிங்கும் குறிப்பிடுகின்றார்; அகச்சுரண்டலும் புறச் சுரண்டலும் அற்ற, வர்க்க வேறுபாடுகள் அற்ற ஒரு சமூகத்தைப் படைப்பதே தமது நோக்கம் எனக் குணா குறிப்பிடுகின்றார். இருப்பினும் மதிப்பீட்டு அளவுகோலாகக் குணா பயன்படுத்தும் கண்ணோட்டம் அவரது விருப்பங்களுக்குத் துணை நிற்காது.

இந்தக் கண்ணோட்டத்தைக் குணா உலகளாவிய பார்வையில் விரிவுபடுத்துதலைக் காண்கிறார். தேசிய இனங்களுக்கு இடையிலான போராட்டங்களின் மூலமே இதுவரையிலான வரலாறு வளர்ந்துள்ளது என்ற நிலைப்பாட்டைக் குணா முன்வைப்பது மிகவும் வியப்பளிக்கிறது (தமிழ்த் தேசிய இனச்சிக்கல் : உலக நம்பிகளின் இயங்காவியல், முன்னுரை). இதுவரையிலான நாகரிகச் சமூகங்களின் வரலாறு, வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டமாக அமைந்துள்ளது என்ற காரல் மார்க்சின் பொதுவுடைமை அறிக்கை நூலின் முதல் வாசகத்துக்கான மாற்றீடு போலக் குணா இத்தகைய வரையறையை முன்வைக்கிறார். இங்கு வர்க்கத்துக்கு இணையாகத் தேசிய இனத்தைக் குணா முன்வைக்கிறார். குணா குறிப்பிடும் இந்த வரையறையைக் கொண்டு எந்தவொரு நாட்டுச் சமூகப் பொருளாதார வரலாற்றையும் அறிவியல் பூர்வமாக விளக்கமுடியாது. மேலும் இது ஒரு தேசிய இனத்துக்குள்ளே இயல்பாக உள்ள அகமுரண்பாடுகளை முற்றாகப் பூசி மெழுகி மறைத்துவிடுகின்றது. இது ஒரு தேசிய இனத்துக்கு வெளியே மட்டுமே அதற்குரிய பகைமுரண்கள் இயங்குவதாகக் காண்கிறது.

இத்தகைய கண்ணோட்டம் வரலாற்று வாதத்தின் அடிப்படையிலும் சாதிய / வர்க்கக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலும் திராவிட இயக்கத்தின் சாதக, பாதகங்களைக் கண்டறிவதற்குத் தடையாக உள்ளது. தமிழக ஒடுக்கப்படும் மக்களின் கண்ணோட்டத்தில் திராவிட இயக்கத்தின் வர்க்க / சாதியச் செயல்பாடுகளையும் தேசிய இன ஆர்வ வெளிப்பாடுகளையும், பல்வேறு காலக்கட்டங்களில் அவை அமைத்த பல பரிமாண நிலைகளையும் அவற்றின் சாதக பாதகங்களையும் கணக்கில் எடுக்க இக்கண்ணோட்டம் மறுக்கின்றது. இவற்றோடு மட்டுமின்றித் தமிழகக் கட்டமைப்பில் குணாவின் கண்ணோட்ட வளர்ச்சியானது, தேசிய இனவெறிக்கான கோட்பாட்டைக் கட்டவிழ்த்து விடும் அபாயத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது. இது இங்கு வரலாற்று ரீதியில் வாழ்க்கை நடத்திக்கொண்டு வரும் பிறமொழியினரின் வாழ்வுரிமையைப் பறிக்க முயல்கிறது. தமிழரிலும் பிற மொழியினரிலும் ஒடுக்கப்பட்ட சாதிகள், அடிப்படை வர்க்கம் ஆகியவற்றுக்கு இடையிலான தமிழக ஒடுக்கப்படும் மக்களின் ஓர்மையைக் கட்டத் தடையாகவுள்ளது. தமிழகத்தில் உள்ள பிறமொழியினரில் ஒடுக்கப்பட்ட சக்திகளையும் அடிப்படை வர்க்கத்தவரையும் அந்த மொழியின் உயர் சாதிகளோடும் ஆதிக்க வர்க்கத்தோடும் இணைப்பதற்குக் குணாவின் கண்ணோட்டம் வழிகோலுகின்றது. இந்த விதத்தில் பிற மொழியினரில் உள்ள தமிழ்த் தேசிய விடுதலைக்கான தோழமைச் சக்திகளைத் தமிழர்களில் உள்ள எதிரிச் சக்திகளோடு சேர்த்துவிடத் துணை செய்வதனாலும் தமிழ்த் தேசிய இனத்தவரில் எதிரிச் சக்திகளை இனங்கண்டு விலக்கிவிடாமற் போவதனாலும் இக்கண்ணோட்டம், தமிழ்த் தேசிய விடுதலைச் சக்திகளின் பலத்தை மிகவும் குன்றச் செய்துவிடுகிறது.

இது மட்டுமல்ல. இவரது கண்ணோட்டம் தமிழகத்தில் உள்ள சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் நலன்களுக்கு எதிராகவுள்ளது. ஆனால் எந்தவொரு தேசிய இனவெறிக் கிளர்ச்சியிலும் சிறுபான்மைத் தேசிய இனத்தவருள் முதற்பலிகளாக அதில் உள்ள பெண்களும் ஏனைய ஒடுக்கப்படும் சக்திகளுமே உள்ளனர் என்பது இந்திய வரலாற்றுண்மை. இவரது கண்ணோட்டத்தை இந்திய அளவில் விரிவுபடுத்திப் பார்த்தால், இந்தியாவின் பல பகுதிகளிச் சிதறுண்டு வாழும் சிறுபான்மைத் தமிழர்களின் - குறிப்பாகத

தமிழ்ப்பெண்டிர் உட்பட ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களுக்கு விரோதமாக இது உள்ளது. குணா கர்நாடகத்தில் வாழ்பவர் என்பதும் கன்னடத் தமிழர்கள் கன்னடத் தேசிய இன வெறியர்களால் சூறையாடப்பட்டுக் கொண்டு வருகிறார்கள் என்பதும் உண்மைகளாகும். இத்தகைய கண்ணோட்டத்துக்கு இத்தகைய சூழல்களால் குணா வர நேர்ந்திருப்பினும், இத்தகைய கண்ணோட்டம் சரியான தீர்வு அல்ல. மராட்டியப் பால்தாக்கரே, கன்னட வட்டல் நாகராஜ், தமிழ்நாட்டு நகைமுகன் ஆகியோரின் பதிப்புக்களாகக் குணா நழுவி விழுந்துவிடக்கூடிய சந்தர்ப்பங்களிலிருந்து அவர் தற்காத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

எல்லாத் தேசிய இனத்தின் மத்தியத் தர வர்க்கத்தின் ஒரு பிரிவிடம் இத்தகைய குறுகுறுப்பு உண்டு. தம் தேசிய இனப் பிரதேசத்தில் உள்ள பிற மொழியினரின் வாழ்வும் வளர்ச்சியுமே தமது பிரச்சினைகளுக்கு எல்லாம் காரணம் என்று நினைக்கும் ஒரு குறுகுறுப்பு உண்டு. மத்தியத் தர வர்க்கம் தமக்கு உகந்த விதத்தில் சிக்கல்களை அணுகுகின்றது. கல்விவாய்ப்பு, வேலைவாய்ப்பு, பொருளாதாரப் பற்றாக்குறை ஆகிய சிக்கல்கள், பிற மொழியினரை வெளியேற்றுவதனால் மட்டுமே தீர்க்கப்படும் என எளிதாக மத்தியத் தர வர்க்கம் நினைக்கிறது. இத்தகைய குறுகுறுப்புகளை ஆளும் வர்க்கம் தம் நலன் நோக்கில் பயன்படுத்திக் கொள்ளவும் வாய்ப்புகள் உண்டு. தேசிய இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்துவதன் மூலமும் அல்லது ஏற்பட்ட மோதல்களைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும் ஆளும் வர்க்கம் தம் நலன்களைப் பாதுகாத்துக் கொள்கிறது. இத்தகைய வாய்ப்புகள் இதுவரை இருந்ததைப் போலவே இனிமேலும் ஏற்படவிருக்கும் சாத்தியத்தையும் நிராகரிக்க இயலாது. ஆளும் வர்க்கம் தேசிய இனங்களை வலுக்கட்டாயமாக ஒன்றிணைத்துத் தேசிய ஒற்றுமை பேணுதலை ஒரு செயல் தந்திரமாகக் கொண்டு இருத்தலைப் போலவே, தேசிய இனங்களிடையே மோதலையும் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை வளர்த்துச் சென்று தேசிய இனங்களிடையே பகைமையை ஏற்படுத்துதலையும் ஒரு செயல் தந்திரமாகக் கொண்டு இயங்குகிறது. இத்தகைய ஆளும் வர்க்கத்தின் செயல் தந்திரத்துக்கு மத்தியத் தர வர்க்கத்தின் குறுகுறுப்பு பல அடித்தளங்களுள் ஒன்றாக இருக்கிறது.

குணாவின் கண்ணோட்டத்தில் உள்ளார்ந்து மறைந்து கிடக்கும் இத்தகைய குறுகுறுப்பு பாசிசக் கோட்பாட்டுக்குரிய

அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்கிறது. சனநாயகச் சாராம்சம் கொண்ட தேசிய விடுதலைக்குரிய அரசியலிலிருந்து அதன் சனநாயக உள்ளடக்கத்தைக் கிள்ளி எறிந்தால் அது பாசிசப் பாதையிலேதான் போய் முடிய நேரிடும்.

இவரது கண்ணோட்டம் வந்தேறிகளை மட்டுமே காண்கிறது. இங்கு வந்து ஏறி மேயாமல், இங்குக் குடியமர்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதிகளைக் காண மறுக்கிறது. மேலும் இக்கண்ணோட்டம் பூர்வீக ஏறிகளைக் காண மறுக்கிறது.

வந்தேறிகளாயினும் பூர்வீக ஏறிகளாயினும் இரண்டு தரப்புகளிலும் உள்ள ஆதிக்கச் சக்திகளைத் தமிழக மக்கள் மீது ஏறி மேய்ப்பவர்களாகக் காண வேண்டும். வந்தேறிகளையும் பூர்வீக ஏறிகளையும் தமிழக ஒடுக்கப்படும் மக்களின் கண்ணோட்டத்தில் காண வேண்டும். திராவிட இயக்கம் குறித்து அத்தகைய கண்ணோட்டத்தில் ஒரு மதிப்பீடு செய்தல் தேவை.

★

# குணா : பாசிசத்தின் தமிழ் வடிவம்

(குணாவை முன்வைத்துத் தமிழக வரலாறு பற்றிச் சில குறிப்புகள்)

அ. மார்க்ஸ்

## முன்னுரையாக

திரு. குணாவின் திராவிடத்தால் வீழ்ந்தோம் எனும் சிறு வெளியீடு தமிழ்ச் சூழலில் குறிப்பிடத்தக்க அளவிற்கு விவாதம் ஏற்படக் காரணமாகியிருக்கிறது. கிணற்றில் போடப்பட்ட கல்லாகக் கருத்துகள் முடக்கப்படும் சூழலில் இவ்வாறு விவாதம் எற்பட்டுள்ளது வரவேற்கத் தக்கதே. பெரியாராயினும் சரி, திராவிட இயக்கமாயினும் சரி பல்வேறு பார்வைகளுக்கும் விமரிசனங்களுக்கும் வாசிப்புகளுக்கும் உட்படுத்தப்பட வேண்டும் என்பதில் நமக்குக் கருத்து மாறுபாடில்லை. ஆனால் குணாவின் இந்த வாசிப்பு பாசிசத்திற்கு இட்டுச் செல்லும் ஆபத்தைக் கருவாய்க் கொண்டுள்ளது என நான் உறுதியாக நம்புகின்றேன். குணாவின் இந்த வாசிப்பின் பின்புலமாக உள்ள அரசியலைக் கட்டுடைத்து வெளிக்கொணரும் நோக்குடன் இக் கட்டுரையை ஆக்கியுள்ளேன். எனினும் இது வெறும் குணா மீதான விமர்சனமாக மட்டுமின்றித் தமிழக வரலாறு குறித்த சில முக்கியமான குறிப்புகளை முன் வைப்பதாகவும் உள்ளது. பெரியார் மீது குணா வைத்துள்ள விமர்சனங்கள் பற்றிப் பலரும் எழுதியுள்ளனர். எனது நோக்கம் அதுவல்ல. எனினும் ஒன்றை மட்டும் நினைவூட்ட விரும்புகின்றேன். நீதிக் கட்சி தொடங்கி இன்றைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகங்கள் வரையிலான திராவிட இயக்கப் பாரம்பரியத்தின் பொதுப் போக்குகள் பலவற்றிலிருந்து பெரியார் விலகி நிற்கிறார். எடுத்துக்காட்டாகக் கடவுள் மறுப்பு. அவருக்கு முன்னும் பின்னும் வேறெந்தத் திராவிட இயக்கத்தவரும் கடவுளை மறுத்ததில்லை. எனவே பொதுப்போக்கின் சீரழிவைக் காரணம் காட்டி அந்த அடிப்படையில் பெரியாரை விமர்சனம் செய்வதில் பொருளில்லை. இன்றளவும் இந்துத்துவச் சக்திகளால் கையிலெடுத்துப் பயன்படுத்த முடியாத நெருப்புத் துண்டமாக அவர் மட்டுமே விளங்குவதன் காரணத்தை நாம் யோசிக்க வேண்டும். இந்தக் கட்டுரை மீதான மாற்றுக் கருத்துகளை வரவேற்கின்றேன். இதனைப் படிக்கக் கையிலெடுத்த உங்களுக்கு நன்றிகளைச் சொல்லிக் கொள்கின்றேன்.

தஞ்சாவூர்

*15.02.96*

**அ. மார்க்ஸ்**

# குணா : பாசிசத்தின் தமிழ் வடிவம்

பெங்களூரிலுள்ள தமிழக ஆய்வரண் என்னும் அமைப்பைச் சேர்ந்த குணா எனப்படும் எஸ். குணசீலனால் எழுதப்பட்டுள்ள சமீபத்திய குறுநூல்கள் சிலவும் கட்டுரைகளும் அவரே எதிர்பார்த்தது போல "நல்ல தூசியைக் கிளப்பியிருக்கின்றன." தமிழ்த் தேசிய இயக்கங்களில் சில இவரது கருத்துக்களை ஆதரித்துள்ளன. இன்னுஞ் சில கருத்தொன்றும் சொல்லாமல் கள்ள மவுனம் சாதிக்கின்றன. திராவிட இயக்கங்களின் சீரழிவுகளாலும் பொதுவுடைமை இயக்கங்களுக்கு உலகெங்கிலும் ஏற்பட்டுள்ள சரிவுகளினாலும் சலிப்புற்றுக் கிடந்த தமிழ் இளைஞர்கள் சிலரின் மனத்தில் குணாவின் கருத்துக்கள் சற்று மயக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளன. "தமிழரின் நலன் கருதிச் செய்யப்பட்ட வரலாற்றுப் பணி" எனவும் "பத்தாண்டுகளுக்குக் கடுமையாக உழைத்துத் தமிழரினப் பார்வையில் தமிழரின் வரலாற்றை'' எழுதுவதென முடிவெடுத்திருந்த நிலையில் எழுதப்பட்ட நூல் எனவும் முன் வைக்கப்படும் சுய தம்பட்டங்கள், "அறிஞர் குணா'' என்னும் தமிழக வெகுசன அரசியலுக்கே உரித்தான தற்புகழ்ச்சி மொழிகள் (திராவிடத்தால் வீழ்ந்தோம் முன்னுரை மற்றும் பதிப்புரைகள்) ஆகியவற்றுடன் வெளியிடப்பட்டுள்ள இவ் எழுத்துக்களை விரிவாகப் பகுத்தாராய வேண்டியது தமிழ்ச் சூழலில் அக்கறையுடையவர்கள் என்கிற வகையில் நமக்கு அவசியமாகிறது. இந்த நோககில் இங்கே விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் குணாவின் குறுநூல்கள் மற்றும் கட்டுரைகளாவன:

(1) திராவிடத்தால் வீழ்ந்தோம் (தி.வீ.), தமிழக ஆய்வரண், 1995.

(2) தமிழர் வரலாறு (த.வ.), தமிழக ஆய்வரண், 1995.

(3) கிறித்துவத்தின் உள்ளீடு தேசிய விடுதலை இறையியலே (கி.உ.), செம்மணிப் பதிப்பகம், 1994.

(4) ஈழ வழியா? இந்திய வழியா?, பஃறுளி பதிப்பகம், 1994.

(5) எரிமலை வாயின் மேல் இந்து மதம், பஃறுளி பதிப்பகம், 1994.

(6) தமிழ் இன மாணவர் முழக்கம் (த.இ.மா.மு) இதழ்களில் (1994-95) வந்த கட்டுரைகள்.

# ஒன்று

## குணா சொல்வதென்ன?

மேற்குறிப்பிட்ட எழுத்துக்களின் வாயிலாகக் குணா முன் வைக்கும் கருத்துக்களைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. மண்ணையும் மானத்தையும் இழந்து அவல நிலையில் அமிழ்ந்து கிடக்கிறது தமிழரினம்.
2. திராவிடர் (குறிப்பாகக் கன்னடர் மற்றும் தெலுங்கர்) படை எடுப்புக்களே தமிழரினத்தின் அவலங்களுக்கான தலையாய காரணங்கள்.
3. அரை நூற்றாண்டுகளாகத் தமிழகத்தை ஆட்கொண்டு நின்ற திராவிடக் கொள்கையியலே தமிழரினம் மேன்மேலும் கெட்டமைக்கான பெரிய காரணம்.
4. பிறப்பால் கன்னடரான ஈ.வெ.ரா. பெரியார் தமிழின ஓர்மை தலை எடுக்காமல் அடுத்துக் கெடுத்தவர்; தமிழையும் தமிழரையும் இழிவு செய்தவர்; தமிழினத் துரோகத்திற்காக மார்வாரிகளிடம் கூலி வாங்கியவர்.

இவ்வாறு தமிழின இழிவின் பிரதானக் காரணமாகத் திராவிட அரசியலைக் குறிப்பிடும் குணா, தமிழின ஓர்மையை வழிவிலக்கம் செய்யக்கூடிய இதர துணைக் காரணர்களாகச் சுட்டிக் காட்டும் மற்ற அரசியல் போக்குகளுக்குரியவர்கள்:

1. பார்ப்பனியத்தின் அய்ந்தாம் படையாகச் செயற்பட்டு வந்த தமிழகப் பொதுவுடைமை அணியினர். மா.லெ. குழுவினரும் இதில் அடக்கம். இக்குழுக்களின் தலைமையிலுங்கூடத் தெலுங்கரும் மலையாளிகளுமே கொலுவிருக் கின்றனர். தம் இன நலன்களே இவர்களுக்கு முக்கியம். வருக்கம் பற்றி இவர்கள் பேசுவதெல்லாம் பித்தலாட்டமே.
2. பொதுவுடைமை மரபிலிருந்து கிளைத்துப் பின்னர் அய்ரோப்பிய முதலாளியக் குப்பைகளில் முளைத்த இருத்தலியல் (Existentialism), வடிவவியல் (Structuralism) போன்ற கழிசடைகளால் ஈர்க்கப்பெற்ற உதிரி அறிவாளிகள்.

3. மராட்டியராம் அம்பேத்கரைப் பெரிய தெய்வமாக்கிச் சிலைகளை வடித்து நிறுத்துவதால் வரும் சாதிச் சண்டைகளில் சிக்கிக்கொண்டு நிற்கும் தலித் அரசியலார். சலுகைக்காக அனைத்திந்தியச் சாதியாவதில் ஆர்வம் காட்டுபவர்கள் இவர்கள்.

4. இட ஒதுக்கீட்டு அரசியலை முன் நிறுத்துவோர்.

இப்படித் தமிழின இழிவின் காரணங்களைப் பட்டியலிடும் குணா இத்தகைய இழிவுகளிலிருந்தும் தமிழரினம் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளி லிருந்தும் விடுதலை பெறுவதற்கான மூல முதற் காரணியாகச் சுட்டிக் காட்டுவது:

> தமிழ்த் தேசியமே தமிழரினத்தின் அகப் பகைகளை அறிந்து அவற்றை வென்று, புறப்பகையையும் புறமுதுகு காட்டி ஓடச் செய்ய வல்ல உயிராற்றல்...... அனைத்துவகை அடிமைத் தனங்களையும் ஒழிப்பதற்கான திறவுகோல்.

அனைத்துவகை இழிவுகளையும் ஓட்டுவதற்கான மந்திரக் கோலாகத் தமிழ்த் தேசியத்தை முன் வைக்கும் குணா, அத் தேசிய உணர்வைத் தமிழினத்திற்கு ஊட்டுவதற்கான முக்கிய முதற் பணியாகக் கருதுவது தமிழரின நோக்கிலான தமிழர் வரலாற்றை எழுதுவது. சொந்த வரலாறு தெரியாத தேசிய இனத்திற்கு விடுதலை இல்லை என முழங்கித் தொடங்கும் அவர் இந்த நோக்கில் வைக்கும் தமிழர் வரலாற்றின் முக்கிய அம்சங்களாவன:

1. பாவாணரின் குமரிக் கண்டக் கோட்பாடே சரியானது. குரங்கிலிருந்து தோன்றிய முதல் மனிதன் லெமூரியாவில் தான் தோன்றினான். நாகரீகம் தெற்கேயிருந்து வடக்கே சென்றதேயொழிய வடக்கேயிருந்து தெற்கே வரவில்லை. இன்றைய தமிழ்ப் பண்பாடே உலகின் தாய்ப்பண்பாடு.

2. தமிழர் உருவாக்கிய காணியாட்சி முறை, நாட்டு நிர்வாக முறை முதலியன தமிழ் நாகரீகத்தின் சிறப்பு மிக்க வெளிப்பாடுகள் ஆகும்.

3. பார்ப்பனீயம் தெற்கில் தோன்றியது. ஆரியம் வேறு பார்ப்பனீயம் வேறு.

4. சைனமும் புத்தமும் ஆரியச் சமய நெறிகள். இவைகளே தமிழ் மெய்யியலை அழித்தன. ஆரியப் பண்பாட்டுப் படை எடுப்பு சைனம், புத்தம் ஆகிய ஆரியச் சமய நெறிகள் மூலமாகவே நடைபெற்றன.

5. சைவமும் வைணவமும் இணைந்து உருவாக்கிய பக்தி இயக்கம் சைனத்தையும் பவுத்தத்தையும் தமிழகத்திலிருந்து ஓட ஓட விரட்டியடித்தன. தமிழுணர்வு பெருக்கெடுத்தோடிய காலம் பக்தி இயக்கக் காலம்.
6. குலோத்துங்கனில் தொடங்கிய தெலுங்க ராட்சிகளே தீண்டாமையை உருவாக்கின. சாதிப் பிரிவினைகளை உருவாக்கித் தமிழினத் தைக் கூறு போட்டவர்கள் நாயக்க மன்னர்கள். மனு ஒரு தெலுங்கன். மனுநீதியைத் தமிழகத்தில் கொணர்ந்தது குலோத்துங்கன் முதலாய தெலுங்கரே. வலங்கை - இடங்கைச் சாதிப் போராட்டங்களை உருவாக்கித் தமிழர்களுக்குள் மோதலை உருவாக்கியவரும் தெலுங்கரே.
7. தமிழகத்தின் மீதான முதல் படையெடுப்பை நிகழ்த்தியவர்கள் களப்பிரர்கள்.

குணா முதன்மைப்படுத்தும் "தமிழரின நோக்கிலான" வரலாற்றின் பிரதானக் கூறுகள் இவைதான். இந்த வகையில் அவர் ஒரு தமிழ்ப் பொற்காலப் பாரம்பரியத்தைக் கட்டமைக்கிறார். **அது:**

குமரிக் கண்ட நாகரீகம் - சங்கக் காலம் - பக்தி இயக்கம்- பல்லவ - சோழ - பாண்டிய ஒருங்கிணைப்பு - காணியாட்சி நிலவுடைமை முறையும் 'நாடு' வடிவிலான நிர்வாக முறையும்.

தமிழர் வரலாற்றின் இருண்ட காலப் பாரம்பரியமாக அவர் கருதுவது:

சைன, பவுத்த ஊடுருவல் - களப்பிரர் காலம் - குலோத்துங்கன் தொடங்கிய தெலுங்கராட்சி - திராவிட இயக்க வளர்ச்சி.

இறுதியாகக் குணா மற்றும் அவரது வழியினர் முன்வைக்கும் இதர கருத்துக்கள்:

1. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் நல்ல மரபையும் ஒழுக்கத்தையும் நாசமாக்கியவர்கள் திராவிட இயக்கத்தவர். தனியாள் ஒழுக்கத்தைக் குப்பையில் எறிந்தவர்கள் இவர்கள். பொதுவாழ்க்கையை உதிரிமயமாக்கியவர்கள்.

2. வட்டார வழக்காக விளங்கும் கொடுந்தமிழ் வடிவங்களைத் தரப்படுத்தக் கூடாது. உதிரிப் பாட்டாளி நடைக்குத் தமிழைத் தாழ்த்திக் கெடுக்கக் கூடாது. இலக்கணமே வேண்டாமெனச் சொல்லிக் குலைப்பு (Anarchism) வேலையைச் செய்யும் உதிரிப் போக்குகளையும் இப்பியிசத்தையும் (Hippism) அனுமதிக்கக் கூடாது.
3. வேற்று மொழியினரான இலம்பாடிகள், நரிக்குறவர்கள், சக்கிலியர் போன்றோருக்கு இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது.

குணா முன் வைக்கும் மையமான கருத்துக்கள் இவைதான். இவை தவிர வேறு சில கருத்துக்களையும் கூட ஆங்காங்கு அவர் உதிர்த்துச் சென்றாலும் அவற்றை ஒப்புக்குத்தான் சொல்வாரேயொழிய முதன்மைப் படுத்துவதில்லை. எடுத்துக்காட்டாகத் தமிழரினப் பகைகளில் பார்ப்பனியமும் ஒன்று என ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். ஆனால் அதை அவர் தொடர்ந்து வற்புறுத்துவதில்லை. தவிரவும் பார்ப்பனியத்தைத் தமிழ்ப் பார்ப்பனியம் எனவும் தெலுங்கு/கன்னடப் பார்ப்பனியம் எனவும் பிரித்துத் தமிழ்ப் பார்ப்பனியத்தை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டவும் செய்கிறார். எனவே ஒட்டு மொத்தமாய்ப் பார்க்கும்போது பார்ப்பனியம் என்பதை அவர் தமிழின வீழ்ச்சியின் காரணமாகக் கருதவில்லை என்பது தெளிவாகும்.

## இரண்டு

## குணாவின் ஆய்வு முறை

கூடியவரை குணாவின் சொற்களிலேயே அவரது முக்கியமான கருத்துக்கள் மேலே தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பகுத்தாய்வதற்கு முன் குணாவின் ஆய்வுமுறை பற்றிச் சில குறிப்புக்களை நாம் பகிர்ந்து கொள்வது அவசியம்.

*1. ஆதாரங்களின்மை :* சம காலத்தில் வரலாற்றாசிரியர்கள், கல்வியாளர்கள், அகழ்வாய்வாளர்கள் போன்ற சகல தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்கள் என்பதற்காக நாமும் அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற அவசியமில்லை. ஒரு மாற்று வரலாற்றை எழுத முயலும் நாம் அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு அதிரடியாகப் புதிய

கருத்துக்களைச் சொல்வதில் தவறில்லை. ஆனால் அப்படிச் செய்யும்போது நமது கருத்தை நிறுவுவதற்குரிய ஆதாரங்கள், தர்க்கங்கள், நியாயங்கள் ஆகியவற்றைத் தெளிவாக நாம் வைக்க வேண்டும். கடின உழைப்பையும் சிரத்தையையும் கோரும் பணி இது. ஆனால் குணா முன்வைக்கிற எந்த அதிரடியான கருத்திற்கும் அவர் உரிய ஆதாரங்கள் எதையும் தருவதில்லை. வெறும் ஊகமாக எதையாவது சொல்லிவிட்டுப் பின்பு அதையே ஆதாரமாக்கிப் ''புதிய புதிய'' சிந்தனைகளை(!) உதிர்த்துக் கொண்டே போவதென்பது அவரது ஆய்வு முறையாக உள்ளது. இதன் மூலம் அவர் வாசகர்களைச் சுயச் சிந்தனையற்ற மூடர்களாகக் கருதுவது ஒரு புறமிருக்க ஆய்வுத்துறைக்குரிய மிகவும் அடிப்படையான சனநாயக நெறிமுறைகளையெல்லாம் அவர் காற்றில் பறக்க விடுவது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக,

> "மோரியப் பேரரசை நிறுவிட உதவிய சூழ்ச்சியில் வல்ல சாணக்கியனே ஒரு காஞ்சிபுரத்துத் தமிழ்ப் பார்ப்பான்தானாம்!"

என்பது குணாவின் கூற்று (த.வ. 23). மௌரியப் பேரரசனாகிய சந்திரகுப்தனின் காலத்தவன் சாணக்கியன். "அர்த்த சாஸ்திரம்" என்னும் பொருளியல் நூலை எழுதியவன். இவனைக் காஞ்சிப் பார்ப்பான் என அதிரடியாகச் சொல்லும்போது அதற்குரிய ஆதாரத்தைத் தர வேண்டாமா? முற்றிலும் ஆதாரங்கள் எதுவுமில்லாமல் அவர் முன்வைக்கும் வேறு சில கூற்றுக்கள்;

> "(தமிழ் நிலவுடைமையில்) சாதிக் கொடுமையைப் பொறுக்க முடியாத போதெல்லாம் ஊரைவிட்டே போய்விடுகிற மரபுரிமை பள்ளருக்கும் பறையருக்கும் இருந்தது" (இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும், 43).

> ''வலங்கைச் சாதியினரென்றும் இடங்கைச் சாதியினரென்றும் பிரித்துத் தமிழரினத்தையே கூறுபோட்டுக் களமாட முதலாம் குலோத்துங்கனாகிய கன்னடத் தெலுங்கனே வழி வகுத்திருக்க வேண்டும்" (தி.வீ. 6).

> "திண்டாமை, காணாமை என்றெல்லாம் பழந்தமிழர் மீது பொல்லாச் சாதி ஒழுகலாறுகளைத் திணித்துச் சாதி அடிமைமுறைக்கு எக்காளம் ஊதிய கொடிய சுரண்டலரின் ஆட்சியே கன்னடத் தெலுங்கு வந்தேறி நாயக்கர் ஆட்சி. பார்ப்பனீயத்தை உச்சி முகந்து போற்றியது அந் நாயக்கர் ஆட்சி" (தி.வீ. 7).

இவை எதற்குமே எவ்வித ஆதாரங்களும் சொல்லப்படவில்லை தீண்டாமைக்குக் காரணம் பார்ப்பனீயமோ இந்துத்துவமோ அல்ல. தெலுங்கரே காரணம் என்கிற கருத்தைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார். இந்தியத் துணைக் கண்டத்திலும் தென்னிந்தியத் தீபகற்பத்திலும் வர்ணம், சாதி, தீண்டாமை முதலியன தோன்றியமை குறித்துக் கருத்துக்கள் சொல்லாத வரலாற்றறிஞர்களே இல்லை. தேவராஜ் சனானா (Slavery in Ancient India), அனுமந்தன் (Untouchability) முதலியோர் தீண்டாமை குறித்து விரிவான ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளனர். இவர்களில் யாருமே நாயக்கர்கள் காலத்தில்தான் தீண்டாமை தோன்றியது எனச் சொன்னதில்லை. பின் வேதக்காலக் கங்கைச் சமவெளியிலும் சங்கக் காலத் தமிழகத்திலும் தீண்டாமைக்கான ஆதி முன் மாதிரிகள் (Prototypes) இருந்தன என்பதற்கு ஆதாரமுண்டு. எடுத்துக்காட்டாக புறநானூற்றில் 52, 68, 170, 259, 269, 285, 287, 289, 311, 335, 360 ஆகிய எண்ணுள்ள பாடல்களில் பறையர், பறை அடித்தல், துடி அடித்தல், புலையர், இழிசினர் பற்றிய குறிப்புகள் உள்ளன.

"இழி பிறப்பாளன் கடுங்கை சிவப்ப . . . ."

"மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே . . .".

''துடி எறியும் புலைய! எறிகோல் கொள்ளும் இழிசின ..."

"கட்டில் நிணக்கும் இழிசினன் கையது . . . ."

என்றெல்லாம் புறநானூற்றில் இழிவாய்க் குறிப்பிடப்படும் இழிபிறப்பாளர் யார்? அவர்கள் எக்காலத்தில் இழிசினர்கள் ஆக்கப்பட்டார்கள்? இழிசினர் மொழி இலக்கணத்திற்கு ஒவ்வாது என ஒதுக்கப்பட்டது எப்போது? ''புலையன் மேவப் புல்மேல் அமர்ந்துண்டு . . . ." எனும் புறநானூற்று வரிகள் படம் பிடித்துக் காட்டும் இடுகாட்டுச் சடங்குகளைச் செய்யும் ''புலையன்'' என்பது யாரை? தொல்குடிப் பாணர்கள் தீண்டாமைக் குள்ளாக்கப்பட்டதைத் திருப்பாணாழ்வார் வரலாறு சுட்டிக் காட்டவில்லையா? பழம் பெரும் பறைக்குடியைச் சேர்ந்த நந்தன் தீண்டாமைக் குள்ளாக்கப்பட்டு எரித்தொழிக்கப்பட்டது தெலுங்கனின் காலத்திலா? நந்தனும் திருப்பாணாழ்வாரும் வாழ்ந்து அவலங்களை எதிர்கொண்டது "பல்லவ - சோழப் பொற்காலத்தில்'' இல்லையா? என்ன சொல்கிறார் குணா? தமிழனின் காதில் எந்தப் பூவை வேண்டுமானாலும் சுற்றி வேடிக்கை பார்க்கலாம் என்கிற ஆணவமா?

தமிழர்கள் மத்தியில் சாதிப் பிரிவினையை ஏற்படுத்திக் கூறு போடுவதற்காகவே வலங்கை - இடங்கைப் பிரிவினையைக் குலோத்துங்கன் உருவாக்கினான் என்பது இதைவிடப் பெரிய அபத்தம். இதைச் சற்று விரிவாய்ப் பின்னர்ப் பார்ப்போம். இது போல ஏராளமான எடுத்துக்காட்டுகளைக் குணாவில் சுட்ட முடியும். பல்லவர்களைத் தமிழர் என்பார் ஓரிடத்தில் (த.வ. 34) கருணாநிதியை வேற்றினத்தைச் சேர்ந்தவர் என்பார் பிறிதோரிடத்தில் (தி.வீ. 65). எதற்கும் ஆதாரமிருக்காது! விளக்கமுமிருக்காது! தம் புத்தகத்தை விரிக்கும் தம்பிகள் இதையெல்லாம் கண்டுகொள்ள மாட்டார்கள் என்கிற தைரியம் குணாவுக்கு.

## 2. வலுவற்ற ஆசட்டு ஆதாரங்களை முன் வைத்தல்:

குணா வைக்கக்கூடிய ஒன்றிரண்டு ஆதாரங்களும் மிகப் பலவீனமானவை. பல கேலிக்குரியவை. எடுத்துக்காட்டாகப் பெரியார் மார்வாரிகளிடம் பணம் பெற்றுக்கொண்டு தமிழினத்திற்குத் துரோகமிழைத்தார் (தி.வீ. 14) என்கிற குற்றச்சாட்டை எடுத்துக் கொள்வோம். இதற்கு அடிக்குறிப்பு எல்லாம் போட்டுப் பிரமாதமாக ஒரு ஆதாரத்தை முன் வைக்கிறார். அதிர்ச்சியடையும் நாம் அவசர அவசரமாகப் புரட்டிப் பார்த்தால் மேலும் ஒரு அதிர்ச்சி நமக்குக் காத்திருக்கிறது. குமரிமைந்தன் எழுதிய 'தமிழ்த் தேசியம்' என்கிற கட்டுரைதான் குணாவின் அடிப்படை ஆதாரம் (தி.வீ. 79). குமரிமைந்தன் இவரது நண்பர். இவருடன் ஒத்த கருத்துடையவர். நண்பர்களை ஆதாரமாகக் காட்டக்கூடாது என்பதில்லை. காட்டலாம், அந்த நண்பரின் ஆய்வு ஆதாரப்பூர்வமாய் அய்யத்திற்கிடமின்றி நிறுவப்பட்டிருக்கும் பட்சத்தில். குமரிமைந்தனின் கட்டுரையைப் புரட்டிப் பார்த்தால் அது எவ்வித ஆதாரமும் காட்டப்படாத முற்றிலும் நேர்மையற்ற அவதூறு என்பது புலப்பட்டுவிடுகிறது. பெரியார் "தம் வாழ்நாளில் ஈட்டிய 125 கோடிப் பணம் நேர்மையாய்ச் சேர்த்த பணமாக இருக்க முடியும்" எனக் குமரிமைந்தனால் 'நம்ப முடியவில்லை' யாம். எனவே "பெரியாருக்கும் மார்வாரிகளுக்கும் இடையில் ஒரு மறைமுகத் தொடர்பு இருந்திருக்குமோ என்ற அய்யம் எழுவதைத் தடுக்க முடியவில்லை"யாம். இறுதி மூச்சுவரை தமிழக மக்கள் மத்தியில் பார்ப்பனீயத்திற் கெதிராகச் செயல்பட்டு ஓய்ந்த பெரியாரின் மீது அவரது பரம எதிரிகளான பார்ப்பனீயச் சக்திகளே கூட முன் வைக்காத ஒரு இழிந்த குற்றச்சாட்டைக் குணாவும் அவரது மைந்தனும் கூசாமல் முன் வைத்துவிடுகின்றனர். தமிழ்ச் சூழலில் எதை வேண்டுமானாலும் கொளுத்திப் போட்டுவிட்டுப்

போய்விடலாம் என்கிற இறுமாப்பு தவிர வேறென்ன நியாயம் இதற்குச் சொல்ல முடியும்? குணாவுக்குக் குமரிமைந்தன் ஆதாரம். குமரிமைந்தனுக்குப் பேயன். பேயனுக்குக் குணா. எப்படி இருக்கிறது இவர்கள் அடிக்கும் லூட்டி? “பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாண்டானாம்” என என் அப்பாயி ஒரு பழமொழி சொல்வார். தட்டிக் கேட்க ஆளில்லை என்று நினைத்துக் கொண்ட இந்தத் தம்பிகள் செய்கிற சண்டப்பிரசண்டங்களை நாம் என்னென்பது!

குமரிக்கண்டம், திராவிட இனத் தோற்றம், திராவிட நாகரீகப் பரவல் போன்றவை குறித்த கருத்தாக்கங்களுக்கு ஆதரவாகக் குணா சுட்டிக்காட்டும் மூலாதார நூற்கள் எழுதப்பட்ட காலங்களைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். இன்றைய அளவு தரவுகளும், விவரங்களும் ஆய்வு முடிவுகளும் சேர்ந்திராத பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகவே அவற்றில் பெரும்பாலானவை இருக்கும். இவர் குறிப்பிடும் ஆதாரங்கள் எவற்றையும் நவீனச் சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், வரலாற்றாசிரியர்கள், அடித்தட்டு மக்கள் நோக்கில் சிந்திக்கும் அறிவுத் தொழிலாளிகள் எவரும் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை பல பழம் தமிழ் நூற்கள் கண்டெடுக்கப்பட்டதில்லை. கரியம் சோதனைகளின் (Carbon 14) மூலம் துல்லியமான தேதி நிர்ணயம் செய்யப்பட்டதில்லை. சிந்துவெளி உட்படப் பல அகழ்வாய்வுகள் செய்யப்பட்டதில்லை. இன்று இவ்வாறு கிடைத்துள்ள ஆதாரங்களின் அடிப்படையில் மானுட வரலாறு குறித்த பல்வேறு புதிய வெளிச்சங்கள் கிடைத்துள்ளன. பழைய கருத்துக்கள் பல தகர்ந்துள்ளன. ஒரு கருத்து தகர்க்கப்பட்டுப் புதிய கருத்துக்கள் முன் வைக்கப்பட்ட பின்பு மீண்டும் பழைய கருத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டுமானால் அதற்கான நியாயங்களை நாம் சொல்லியாக வேண்டும். எந்த நியாயத்தையும் முன் வைக்காமல் பழைய குருடி கதவைத் திறடி எனப் பேசிக்கொண்டே போவதென்பது அடிப்படையான சனநாயக நெறிமுறைகளை மறுக்கிற பாசிசப் போக்கு. எடுத்துக்காட்டாக ஒன்றைப் பார்ப்போம். திராவிட நாகரீகம் தெற்கேயிருந்து வடக்கே பரவியது என்கிற கருத்திற்கு ஆதரவாகக் குணா அடிக்கடி ஆதாரம் காட்டும் நூல் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் எழுதிய ‘வரலாற்றுக்கு முந்திய தென்னிந்தியா’ (தி.வீ. 47, 48, 49). இந்த இராமச்சந்திர தீட்சிதர் பற்றி நவீனத் தமிழ் வரலாற்றாசிரியரும் அகழ்வாய்வறிஞருமான பேராசிரியர் சுப்பராயலு தமிழ்ப் பல்கலைக் கழகப் பதவி ஏற்ற உரையின் போது,

> தமிழ் நாட்டின் அகழ்வாய்வுகள் குறித்த தொடக்கக் கால நூலை எழுதியவர் பி.டி. சீனிவாச அய்யங்கார் (1926). இத்தகைய நூல்கள் எழுதப்படும்போது இந்தியாவின் வரலாற்றுக்கு முந்திய காலம் பற்றிய காத்திரமான ஆய்வுகள் தோன்றியிருக்கவில்லை. ஆனால் காத்திரமான ஆய்வுகள் வந்தபின்னும்கூடக் காலாவதியாகிப் போன கருத்துக்களைத் தாங்கியுள்ள சில நூற்கள் வெளியிடப்படுவது தொடர்கிறது. எடுத்துக்காட்டாக வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதரின் 'வரலாற்றுக்கு முந்திய தென்னிந்தியா' என்கிற நூலைச் சொல்லலாம்.

எனக் கூறியுள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அய்யத்துக்குரிய ஆதாரங்கள், புதிய ஆய்வுகள் மற்றும் அகழ்வுகள் மூலமாகக் காலாவதியாகிப் போன ''உண்மைகள்'' ஆகியவற்றினடிப்படையில் ''வரலாறு'' எழுதுவதென்பதில் குணா தனித்தமிழ் இயக்கத்தின் உண்மையான வாரிசாய்த் திகழ்கிறார். பாவாணர் உட்படத் தனித்தமிழ் இயக்க முன்னோடிகள் பலரும் இப்போக்கினைக் கடைப்பிடித்து வந்துள்ளனர்.

பாவாணரின் கோட்பாடுகளை நிலைநிறுத்துவதே தனது தலையாய பணி எனக் கூறிக்கொள்ளும் குணா, அதனை முறையாகச் செய்ய வேண்டுமானால் பாவாணரின் கூற்றுக்களை நவீன ஆய்வு வெளிச்சங்களின் அடிப்படையில் நிலைநிறுத்தியாக வேண்டும். அதனை விட்டுவிட்டுப் பாவாணரைத் தெய்வமாக்கி, அவரது கூற்றுக்களைப் பிரமாணங்களாக்கி, அவரின் மேற்கோள்களையே ஆதாரங்களாக்கி அவரது கோட்பாடுகளையே நிறுவ முயலுவதென்பது நகைச்சுவையாக அமைந்துவிடுகிறது.

### 3. தரவுகளின்மை :

சனரஞ்சகமாக வெகு மக்களை நோக்கி எழுதும்போது ஏகப்பட்ட புள்ளிவிவரங்களை அள்ளித்தெளிப்பது சாத்தியமில்லையெனினும் தமிழகத்தில் தெலுங்கரின் ஆதிக்கமிருக்கிறது என்கிற கருத்தினடிப்படையில் ஒரு புதிய அரசியலறிக்கையை முன்வைக்கும்போது அதற்குரிய குறைந்தபட்சத் தரவுகளைத் தொகுத்தளிப்பது அவசியம். கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் ஆகிய துறைகளில் இன்னட, தெலுங்கர்கள் எவ்வளவு பேர் வாய்ப்புப் பெற்றுள்ளனர், பாசன நிலங்களில் எத்தனை சதம் அவர்களுக்குரியதாக இருக்கிறது,

பெருந்தொழில்களில் எத்தனை சதம் அவர்கள் வசமுள்ளன என்பதனைச் சொல்லி, இவற்றை மொத்தச் சனத்தொகையில் கன்னட, தெலுங்கரின் சனத் தொகையுடன் ஒப்பிட்டு விளக்க வேண்டும். குணா ஓரிடத்தில் கூட இந்த முயற்சியில் இறங்கவில்லை என்பதை இங்கே நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். இதனைச் சிரத்தையின்மை, சோம்பேறித்தனம் ஆகியவற்றின் விளைவாக மட்டும் நான் கருதவில்லை. நாயுடுகள், ரெட்டியார்கள் முதலானோர் ஓரளவு நிலவுடைமை யாளர்களாகவும் பெருந்தொழில் துறையினராகவும் உள்ளார்கள் எனினும் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள தொட்டியம் நாயக்கர்கள், தீண்டத் தகாதவர்களாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள சக்கிலியர், மலம் அள்ளுகிற தோட்டிகள், மண்வெட்டும் ஒட்டர்கள், குணாவே குறிப்பிடும் நரிக்குறவர்கள், லம்பாடிகள் முதலான 'வேற்று மொழியினரையெல்லாம்' கணக்கிலெடுத்துக் கொண்டோமானால் தமிழகத்தின் மொத்தச் சனத்தொகையில் எவ்வளவு குறைவாக வைத்துக் கொண்டோமானாலும் முப்பது சதத்தினர் இருக்கலாம். மொத்த நிலப்பரப்பில், மொத்தப் பொருளாதாரத்தில், மொத்த அரசு பதவிகளில் முப்பது சதத்திற்கும் மேல் இவர்களின் வசம் உள்ளதா என்கிற கேள்விக்குக் குணா பதில் சொல்லியாக வேண்டும். சக்கிலியரில் எத்தனை பேர் அதிகாரிகளாக இருக்கின்றனர்? தோட்டிகளில் எத்தனை பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்? ஒட்டர்களில் எத்தனை பேர் தொழிற்சாலைகள் வைத்துள்ளனர்? நரிக்குறவர்களில எத்தனை பேர் வருமான வரி கட்டுகின்றனர்? பொருளியல் ரீதியாகவும், சாதி ஆதிக்க ரீதியாகவும் இந்தப் பிரச்சினையை அணுகாமல் குணா நம்பியுள்ள மொழிவழித் தேசிய அடிப்படையில் இந்தச் சிக்கலைத் தீர்க்க முடியாது. இதன் விளைவாகவே தரவுகளை முன் வைக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அவர் மௌனம் சாதிக்கிறார்.

### 4. காலக் குறிப்புகளின்மை :

வரலாறெழுதும்போது காலப்பாகுபாடுகள் செய்வதும் முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிக்குரிய காலங்களைக் கூடியவரை நெருக்கமாகச் சொல்வதும் அவசியம். 'கடுமையாக உழைத்து' வரலாறெழுதும் பணியை மேற்கொண்டுள்ளதாகப் பீற்றிக் கொள்ளும் குணாவின் எழுத்துக்கள் எதிலும் பெரும்பாலான முக்கிய நிகழ்ச்சிகள் எதற்கும் காலக்குறிப்புகள் கொடுக்கப்படுவதில்லை என்பதைத் தோழர்கள் கவனிக்க வேண்டுகின்றேன். இதற்குக் காரணம் காலங்களைக் குறிக்க முயன்றால் குணா மாட்டிக் கொள்வார் என்பதுதான்.

எடுத்துக்காட்டாகக் குமரிக் கண்டக் கோட்பாட்டை நிறுவுவதே தனது வாழ்க்கைப் பணி எனக் கூறிக்கொள்ளும் குணா லெமூரியா மற்றும் மாந்தனின் தோற்றம் பற்றிப் பேசவரும்போது 'நெடுங்காலம்' எனச் சொல்லி நழுவிவிடுவது (த.வ. 3) கவனிக்கத்தக்கது. லெமூரியா இருந்து மூழ்கிப் போனது உண்மை எனில் புவியியல் அடிப்படையில் அந்நிகழ்வு சுமார் அய்ந்து கோடி ஆண்டுகளுக்கு முன்னதாக நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால் மனித இனம் தோன்றியதே சில பத்தாயிரமாண்டுகளுக்குள்தான் என்பதை எண்ணிப் பார்க்கும்போது அய்ந்து கோடி ஆண்டுகட்கு முந்திய 'லெமூரியர்கள்' தமிழர்கள்தான் என வாதிடுவது மடமை என்றாகி விடுகிறது. கே.கே. பிள்ளை போன்றோர் சுமார் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பே இந்தக் கேள்வியை (தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், 27) முன் வைத்துள்ளனர். இந்த வாதத்திற்குப் பதில் சொல்லத் திராணியற்றுப் போனதன் விளைவாகவே குணா 'லெமூரிய நாகரிகத்தின்' காலம் பற்றி மௌனம் சாதிக்கிறார்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பதைத் தமிழ் நாகரீகத்தின் ஒன்றன்பின் ஒன்றான படிநிலை வளர்ச்சியாகக் கருதும் பரிணாமவாதக் கோட்பாட்டை இப்போது யாரும் ஏற்பதில்லை (கா. சிவத்தம்பியின் திணைக் கோட்பாடு பற்றிய கட்டுரைகளைப் பார்க்க). ஆனால் குணா வழக்கம்போல எவ்வித விளக்கமுமின்றி மீண்டும் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை முன் வைக்கிறார் (த.வ. 7). இந்த வளர்ச்சிப் போக்கின் (!) கால எல்லைகள் குறித்துக் குணா எதுவும் சொல்வதில்லை. ஓரிடத்தில் பாலை ஊழியில் வருண முறை உருவாகியது என்கிறார் (த.வ. 14). தொல்காப்பியம் வருணமுறை தோன்றிய காலத்துக்குரிய நூல் எனப் பிறிதோரிடத்தில் குறிப்பிடுகின்றார் (த.வ.). இன்னோரிடத்தில் தொல்காப்பியத்தின் காலம் ஏழாம் நூற்றாண்டு என்கிறார் (த.வ. 30). ஆக, பாலை ஊழியின் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டு என்றாகிறது. எனவே குறிஞ்சி ஊழியின் காலம் அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் என்றாகிறது. குறிஞ்சி ஊழியைப் பெருங்கற் புதைவுடன் குணா இணைத்திருக்கிறார் (த.வ.ச.). எனவே பெருங்கற் புதைவு குறைந்த பட்சம் கி.மு. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பாகவேனும் இருந்திருக்க வேண்டும். ஆனால் சமீபத்திய அகழ்வாய்வு முடிவுகளின் படியும் கிடைக்கும் தரவுகளின் படியும் பெருங்கற் புதைவைக் கி.மு. மூணாம் நூற்றாண்டுக்கு முன்பு கொண்டு செல்ல இயலாது என்கின்றனர் (சுப்பராயலு, முன் குறிப்பிட்ட கட்டுரை). இப்படி ஏராளமான அபத்தங்களைக் குணாவில் சுட்டிக் காட்ட முடியும். கி.மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தியே கிழாரியம், நிலமான்ய முறை (த.வ. 9)

முதலியன இருந்தது எனக் குணா கூறுவதெல்லாம் கிடைக்கும் எந்தத் தரவுகளோடும் பொருந்தாத பிதற்றல்களாகும்.

## 5. கள்ள மவுனங்களும் அப்பட்டமான முரண்களும்:

குணாவில் வெளிப்படும் பல மவுனங்களைச் சுட்டிக் காட்டினோம். இன்னொரு மகா அபத்தத்தைப் பாருங்கள். 'காவிரிச் சமவெளியிலும் வைகை ஆற்றங்கரையிலுமென ஆரியப் பார்ப்பனியம் ஊடுருவிவிட்ட காலம் கரிகாலனின் காலம்' என்கிறார் குணா (த.வ. 33). அதாவது கி.மு. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டுகளில் ஆரியப் பார்ப்பனீயம் தமிழகத்திற்குள் ஊடுருவிவிட்டது என்றாகிறது. ஆனால் மற்றோரிடத்தில், 'ஆரிய மதங்களான சைன, புத்த மதங்களின் வாயிலாகவே ஆரியக் கொள்கை தமிழகத்திற்குள் ஊடுருவிவிட்டது' எனச் சொல்கிறார் (த.வ. முன்னுரை). ஆனால் இந்த மதங்களைத் தோற்றுவித்த புத்தரும் மகாவீரரும் இந்தக் காலக்கட்டத்தில் பிறக்கவேயில்லை என்கிற செய்தியை நாமறிவோம். இந்த முரணைக் குணா எப்படி விளக்கப் போகிறார். கரிகாலன் காலத்திலேயே ஆரியம் ஊடுருவிவிட்டது எனச் சொல்லும் அவர் பிறிதோரிடத்தில், 'ஆரியப் பார்ப்பனியத்தின் தலையாட்டியாகத்' தமிழினம் போனமைக்குக் காரணமாகக் கரிகாலனுக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய 'குலோத்துங்கன் போன்ற தமிழரல்லாதோரின் கொற்றமே காரணம்' என நச்சுமிழ்வதன் பொருளென்ன? சைனமும் புத்தமும் ஓங்கி நின்ற காலத்திற்கு முன்பே 'சேரநாட்டில் வந்தேறிய ஓர் ஆரியப் பார்ப்பனனாகிய பரசுராமன் இத் துணைக் கண்டத்தில் எங்குமேயில்லாத தூயதொரு பார்ப்பனராட்சியை முதன் முதலில் நிறுவினான்' எனக் குணா பிறிதோரிடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதன் (த.வ. 23) பொருளென்ன?

நம்முன் உள்ள கேள்வி இதுதான். தமிழகத்தில் ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பு ஏற்பட்டதற்குக் காரணம் சைன புத்த மதங்கள் என்கிறாரா; கரிகாலன் என்கிறாரா? இல்லை குலோத்துங்கன் என்கிறாரா; பரசுராமன் என்கிறாரா? முற்றிலும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை ஒரே கட்டுரையில் எப்படி அவரால் சொல்ல முடிகிறது?

பரசுராமனின் கதையை ஏற்றுக் கொள்ளும் குணா அகத்தியர் கதை குறித்து மவுனம் சாதிப்பதேன்? தமிழ்ப் பாசன முறையையும், தமிழ் மொழியையுமே ஆரிய ஊடுருவல் இலக்காகக் கொண்டது என்கிற உண்மையை அகத்தியர் கதை

வெளிப்படுத்துவதைப் பற்றி என்ன சொல்லப் போகிறார் குணா?

குணாவில் காணப்படும் மேலும் சில ஆபத்தான மவுனங்களைக் காண்போம். "தெலுங்குப் பாளையக்காரர்கள் மறவர் குடியினராகிய தமிழ்ப் பாளையக்காரர்களைத் தொடர்ந்து காட்டிக் கொடுத்தனர் என்பதே வரலாறு" என்கிறார் குணா (த.வ. 43). வீரபாண்டியக் கட்டபொம்மன் என்னும் தெலுங்குப் பாளையக்காரரைப் புதுக்கோட்டைத் தொண்டைமானெனும் பச்சைத் தமிழர் காட்டிக் கொடுத்ததையும் கட்டபொம்மனை எட்டப்பன் என்கிற ஒரு தெலுங்கரே - அதாவது ஒரு தெலுங்கரை மற்றொரு தெலுங்கரே - காட்டிக் கொடுத்ததையும் குணா மறந்தபோதிலும் நாம் மறப்பதற்கில்லை. தெலுங்கர் காட்டிக் கொடுத்ததற்கு உதாரணமாக மருது பாண்டியர் வரலாற்றை அவர் சுட்டிக் காட்டுவது (த.வ. 43) நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. மருது பாண்டியருக்குத் திண்டுக்கல்லில் அடைக்கலமளித்து, பின்பு பொன்னும் பொருளும் படையும் ஆயுதமும் கொடுத்து உதவி செய்தது கன்னடரான திப்புசுல்தான் அல்லவா? காட்டிக் கொடுத்தது இன்னொரு தமிழரான படமாத்தூர் தேவரல்லவா? தமிழரிடையே இருந்த சாதி மோதலல்லவா இந்தக் காட்டிக் கொடுப்பிற்குப் பின்புலமாக இருந்தது!

திராவிடப் பகுதிகளை ஒன்றாக இணைத்துத் 'தட்சிணப் பிரதேசமாக' மைய அரசு அறிவித்த போது (1953) அதனைக் கடுமையாக எதிர்த்துத் தடுத்து நிறுத்தியவர் பெரியார். இந்த வரலாற்றுண்மையைக் குணாவால் மறைக்க இயலவில்லை. ஒத்துக் கொள்கிறார் (தி.வீ. 35,36). "தமிழக அரசியலுக்குப் பெரிய கேடே விளையுமென நன்கறிந்தனாலேயே பெரியார் அதை எதிர்த்தார்" என ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார் (தி.வீ. 36). தனது சொந்த அரசியல் லாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு தமிழர் நலனுக்குத் துரோகமிழைத்தவர் பெரியார் எனப் பத்து பக்கங்களுக்கு முன்பாகக் (தி.வீ. 23) குற்றம் சாட்டிய குணா இப்படித் தலைகீழ்ப் 'பல்ட்டி' அடிக்கும்போது விளக்கமளிக்க வேண்டாமா? மீண்டும் மவுனமே விளக்கம்.

தமிழ்ப் பார்ப்பனர்களின் தமிழ்ப் பற்றின் மேன்மையை விளக்க சுமார் மூன்று பக்கங்களை ஒதுக்கி மகிழும் குணா இராகவையங்கார், பி.டி.சீனிவாசய்யங்கார், சூரிய நாராயண சாத்திரியார், பாரதியார், சுப்பிரமணிய சிவா என்னும் நீண்ட பட்டியலொன்றை நீட்டுகிறார் (தி.வீ. 19-22). நமக்கேற்படும் அய்யம் இந்தப் பட்டியலில் தமிழில் சிறுகதை வடிவத்தைத் தோற்றுவித்த வ.வே.சு. அய்யரை விட்டு விட்டதேன் என்பதே. சேரன்மாதேவி குருகுலத்தில் வருண ஒதுக்கலைக் கடைப்பிடித்து அழியா

இழுக்கைத் தேடிக் கொண்ட வ.வே.சு வைப் பட்டியலல் சேர்ப்பாரேயானால் ஆரியப் பார்ப்பனியத்திற்கும் தமிழ்ப் பார்ப்பனியத்திற்கும் என்னய்யா வேறுபாடு என்கிற நமது கேள்விக்கு அவர் பதில் சொல்லியாக வேண்டுமல்லவா? தோழர்கள் மிகுந்த கவனத்துடன் இந்தக் கேள்வியைப் பரிசீலிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன். ஆரியப் பார்ப்பனீயம் வேறு, தமிழ்ப் பார்ப்பனீயம் வேறு. முன்னது பிறபோக்கானது, பின்னது முற்போக்கானது எனக் குணா கொட்டி முழக்குகிறாரே வருணாசிரமம், தீண்டாமை இப்படி முக்கிய அம்சங்களில் இரண்டும் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதைச் சொல்ல வேண்டாமா? எந்தெந்த அம்சங்களில் தமிழ்ப் பார்ப்பனீயம் வரவேற்கத் தக்கதாய் உள்ளது எனப் பட்டியலிடுவாரா? தமிழ்த் தொண்டை ஒரு வேறுபாடாகச் சொல்வாரேயானால் தமிழ்த் தொண்டு செய்த தெலுங்கர், கன்னடர் பட்டியலொன்றை நம்மால் காட்ட முடியாதா?

## 6. வரலாற்று நிகழ்வுகளைத் தற்செயலாகத் திரித்தல் :

வரலாறு - தற்செயல் உறவு, இயங்கியலின் முக்கியத்துவம் என்பன பற்றியெல்லாம் ஆங்காங்கு சவடால் அடிக்கும் குணா, அதிகப் படிச்ச மூஞ்சூறு கழனிப் பானைக்குள் வீழ்ந்தது போல மிக முக்கியமான வரலாற்று நிகழ்வுகள் பலவற்றை அவற்றுக்குரிய சமூகப் பொருளாதாரப் பின்னணிகளையெல்லாம் மறைத்துவிட்டு வெறும் தற்செயல் நிகழ்வுகளாக முன்வைப்பது பெரிய வேடிக்கை.

தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி குறித்தும் அதன் சைவ வேளாளப் பின்புலம் குறித்தும் பேராசிரியர்கள் சிவத்தம்பி, கைலாசபதி முதலானோர் விரிவாக ஆய்ந்துரைத்திருப்பதை நாம் அறிவோம். குணா அதனை ஏற்றுக் கொள்ளவில்லையெனில் மறுத்து வேறு சமூகப் பொருளாதாரக் காரணிகளைச் சுட்டிக் காட்டுவதே சரியாக இருக்க முடியும். ஆனால் குணா சொல்லும் காரணமென்ன?

> 'தனித் தமிழியக்கம் ஒரு மொழித் தூய்மை இயக்கமாக முதன் முதலில் வடிவெடுத்தது 1916ஆம் ஆண்டிலேயே என்பர். மறைமலை அடிகளாரும் அவருடைய மகளாகிய நீலாம்பிகை அம்மையாரும் இனித் தனித் தமிழில் பேசுவதென உறுதி கொண்ட நாளே அதற்கான தோற்றுவாயாம்' (த.இ.மா.மு. நவ - 94- பிப் 95-9).

எனத் தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றத்தைத் தனி நபரின்

விருப்பாகக் குறிப்பிடும் குணா, இன்னோரிடத்தில் பெரியார் தமிழக அரசியலில் முக்கியத்துவம் பெற்ற நிலையைக் குறிப்பிட வரும்போது,

> '(1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில்) ஈ.வே.இராமசாமி நாயக்கரை இனிப் பெரியார் என்றழைக்க வேண்டும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் இன ஓர்மையாளர்கள் தமிழகத்தின் அரசியல் தலைமையைக் கன்னடரான இராமசாமிப் பெரியாரின் காலடியில் வைத்த அவல நிகழ்வாகவே அஃது அமைந்துவிட்டது' (மேற்குறிப்பிட்ட கட்டுரை).

என்பதும் கவனிக்கத் தக்கது. தமிழக அரசியலில் பெரியார் பெற்ற முக்கியத்துவமென்பது அவர் மேற்கொண்ட பணியாகிய பார்ப்பன எதிர்ப்பின் விளைவு. பார்ப்பன எதிர்ப்பின் தேவையை ஒட்டி உருவான முக்கியத்துவத்தைப் பெரியார் என்கிற பெயர் சூட்டலின் விளைவாகச் சொல்வது மிகை எளிமைப்படுத்தும் போக்கல்லவா?

## 7. உண்மைகளைத் திரித்தல் :

இப்படி குணாவின் ஆய்வுமுறை அபத்தங்களை நிறையச் சொல்ல முடியும். 'திராவிடக் கயமை' என எழுதக் கூசாத குணா, கண்முன் உண்மைகளைத் திரிக்கும் கயமைகளை மேலும் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்கிறார். தமிழகப் பொதுவுடைமையரைப் பற்றி நமக்குப் பல விமர்சனங்களுண்டு. புரட்சிகரமற்ற சமரசப் போக்குகளுக் காகவும் அதிகார மயமான நடைமுறைகளுக்காகவும் பார்ப்பனீயமயமாகிப் போன தன்மைகளுக்காகவும் நாம் அவர்களை விமர்சிக்கிறோம். ஆனால் குணா வழக்கம் போல எந்த ஆதாரமுமின்றி இன்னொரு குண்டைத் தூக்கிப் போடுகிறார். தமிழரல்லா முதலாளிகள், நிலவுடைமை யாளர்கள் ஆகியோரை விட்டுவிட்டுத் தமிழர்களை மட்டுமே அவர்கள் எதிர்க்கிறார்களாம். அப்படியாயின் கோபால கிருஷ்ண நாயுடு பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த நாற்பத்திரண்டு பேரை ஏன் எரியூட்ட வேண்டும்?

அதே போல வரலாறெல்லாம் வர்க்கப் போராட்டத்தின் வரலாறே எனச் சொல்வது தவறு, உண்மையில் வரலாறெலலாம் இனப் போராட்டத்தின் வரலாறுதான் என அடித்துச் சொல்லும் குணா அதற்கு ஆதாரமாகத் தமிழகத்தில் நடந்த சில சாதி மோதல்களைச் சுட்டிக் காட்டுகிறார். வெண்மணி, குறிஞ்சான்குளம் இங்கெல்லாம் தெலுங்குச் சாதியினர் தமிழ்த்

தாழ்த்தப்பட்டோரைக் கொன்றார்களாம். தமிழ் உயர்சாதியினரே தமிழ்த் தாழ்த்தப்பட்டோரைக் கொன்றொழிப்பதற்கும் தீண்டாமையைக் கடைப்பிடிப்பதற்கும் விழுப்புரம், பொன்னூர் என இதைவிடப் பெரிய பட்டியலொன்றை நாம் நீட்ட முடியாதா? குறிஞ்சான்குளத்தில் தெலுங்குச் சக்கிலியர் இதர தாழ்த்தப்பட்ட சாதியினரோடு இணைந்து நிற்காமல் தெலுங்கு நாயக்கர்களுடன் இணைந்து கொண்டார்களே என்கிற கேள்வியைக் குணா முன் வைக்கிறார். இப்படி மேலோட்டமாகப் பார்த்து இதனை ஒரு வெறும் மொழி வழி இணைவாகச் சொல்லிவிட முடியாது. நுணுக்கமாகப் பரிசீலிக்க வேண்டும். குறிப்பிட்ட இடத்தில் சக்கிலியருக்கும் இதர தாழ்த்தப்பட்டவர்களுக்குமிடையே சாதி உறவுகள் எப்படியுள்ளன, சக்கிலியர்கள் மற்ற தாழ்த்தப்பட்டவர்களால் தீண்டாமைக்குள்ளாக்கப் படுகிறார்களா என்கிற கேள்விகள் முக்கியமானவை. அப்படி இருக்கும் பட்சத்தில் உடனடி ஒடுக்குமுறையாளரே பெரிய எதிரியாகத் தோன்றும் வாய்ப்பிருக்கிறது. பார்ப்பனீயமே பெரிய எதிரி என்றார் அம்பேத்கர். இதற்கெதிராகப் பிற்படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் இணைய வேண்டும் எனவும் சொன்னார். ஆனால் நடைமுறை இதற்கு நேரெதிராகத்தானே இருக்கிறது. தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் பிற்படுத்தப்பட்டவர்களை எதிர்த்துத் தானே மோத வேண்டி இருக்கிறது. குறிஞ்சான்குளம் போன்ற இடங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக் கிடையிலேயே பிளவுகள் தோன்றுகின்றதென்றால் அது அங்கே தலித் அரசியல் சரியாக வேரூன்றவில்லை என்பதையே காட்டுகிறது. இந்த அரசியல் பணியை மேற்கொள்ளாமல் சக்கிலியரைப் பிற தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து மொழி வழியில் பிரித்து நிறுத்துவதென்பது சாதி ஆதிக்கத்திற்குச் சார்பாகத்தானே முடியும்?

## மூன்று

## சில வரலாற்று விளக்கங்கள்

குணாவின் ஆய்வு முறையிலுள்ள சில ஆபத்தான கூறுகள் குறித்துப் பேசத் தொடங்கிச் சற்று விரிவாகவே அந்த அடிப்படையில் சில கேள்விகளை எழுப்பியிருக் கின்றோம். இனி குணாவால் திரிபு படுத்தப்பட்டுள்ள சில முக்கிய வரலாற்றுப் பிரச்சினைகள் குறித்த மாற்று வாசிப்புகளை முன் வைப்போம்.

### 1. களப்பிரர் காலம் இருண்ட காலமா?

தமிழகத்தின் மீது முதன் முதலில் படை எடுத்துப்

பெருங்குழப்பத்தை ஏற்படுத்தித் தமிழகத்தை இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தியவர்கள் எனவும் கருநாடகத்திலிருந்து வந்த வேற்றினத்தவர் எனவும் களப்பிரரைக் குணா அடிக்கடி சாடுகிறார் (த.வ. 45).

குணா தவிர சைவ-வேளாளக் கருத்தியலுக்கு ஆட்பட்டுக் களப்பிரர் காலத்தை இருண்ட காலமாகச் சாடியவர்கள் எனச் சேக்கிழார் முதல் மு. அருணாசலம் வரை ஒரு நீண்ட பட்டியலை நம்மால் சுட்டிக்காட்ட முடியும். இப்போக்கிலிருந்து வேறுபட்டு நின்று களப்பிரர்கள் குறித்த ஒரு மாற்றுப் பார்வையை முன் வைத்தவர்கள் என நானறிந்தவரை இரண்டே இரண்டு வரலாற்றறிஞர்கள்தான் உள்ளனர். முதலாமவர் மயிலை சீனி வேங்கடசாமி (களப்பிரர் ஆட்சியில் தமிழகம், 1976). மற்றவர் பர்ட்டன் ஸ்டெய்ன் (Peasant State and Society in the Medievel South India, 1980) கி.பி. 3லிருந்து 6ஆம் நூற்றாண்டு வரை அதாவது கடைச் சங்க வீழ்ச்சியிலிருந்து பல்லவர் காலத் தொடக்கம் வரை களப்பிரர் காலம் என்பார்கள். களப்பிரர்கள் யார், என்ன மொழியினர், எங்கிருந்து வந்தனர் என்பது பற்றியெல்லாம் தெளிவான முடிவுகள் ஆய்வாளர்களிடையே கிடையாது. கருநாடகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது ஒரு சாராரின் கருத்து. அவ்வளவு தான். களப்பிரர்களைத் தமிழர்கள் எனச் சொல்வாரும் உண்டு (K.P. Aravanan, Jain Contribution to Tamil Grammer, 1974. p.61).

களப்பிரர் குறித்த முக்கியமான வரலாற்று ஆவணங்களில் வேள்விக்குடிச் செப்பேடு முக்கியமானது. வடமொழி மற்றும் தமிழில் ஆக்கப்பட்ட பதினெட்டு பக்கங்களுடைய இச் செப்பேடுகளில் சொல்லப்படும் செய்தி: பராந்தகன் நெடுஞ்சடையன் என்னும் பாண்டிய மன்னன் ஒரு நாள் மதுரை நகரில் வீதி வலம் வருகையில் கொற்கைக் கிழான் நற்சிங்கன் என்னும் பார்ப்பனன் அவன் முன் வீழ்ந்து ஒரு முறையீட்டைச் சமர்ப்பிக்கின்றான். நெடுஞ்சடையனின் முன்னோனும் சங்கக் காலப் பாண்டியனுமாகிய பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் காலத்தில் நற்சிங்கனின் முன்னோனாகிய நற்கொற்றன் என்னும் பார்ப்பனன் அரசனுக்காக ஒரு வேள்வி நடத்திக் கொடுத்தான் எனவும் அதற்குப் பரிசாக பாண்டிய மன்னன் பாகனூர்க் கூற்றத்தைச் சேர்ந்த வேள்விக்குடி என்னும் கிராமத்தை மான்யமாக அப்பார்ப்பனனின் பரம்பரைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான் எனவும் அந்த மான்யத்தைப் பாண்டியனுக்குப் பின் வந்த களப்பிரர் என்னும் கலியரசர் பிடுங்கிக் கொண்டதாகவும் மீண்டும் அதைத் தனக்குத் திருப்பித் தர வேண்டும் எனவும் நற்சிங்கன் முறையிடுகிறான்.

நெடுஞ்சடையனும் அவ்வாறே அப் பார்ப்பனனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் வேள்விக்குடியைத் திருப்பிக் கொடுக்கிறான். செப்பேடு சொல்லும் விவரம் இதுதான்.

சங்கக்கால இறுதி என்பது பார்ப்பனரின் பொற்காலமாக விளங்கியது என்பதும் பின் வந்த களப்பிரர் காலம் பார்ப்பனருக்கு இருண்ட காலமாக இருந்தது என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. செப்பேட்டில் நாம் கவனம் பதிக்க வேண்டிய ஒரு குறிப்பின் மீது தோழர்களை ஈர்க்க விரும்புகின்றேன்.

பாண்டிய வம்சப் பெருமையைச் சொல்ல வரும்போது அவர்களின் சாதனைகளாகச் சொல்லப்படுவன: பரவரைப் பாழ்படுத்தியது; குறுநாட்டவர் குலம் கெடுத்தது; செந்நிலங்களைச் செறுவென்றது; துலாபாரம், இரண்யகர்ப்பம் முதலிய வைதீக வழிப்பட்ட யாகங்களையும் சடங்குகளையும் செய்தது; அந்தணர்க்கு ஈந்தளித்தது; மகிதலம் பொதுநீக்கி அரசாண்டது. சுருக்கமாகச் சொல்வதானால் விளிம்பிலுள்ள இனக்குழுக்களை வென்று அவர்களது நிலங்களைக் கைப்பற்றியதும் அவற்றை அந்தணர்களுக்கு ஈந்தளித்ததும் பாண்டியரது பெருமைகளாம். குணா போற்றும் பாண்டிய - பல்லவ - சோழ ஒருங்கிணைப்பு மற்றும் தமிழ்க் காணியாட்சி முறையின் இன்னொரு பக்கம் இதுதான். ‘மகிதலம் பொது நீக்கி’ என்னும் சொற்றொடரைத் தோழர்கள் கவனமாக ஆராய வேண்டுகிறேன். மண்ணுலகைப் பொதுநீக்கி அரசாளுதல் எனில் யாருக்கும் காணியுரிமை இல்லாமல் ஒட்டுமொத்தமாகச் சமூக உடைமையாக (பொது) இனக்குழு மக்களுக்குச் சொந்தமாக இருந்த நிலத்தை - செந்நிலங்களைக் - கைப்பற்றி அவற்றைப் பொது நீக்கி பார்ப்பன வேளாளக் குடும்பக் கொத்துகளுக்குக் காணியுரிமை யாக்கிய கொடுமையைத்தான் கொற்கைக் கிழான் நற்சிங்கன்களும் குணாக்களும் பொற்காலமெனப் போற்றி மகிழ்கின்றனர். மீண்டும் இனக்குழு மக்கள் கிளர்ந்தெழுந்து பார்ப்பன வேளாள ஆதிக்கச் சக்திகளிடமிருந்து அந்நிலங்களைக் கைப்பற்றிப் பொதுவாக்கிய வீரவரலாற்றை இவர்கள் இருண்ட காலமென்கின்றனர். பார்ப்பனருக்குப் பொற்காலம் என்றால் அது தமிழகத்தின் பொற்காலமாம். அவர்களுக்கு இருண்ட காலமென்றால் அது தமிழகத்தின் இருண்ட காலமாம். ஆனால் பார்ப்பன - வேளாளரின் பொற்காலம் என்பது இதர அடித்தட்டு மக்களின் இருண்ட காலமாக இருந்தது என்பதைத்தானே வேள்விக்குடிச் செப்பேடுகள் சொல்கின்றன. எல்லோருக்கும் பொதுவான பொற்காலம், இருண்ட காலம் என்றெல்லாம் உண்டா?

களப்பிரர் யார் என்பது குறித்து இரு வரலாற்றாசிரியர்களின் கருத்துக்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். முதலாமவர் பர்ட்டன் ஸ்டெய்ன். தமிழ் மூவேந்தர்களின் விவசாயமயமாக்கும் (அதாவது குணா போற்றும் காணியாட்சி விரிவாக்கம்) முயற்சி என்பது தொடர்ந்து இனக்குழு மக்கள் மற்றும் (சமவெளிகளிலில்லாத) மேல்நில மக்களின் நலன்களுக்கு எதிரானதாகவே இருந்தது என்கிறார் ஸ்டெயின். அதாவது அரசு மற்றும் பண்பாட்டு மையங்களிலிருந்த நாகரிகமயமான ஆதிக்கச் சக்திகளின் மையப்படுத்தும் முயற்சி என்பது விளிம்புகளிலிருந்த அநாகரிகர்களின் நலன்களுக்கு எதிராக இருந்தது. உலகெங்கும் இதுவே வரலாறு. மையங்களை நோககி விளிம்புகளை ஈர்த்து மையங்களின் சுரண்டலுக்கு விளிம்புகளை ஆட்படுத்துவது. இதுவே நாகரிகர்களுக்கும் அநாகரிகர்களுக்குமான போட்டியாக உலகெங்கும் இருந்து வந்திருக்கிறது. நாகரிகமயமாக்கல், விவசாய மயமாக்கல், பண்பாட்டு உருவாக்கம் என்பனவற்றின் உண்மையான பொருள் இதுதான். பொருளியல் ரீதியாக மட்டுமின்றி விளிம்புகளின் மொழி, பண்பாடு, வழிபாட்டு முறைகள், கடவுள்கள் எல்லாமே இவ்வாறு மையப்படுத்துதலின் கீழ் அழித்தொழிக்கப்பட்டன. தமிழக வரலாற்றில் பார்ப்பன-வேளாள ஆதிக்க மையங்களே தமிழ் நாகரிகத்தின் தமிழ்ப் பண்பாட்டின் தொட்டிலாக விளங்கின. இனக்குழு மற்றும் மேல் நில மக்கள் விளிம்பு நிலையினராக இருந்தனர். இந்த அநாகரிகர்களே இன்றைய தமிழகத்தின் தாழ்த்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதியினர். மீண்டும் பர்ட்டன் ஸ்டெயினுக்கு வருவோம். இனக்குழு மற்றும் மேல்நில மக்களின் நீண்ட கால ஆயுதந் தாங்கிய எதிர்ப்பின் உச்சக் கட்டமே களப்பிரர் காலம் என்கிறார் ஸ்டெய்ன் (Peasant State ...77). களப்பிரர் காலம் ஏன் முடிவுக்கு வந்தது? இரண்டு காரணங்களைச் சொல்கிறார் ஸ்டெய்ன். ஒன்று: பார்ப்பன நிறுவனங்களையும் இந்துத்துவத்தையும் அவர்கள் ஆதரிக்க மறுத்தது. மற்றது: குறுமையங்களிலுள்ள தலைவர்களை (Local Leaders) ஏற்க மறுத்தது. இந்தத் தலைவர்கள் என்போர் பெரும்பாலும் ஆதிக்க விவசாயக் குழுக்களைச் சேர்ந்தவர்களே என முத்தாய்ப்பு வைக்கிறார் ஸ்டெய்ன் (P.77). வேறு வார்த்தைகளில் சொல்வதானால் தல அளவிலான பார்ப்பன-வேளாளத் தலைமைகளை அங்கீகரிக்க மறுத்தது களப்பிரரின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக இருந்தது.

இனி களப்பிரர் பற்றி மு. அருணாசலம் சொல்வது: "களப்பிரர்கள் எந்த அரசப் பாரம்பரியத்திலும் வந்தவர்களல்ல. தொன்மைக் காலத்தில் அரசப் பாரம்பரியத்திற்கே ஆளுமை

ஆரியப் படை எடுப்பு குறித்தும் முழுமையான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆரிய மொழிபேசும் குழுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இங்கு வந்து குடியேறியிருக்கலாம் (ரொமிலா, மு.கு.நூ. பக். 214). உள்நாட்டிலுள்ள குழுக்களுடன் முரணபாடுகளும் இருந்தன; ஒன்றிணையும் போக்குகளும் இருந்தன. விரைவில் இரண்டு பண்பாடுகளும் பின்னிப் பிணைந்து உள்நாட்டுப் பண்பாடு, ஆரியப் பண்பாடு என்றெல்லாம் பிரிக்க முடியாத இந்தோ-ஆரியப் பண்பாடு உருவாகிக் கொஞ்சம் கொஞ்சமாக அது கிழக்கு நோக்கிக் கங்கைச் சமவெளியில் பரவியது. இதனை இந்தோ-ஆரிய விரவல் அல்லது இந்தோ-ஆரிய மயமாக்கல் என்பதே பொருத்தம். சில்வியன் லெவி, ஜீன் ரைசலுஸ்கி, ஜில்ஸ் பிளாக், எஸ்.கே. சட்டர்ஜி, டி. பர்ரோ, எம்.பி. எமனோ, ரொமிலா தபார் முதலியோர் இப்படிக் கருதுகின்றனர்.

வேத நாகரீகம் முழுவதையும் ஒன்றாக வைத்துப் பார்ப்பதில் பொருளில்லை. ரிக் வேத நாகரீத்திற்கும் பின் வேத நாகரீகத்திற்கும் தொடர்ச்சி ஏதுமில்லை. அது போல ஆரிய மொழி பேசியோர் அனைவரையும் ஒன்றாகக் கருத வேண்டியதுமில்லை. 'விராத்தியர்' என்னும் ஆரிய மொழிக் குழுவினர் கடைசிவரை வேதச் சடங்குகளை ஏற்றுக் கொள்ளாமல் தப்பித்தோடியவர்களாக (Renegade Aryans) இருந்திருக்கின்றனர் (A.L. Basham, The Wonder That was India, 41).

இந்தோ ஆரிய மயமாக்கலின் போது உள்நாட்டுப் பண்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக உள்வாங்கப்பட்டு வேத நாகரிகத்திற்குள் கரைக்கப்பட்டன. உள்வாங்கப்பட்ட உள்நாட்டுக் குழுக்களுக்கு வருண-சாதி அமைப்பில் குறிப்பிட்ட இடங்கள் வழங்கப்பட்டன. மேல்நிலையில் இருந்தோருக்கு மேல் வருணத் தகுதிகளும் கூட அளிக்கப்பட்டன.

இந்தோ-ஆரியமயமாதலின் பிரதானக் கூறுகளாக வேதங்களைப் பிரமாணமாக ஏற்றுக் கொள்ளுதல், வேதச் சடங்குகளை ஏற்றுக் கொள்ளுதல், வருண-சாதி அமைப்பை ஏற்றுக் கொள்ளுதல், இந்தோ-ஆரிய மொழியை ஏற்றுக் கொள்ளுதல், விவசாய மயமாதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். எல்லா உள்நாட்டு இனக் குழுக்களும் இவற்றை முழுமையாக ஏற்றுக் கொண்டன எனச் சொல்ல முடியாது. முற்றிலும் ஒதுங்கிச் "சண்டாள நிலை" யை அடைந்தவரும் உண்டு. நாகர்களைப் போலத் தொடர்ந்து ஆரியமயமாதலை எதிர்த்தவர்களும் உண்டு. சிசுநாகரின் மகதப் பேரரசு அவற்றில் ஒன்று என்கிறார் அறிஞர் அம்பேத்கர் (பார்ப்பனியத்தின் வெற்றி, பக். 6,7). பாஷமும் இதனை ஏற்றுக் கொள்கிறார் (மு.கு.நூ.199). இப்படி இந்தோ-

ஆரியமயமாக்கலுக்குத் தொடர்ந்து எதிர்ப்புக்களுமிருந்தன. ஆரியக் குழுக்களில் சிலவும் எதிர்த்தன. உள்நாட்டுக் குழுக்களில் சிலவும் எதிர்த்தன. இத்தகைய எதிர்ப்புக் குழுக்களில் தோன்றியவர்களே புத்தரும் மகாவீரரும். புத்தர் தோன்றிய 'சாக்யர்' என்னும் குழுவினர் இமயத்தின் அடிவாரத்திலிருந்த ஒரு சுயேச்சையான இனக்குழுவினர்.

சுருக்கமாகச் சொல்வதானால் வைதீக மயமாதல் ஞா வைதீக எதிர்ப்பு என்கிற முரண் இவ்வாறு மூவாயிரமாண்டுக் காலமாக இந்தியத் துணைக் கண்டத்தில இயங்கி வருகிறது. வைதீகமயமாதலின் முக்கிய அடையாளம் வருணத் தருமத்தையும் இந்துத்துவத்தையும் ஏற்றுக் கொள்ளுதல். வரலாறு பூராவிலும் வந்த இந்துத்துவச் சக்திகள் (புஷ்ய மித்திர சுங்கன், மனு, ஆதிசங்கரன், இராசராசசோழன், காஞ்சி ஆச்சாரி, அத்வானி....) வைதீக மயமாதலை ஆதரித்தன. வருண சாதி முறை, பலி, வேள்வி, இந்துத்துவம் ஆகியவற்றை எதிர்த்தல் என்பது வைதீக எதிர்ப்புப் போக்கின் அடையாளம் (மகாவீரர், புத்தர், சித்தர்கள், அம்பேத்கர், பெரியார்......). வெளிநாட்டிலிருந்து இங்கு வந்திறங்கிய மதங்களில் கிறிஸ்தவம் வைதீகத்துடன் சமரசமானது. இசுலாமியமோ வைதீகத்தைக் கடுமையாக எதிர்த்தது. இதனாலேயே வைதீகர்கள் இசுலாமியத்தையும் கடுமையாக எதிர்க்கின்றனர்.

பாஷம் கூறுகிறார்: புத்தரும் மகாவீரரும் முழுமையான கடவுள் மறுப்பாளர்களாகவும் பொருள் முதல்வாதிகளாகவும் இல்லையாயினும் கடவுளைப் புறக்கணித்தனர். இவர்களின் காலத்திற்குப் பின்பே இந்தியச் சிந்தனை மரபில் பொருள் முதல் கருத்துக்களின் வீச்சைப் பார்க்க முடிகிறது.... ஒரு மதமாகப் பவுத்தம் உருவானபோது, அது அக்காலத்திய வெகுமக்களின் நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்டது. இம்மதங்களின் எளிய வழிபாட்டு முறைகள் பார்ப்பனியத்தில் பலிகளையும் வேள்விகளையும் புறக்கணித்து இனக் குழுக்களின் எளிய சடங்குகளை ஏற்றுக் கொண்டன.

அறிஞர் அம்பேத்கர் பவுத்தம் குறித்து விரிவான ஆய்வுகளைச் செய்துள்ளதையும் வைதீக எதிர்ப்பின் அடையாளமாகப் பவுத்தத்தில் இணைந்ததையும் நாம் அறிவோம். பெரியாரும் பவுத்தரும் பற்றி உயர் கருத்துக்களையே முன் வைத்துள்ளார்.

தனிச் சொத்துடைமைக்கு எதிரான புத்தரின் சங்கக் கோட்பாட்டைக் கோசாம்பி, ரொமிலா முதலாய வரலாற்றறிஞர்கள் விதந்தோதுகின்றனர்.

பெண்டிரை முதன்மைப் படுத்துதல், ஏழைகளின் பசிப்பிணி அகற்றுதல், வெகுமக்களுக்குக் கல்வியும் மருத்துவமும் அளித்தல் என்பன பவுத்த சமண மதங்களின் பிரதானக் கடமைகளாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. பெண்டிரை முதன்மைப்படுத்தி எழுதப்பட்ட இலக்கியங்களை (மணிமேகலை, குண்டலகேசி....) இங்குதான் நாம் காண முடிகிறது. கல்வி என்றால் வேதங்களைப் பார்ப்பனர்க்குப் பயிற்றுவித்தல் என்பதே வைதீக நடைமுறை. வெகு மக்களுக்குக் கல்வி அளிப்பதை வைதீகம் தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறது. இராசாசியின் ஆட்சிக் காலத்தில் பல ஆயிரம் பள்ளிகள் மூடப்பட்டது நினைவிருக்கலாம். மாறாகப் பவுத்தமும் சைனமும் தொடர்ந்து கல்விப் பணியைச் செய்து வந்தன. 'பள்ளி' என்கிற சொல்லே அம்மரபில் வந்ததுதான்.

## மனம் கொள்ள வேண்டிய வேறுசில உண்மைகள்:

★ மகாவீரரின் காலம் கி.மு. 618 - 546. புத்தர் கி.மு. 567 - 487. அதாவது கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்பே பவுத்தமும் சமணமும் தோன்றின. அசோகனின் காலத்திற்குப் பின்பே (கி.மு. 3ஆம் நூற்றாண்டு) பவுத்தம் தமிழ்நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியது. வணிகக் குழுக்களின் வழியாகச் சமணம் சற்று முன்பு இங்கு வந்திருக்கலாம்.

★ பவுத்தமும் சமணமும் பின்னாளில் அடைந்த பரிணாமம் குறிப்பிடத்தக்கது. வேள்விச் சடங்குகளையும் வேதங்களையும் அவை தொடர்ந்து மறுத்து வந்தாலும் வருண ஏற்றத் தாழ்வுகளை ஏற்றுக் கொண்டன. வருணத்தை ஏற்றுக்கொண்ட சமணமே தென்னாட்டிற்கு வந்தது.

★ பவுத்தமும் சமணமும் தமிழை அழித்தன எனச் சொல்வது அப்பட்டமான பொய். சிலப்பதிகாரம், மணிமேகலை உள்ளிட்ட அய்ம்பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், நன்னூல், வீரசோழியம் முதலாய இலக்கன நூற்கள் என பவுத்த-சமண மரபில் தோன்றிய தமிழ் இலக்கண-இலக்கிய நூற்களின் நீண்ட பட்டியலொன்றைச் சொல்ல முடியும். வள்ளுவரும் தொல்காப்பியரும் சமண மரபை ஏற்றுக் கொண்டவர்கள் என்பர். 'சங்கம்' என்கிற சொல்லும் கருத்தாக்கமும் பவுத்த மரபில் தோன்றியவை.

★ வைதீக மரபால் பெரும்பயன் பெற்றவர்கள் பார்ப்பனர்கள். வேள்விக்குடிச் செப்பேட்டின் கதையை முன்பே பார்த்தோம்.

சங்கக் காலத்திலேயே தமிழ்ச் சமூகம் வைதீகமயமாகத் தொடங்கியது. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிகளும்,

வேளவிக்குடிச் செப்பேடுகளும் திருமுருகாற்றுப்படையும் இதற்குச் சான்று. இந்த வைதீகமயமாதலுக்கு வேள்விகளை எதிர்த்த பவுத்த-சமண மதங்களே காரணம் என்று சொல்வது அபத்தம் மட்டுமல்ல, அயோக்கியத்தனமும் கூட. வைதீகமயமாதலின் உச்சகட்டமாய்ப் பல்லவ - சோழ - பாண்டிய ஒருங்கிணைப்பைக் கூறலாம். வெகுமக்கள் அளவில் வைதீக மயமாதலைச் செய்ததில் பக்தி இயக்கத்திற்குப் பெரும் பங்கு உண்டு. இதன்மூலம் பயன் பெற்றவர் பார்ப்பனரும் வேளாளருமே. இதன் தத்துவ வெளிப்பாடாகச் சைவ சித்தாந்தமும் நிறுவன வெளிப்பாடாக மடங்களும் அமைந்தன. வைதிக மயமாதலை ஏற்றுக் கொண்ட வகையில் சைவமும், சைவ சித்தாந்தமும் வேளாளரும் பார்ப்பனீயத்துடன் அய்க்கியமாயினர். பார்ப்பனருக்கும் வேளாளருக்கும் இருந்த முரணைக் காட்டிலும் அய்க்கியமே பிரதானமாக இருந்தது.

வைணவத்தை முற்போக்கான மதம் எனச் சொல்வதில் பொருளில்லை. தமிழ்ச் சைவமும், தமிழ் வைணவமும் வேதங்களையும் வருணத்தையும் ஏற்றுக் கொண்ட வகையில் ஆரிய-வைதீக மதங்களிலிருந்து எள்ளளவும் வேறுபடாமல் இருந்தன. "வெளிநாட்டினரையும் பழங்குடி மக்களையும் ஆரிய மயமாக்குவதில் வைணவம் முக்கியப் பங்காற்றியது'' என சுவிராஜெயஸ்வால் (வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பக். 199) கூறியுள்ளதும், "வியாசர் தொகுத்த தாகக் கூறப்படும் நான்கு வேதங்களையும் வைணவர்கள் பிரமாணமாகக் கொள்வர். வேதங்கள் பாராட்டும் பரம்பொருள் 'திருமாலே' என்பது அவர்கள் நம்பிக்கை. ஆழ்வார் பாடல்களில் இந்நம்பிக்கையின் எதிரொலியினைக் காணலாம்" எனப் ப. அருணாசலம் (வைணவ சமயம், பக். 28) கூறியுள்ளதும் இங்கே கவனிக்கத்தக்கன.

ஆழ்வார்களைத் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சாதிகளிலிருந்து வந்தவர்களாகக் குணா சொல்வதும் அப்பட்டமான வரலாற்றுத் திரிபு தான். ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களில் மூவர் (பெரியாழ்வார், தொண்டரடிப் பொடி, மதுரகவி) பார்ப்பனர். மூவர் திருமாலின் அம்சங்களால் அவதரித்தவர்கள் (பொய்கை, பூதம், பேய்). ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை பெரியாழ்வார். நம்மாழ்வார் வேளாளர். திருமழிசை பார்க்கவ வகுப்பைச் சேர்ந்தவர். திருமங்கை மன்னனும் திருப்பாணாழ்வாரும் மட்டுமே மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளிலிருந்து வந்தவர்கள். பெரும்பாலான ஆழ்வார்கள் உயர் சாதியினர் என்பதே உண்மை.

தோழர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். குணாவின் வைதீகச் சார்பை அடையாளம் காண வேண்டும்.

## 3. பல்லவ - சோழர் காலம் தமிழரின் பொற்காலமா? எல்லாச் சீரழிவுகளுக்கும் தெலுங்குச் சோழர்களும் நாயக்கர்களுமா காரணம்?

பல்லவ-சோழ ஒருங்கிணைப்பு என்பது தமிழுக்கோ தமிழருக்கோ பொற்காலமாக இருந்ததில்லை. பார்ப்பனருக்கும் - வேளாளருக்குமே அது பொற்காலமாக இருந்து வந்திருக்கிறது. காணியாட்சி முறையின் மூலம் பயன் பெற்றவர்கள் அவர்களே. நாடு-பெரிய நாடு போன்ற அமைப்புகளின் மூலம் இவர்களே ஆதிக்கம் செலுத்தினர். போகப் போக வேளாளரின் ஆதிக்கம் சற்றுக் கூடியது. தாழ்த்தப்பட்டவர்களும் இதர விளிம்பு நிலைச் சக்திகளும் இவர்களால் ஒடுக்கப்பட்டனர் என்பதே உண்மை. வலங்கை இடங்கைச் சாதியினர் ஒன்றிணைந்து இவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்ததற்குத் தமிழக வரலாற்றில் ஏராளமான ஆதாரங்கள் உண்டு. கைவினைப் பறையர் உள்ளிட்ட வலங்கை-இடங்கைச் சாதிகள் ஒன்றிணைந்து இன்றைய தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களின் பகுதிகளில் கி.பி. 1404 தொடங்கி 1464 வரை மிகப் பெரிய வரிகொடா இயக்கம் ஒன்றை நடத்தியுள்ளனர். வரிக் கொடுமைக்கு எதிரான பெருங் கலகமாக இது இளவனசூர் (1404), ஆடுதுறை (1429), திருவெண்ணை நல்லூர் (1446), திருவரங்கம் (1464), வழுதிலம்பட்டு போன்ற இடங்களில் வெடித்தது (N.Karashima & Y.Subbarayalu, Socio cultural Change in a Village in Trichy District, 1983). ''ராணுவத்தார் ை ஜீவிதக்காரர் ை காணியாளர் ை இராஜகரத்தார்'' ஆகியோருக்கு எதிராக இக் கலவரங்கள் வெடித்தன என்பதைக் கல்வெட்டுகள் வெளிப்படுத்துகின்றன. அதாவது அரசதிகாரிகளையும் பார்ப்பன-வேளாளக் காணியாளர்களையும் எதிர்த்து வலங்கை-இடங்கை ஒடுக்கப்பட்ட சாதியினர் ஒன்றிணைந்த மாபெரும் இயக்கமாக இது இருந்தது. குணா போற்றும் காணியாட்சியின் இலட்சணத்தைப் புரிந்து கொள்ள இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்தக் கலவரம் ஒவ்வொன்றிலும் இறுதி வெற்றி பெற்றது ஒடுக்கப்பட்ட சாதியினரே என்பது குறிப்பிடத்தக்கது. ஒடுக்கப்பட்ட தமிழர்களின் ஒன்றிணைவிற்கு வரலாறு காட்டும் சிறந்த எடுத்துக்காட்டு இது. இத்தகைய சிறப்புமிக்க நிகழ்வைத் தமிழர் ஒற்றுமைக் குலைவின் அடையாளமாகக் குணா சொல்வதை என்னென்பது?

குணா போற்றும் காணியாட்சி மற்றும் நாடு போன்ற அமைப்புகள் பொருளியல் சுரண்டல் கருவிகளாக இருந்தது தவிர

சாதிய ஒதுக்கல்களையும், சாதிக் கடமைகளையும் மேற்பார்வையிடும் நிறுவனங்களாகவும் இருந்தன என்பது சிந்திக்கத்தக்கது. நான் பிறந்த ஒரத்தநாடு வட்டத்தில் இன்றும் நடைமுறையிலுள்ள நாடு அமைப்பின் எச்ச சொச்சங்களில் உள்ளூர் மேலாதிக்கச் சக்திகளே ஆதிக்கம் வகிக்கின்றனர். சொல்லப்போனால் அது ஒரு சாதீய அடையாளமாகவே இன்று இங்குக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒரு கள ஆய்வு செய்தீர்களானால் இதனை விளங்கிக் கொள்ளலாம்.

குலோத்துங்கனுக்கு முந்திய பல்லவ-சோழ மன்னர்கள் தமிழை வளர்ப்பதில் ஊக்கம் காட்டினர் எனபதும் அபத்தமே. எல்லோரும் போற்றும் இராசராசனை எடுத்துக் கொள்வோமே. இவனது காலத்தில் வடநாட்டிலிருநது பார்ப்பனர்கள் பெரிய அளவில் கொண்டு வரப்பட்டுக் காவிரிக் கரையில் குடியேற்றப்பட்ட செய்தியை நாம் அறிவோம் (பார்க்க: Burton Stein). இவனது அரசகுரு சதுரானன பண்டிதர் என்கிற கோளகி (பீகார்)ப் பார்ப்பனர். இவன் மகன் ராசேந்திரனின் காலத்தில் எண்ணாயிரம் என்னுமிடத்தில் நிலைபெற்றிருந்த வடமொழிக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட பாடத்திட்டம்: ரிக், யஜுர் வேதங்கள், சாந்தோக்ய சாமம், தலவாகர சாமம், வாஜசனியம், அதர்வம், பௌதாயனீயம், க்ருஹ்யம், கல்பம், ரூபாவதாரம், வியாகரணம், பிரபாகரம், வேதாந்தம். “சோழர் காலத்தில் இக்கல்வியே பயிற்றுவிக்கப்பட்டது” என்கிறார் ஓர் ஆய்வாளர் (வெ. கிருஷ்ணமூர்த்தி, தமிழ் வேதம் - ஓர் ஆய்வு). இராசராசன் காலத்தில் கோவிலுக்குள் சென்று தேவாரப் பதிகம் பாடுவதற்குத் தமிழர்களுக்கு அனுமதியில்லை என்றும் அப்படி யாரையாவது அனுமதித்தால் அவர்களுக்குத் தீட்சை செய்வித்துப் புதிய தீட்சாநாமம் கொடுத்த பின்னரே அனுமதிக்கப்பட்டனர் என்கிறார் அ.ச. ஞானசம்பந்தன். திருஞானசம்பந்தர் என்கிற அகோரசிவன், திருநாவுக்கரசர் என்கிற வாமதேவசிவன் என்பன போனற கல்வெட்டுரைகள் இதை நிறுவுகின்றன எனச் சொல்லும் ஞான சம்பந்தன், “இராசராசனைப் பொறுத்தமட்டில் நாம் எதிர்பார்க்கிற அளவிற்குத் தமிழ்மொழிப் பற்றும் சைவ சமயப் பற்றும் கொண்டிருந்தானா என்பது என்னைப் பொறுத்தமட்டில் அய்யப்படுகின்ற ஒன்றாகும்” என முடிக்கிறார் (முன்னுரை, திருத்தொண்டர் புராணம்).

எனவே வடமொழி வளர்ச்சிக்கும் ஆரியப் பரவலுக்கும் பல்லவ-சோழத் தமிழ (!) மன்னர்கள் வித்திடவில்லை எனவும் தமிழை வளர்த்தார்கள் எனவும் சொல்வது எத்தனை பெரிய பொய்!

தெலுங்கர்களே சாதிப் பிரிவினைகளுக்குக் காரணம் என்கிற அப்பட்டமான பொய்க்குச் "சான்றாக" மேலும் பல பொய்களை அள்ளித் தெளிக்கிறார் குணா.

மனு தர்மம் சாளுக்கியர் அவையில் நிறைவேற்றப்பட்ட நூலாம் (தி.வீ. 5)! அதாவது கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாம். குலோத்துங்கன் தான் மனுமுறையைத் தமிழுக்குக் கொண்டு வந்தவனாம் (தி.வீ. 6). இது பற்றி வரலாற்றறிஞர்கள் என்ன சொல்கிறார்கள்?

சுங்க வமிச ஆட்சியில் கிறிஸ்துவுக்கு முந்திய இறுதி ஆண்டுகளில் எழுதப்பட்டது மனுநூல் என்கிறார் பாஷம் (மு.குநூ. 60). அம்பேத்கர் என்ன சொல்கிறார்?

> "பண்டைய வழக்கப்படி மனுவிதிகள் பிருகு என்னும் குடும்பப் பெயரால் குறிக்கப்பட்டிருக் கிறது. பிருகுவால் தொடுக்கப்பட்ட மனுதர்ம விதிகள் என்பதே இதன் உண்மையான தலைப்பு. ஒவ்வொரு விதிகளின் கடைசியிலும் பிருகுவின் குடும்பப் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது...... ஆசிரியரின் சொந்தப் பெயர் நூலில் இல்லை. எனினும் கி.மு. 4இல் எழுதப்பட்ட நாரத சுருதியில் மனுநூலாசிரியர் (அதாவது தொகுத்தவர்) பெயர் சுமதி பார்க்கவா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கேள்விக்கு இடமற்ற முக்கிய வரலாற்று அறிஞர்களின் கூற்றுப்படி சுமதி பார்க்கவா இவ்விதிகளைத் தொகுத்தார் என்பதும் அவர் கி.மு. 170-150க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இதை மனுசுருதி என்ற பெயரில் வெளி உலகத்திற்கு அறிமுகப்படுத்தினார் என்பதும் ஆகும்..... பார்ப்பனப் புரட்சியை நடத்திய புஷ்யமித்திர சுங்கனின் ஆட்சியில்தான் மனுசுருதி புதிய சட்ட விதியாக அறிவிக்கப்பட்டது

என்பது அம்பேத்கரின் ஆய்வுரை (பார்ப்பனீயத்தின் வெற்றி, 12,13). குணா இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

சங்க இலக்கியத்திலேயே மனுநீதிச் சோழன் பற்றிய குறிப்புகள் வந்துவிடுகின்றன (புறம் 39: 5-6). சிலப்பதிகாரத்திலும் (20: 53-55; 29: 2), மணிமேகலையிலும் (22:210) மனுச்சோழன் பற்றிப் பாடப்பட்டுள்ளன. குலோத்துங்கனுக்கு முந்திய தமிழ் (!) மன்னர்களாகிய ராஜகேசரி ராஜ மகேந்திரனின் (கி.பி. 1060-1063) பிரசாந்தியில் காணப்படும் "தரும நெறி நிற்ப மனுநெறி நடத்திய கோவிராச கேசரி வர்மரான உடையார் ஸ்ரீ இராசமகேந்திர

தேவர்'' - என்கிற வரிகளும் ஆதி ராஜேந்திர தேவனின் மெய்க்கீர்த்தியில் உள்ள ''மாப்புகழ் மனுவுடன் வளர்த்த கோப்புரகேசரி உடையார் ஸ்ரீ ஆதி ராஜேந்திர தேவர் என்கிற வரிகளும் வீரராஜேந்திரனின் மெய்க்கீர்த்தியிலுள்ள "மனுநெறி விளக்கிய கோராஜகேசரிவர்மரான உடையார் ஸ்ரீ வீரராஜேந்திர தேவர்" என்கிற வரிகளும் குணாவுக்கு மரண அடி கொடுக்கின்றன (K.A. Nilakanta Sastri, Cholar-246, து.அ. கோபிநாதரால், சோழவமிச சாத்திரச் சுருக்கம் - அனுபந்தங்கள்)

வலங்கை - இடங்கை முறையைத் தோற்றுவித்துத் தமிழரைக் கூறு போட்டவன் குலோத்துங்கன் என்பதும் பொய்யான செய்தியே. வலங்கை வேளக்காரப் படைகள் பற்றிய குறிப்பு முதலாம் இராசராசன் காலத்திலேயே கிடைக்கின்றன (Stein,174). குலோத்துங்கனின் காலத்தில் வலங்கை-இடங்கைச் சாதிகளுக்கிடையே ஒரு கலகம் நடந்திருபபது உண்மைதான். ஆனால் அது நடைபெற்ற ஆண்டு குலோத்துங்கனின் இரண்டாம் ஆட்சியாண்டு. ஆட்சிக்கு வந்த இரண்டாண்டுகளுக்குள் புதிதாக ஒரு சாதித் தொகுப்பை உருவாக்கி மோத விடுதல் எப்படிச் சாத்தியமாக இருக்க முடியும்? தவிரவும் தமிழகத்தில் மட்டும் வலங்கை-இடங்கைப் பிரிவுகள் இருந்தது எனவும் சொல்ல முடியாது. கர்னாடகத்திலும் (பலகேய்/எடகேய்) ஆந்திரத்திலும் (காம்புலு/பாஞ்சானுலு) இப்பிரிவுகள் இருக்கவே செய்தன. (Stein, 174,175). அங்கெல்லாம் இதனைத் தோற்றுவித்த வர்கள் யார்? என்ன நோக்கோடு தோற்றுவிக்கப்பட்டது? தமிழர்களைக் கூறுபோட என்றால் கருநாடகத்திலும் ஆந்திராவிலும் இது ஏன்?

தோழர்கள் சிந்திக்க வேண்டும்.

## 4. திராவிடம் என்கிற கருத்தாக்கம் பெரியாரால் சதி நோக்குடன் புகுத்தப்பட்டதா?

திராவிட என்னும் சொல்லைப் பரவலாக்கியவர் கால்டுவெல். மனு நூலிலேயே (கி.மு. 1ஆம் நூற்றாண்டு) சாதி விலக்கம் செய்யப்பட்டவர்களைப் பற்றிச் சொல்ல வரும்போது 'திராவிட' என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது (X. 43, 44). கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமாரில பட்டர் "திராவிட பாஷா" எனக் குறிப்பிட்டுள்ளார் (ச. அகத்தியலிங்கம், திராவிட மொழிகள், 22). ''எனவே திராவிட என்னும் சொல் மிகப் பழங்காலந் தொட்டே தென்னாட்டு மக்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகப் பயன்பட்டு வந்துள்ளது'' என்பார் கால்டுவெல்.

'திராவிட சிசு' எனச் சம்பந்தரை ஆதி சங்கரர் குறிப்பிடுவார்

என்பர். கச்சியப்ப முனிவரின் 'காஞ்சிப் புராணம்' (17ம் நூ.), சபாபதி நாவலரின் 'திராவிடப் பிரகாசிகை' (1890), சுந்தரம்பிள்ளையின் வாழ்த்துப்பாடல் (தெக்கணமும் அதில் சிறந்த திராவிட நல் திருநாடும் - 1900) என்பன நமக்கு உடனடியாக நினைவுக்கு வருகிற வேறுசில எடுத்துக்காட்டுகள். தமிழகத்தில் பார்ப்பனரல்லாதோரின் இயக்கம் உருவாகிறபோது பார்ப்பனர்களை விலக்கி நிறுத்தத் திராவிட என்னும் கருத்தாக்கம் பயன் படுத்தப்பட்டது. 1944இல்தான் பெரியார் இதனை விரிவாகப் பயன்படுத்தத் தொடங்குகிறார். இது குறித்த பெரியாரின் அறிக்கை இங்கே குறிப்பிடத்தக்கது.

> "நம் நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, இனத்திற்குத் 'திராவிடம்' என்று இருந்த பெயர் அது தமிழல்ல என்பதாலும், நமக்கு அது ஒரு பொதுக்குறிப்புச் சொல்லும், ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிச் சொல்லுமாக இருக்கிறதே என்று வற்புறுத்தி வந்தேன். அதை ஆந்திர, கர்நாடக, கேரள நாட்டு மக்களல்லாமல் தமிழ் மக்களில் சிலரும் எதிர்த்தார்கள். பின்னவர்கள் என்ன எண்ணங்கொண்டு எதிர்த்தாலும் அவர்களுக்கு மற்ற மூன்று நாட்டார் ஆதரவு இருந்ததால் அதை வலியுறுத்துவதில் எனக்குச் சிறிது சங்கடமிருந்தது. அவர்கள் மூவரும் ஒழிந்தபிறகு அவர்களையும் சேர்த்து குறிப்பிடத்தக்க ஒரு சொல் நமக்குத் தேவை இல்லை என்றாலும் 'திராவிடன்' என்ற சொல்லை விட்டுவிட்டுத் தமிழன் என்று சொல்லியாவது தமிழ் இனத்தைப் பிரிக்கலாமென்றால், அது வெற்றிகரமாக முடிவதற்கு இல்லாமல், பார்ப்பான் (ஆரியன்) வந்து 'நானும் தமிழன்தான்' என்று கூறிக்கொண்டு உள்ளே புகுந்து வருகிறான். இந்த சங்கடத்திற்கு - தொல்லைக்கு என்ன செய்வது? (விடுதலை, 11.10.55)

என்ற தனது குழப்பத்தைக் கள்ளங்கபடமின்றி வெளிப்படுத்தினார் அவர். தனது கட்சிக்குப் பெரியார் வைத்த பெயர் சுயமரியாதைக் கட்சி என்பதே. 1944இல் திராவிடர் கழகம் என்கிற பெயர் மாற்றத்தை முன் மொழிந்தது அண்ணாதுரையேயாகும். பார்ப்பன எதிர்ப்பு என்பது நம்மீது சுமத்தப்பட்ட ஒரு வரலாற்றுக் கட்டாயம். திராவிடர் என்ற சொல்லும் இந்த ஒரு வரலாற்றுக் கட்டாயத்தினடியாகவே நம்மீது சுமத்தப்பட்டது. கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் பிரிந்த பின்னும் அதனை நாம் சுமக்க நேரிட்டது. மற்றபடி பெரியாரின் அய்ம்பதாண்டுக் காலப் பார்ப்பன எதிர்ப்பு அரசியல் வாழ்வில் அவரது

விளிப்புக்குரியவர்களாகப் பார்ப்பனரல்லாத தமிழ்நாட்டவரே இருந்து வந்துள்ளனர். மற்றவர்கள் அவருக்குச் செவிசாய்த்ததுமில்லை. 'திராவிட'ச் சுமையோடு இன்று இயங்கிவரும் இயக்கங்களும் பாரம்பரியம் கருதி அதனைச் சுமக்கின்றனவே யொழிய அவர்களது களம் தமிழ்பேசும் மக்கள்தான் என்பது சிந்திக்கத்தக்கது.

எனினும் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதவர் என்கிற கூறுபடுத்தலை ஏற்காதவர்கள் தொடர்ந்து 'திராவிட'க் கருத்தாக்கத்தை எதிர்த்து வந்துள்ளனர். தமிழர்களைப் பிளவுபடுத்துவதற்காக ஆந்திரரும் மலையாளியும் சேர்ந்து உண்டாக்கியதே நீதிக் கட்சி என சேரன்மாதேவி புகழ் வ.வே.சு. அய்யர் அன்றே எழுதினார் (பாலபாரதி, மே 25). ம.பொ.சி. அதனைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார் (தமிழகத்தில் பிற மொழியினர், 1976). குணா இன்று கொட்டி முழக்குகிறார்.

இதுவே குணாவின் பாரம்பரியம்.

## நான்கு

## திராவிடத்தால் வீழ்ந்தோம் - ஒரு பாசிச அறிக்கை

இந்தக் கட்டுரையைப் பொறுமையாய்ப் படிக்கிற தோழர்களை நோக்கி ஒரு வேண்டுகோளை முன் வைக்க விரும்புகின்றேன். நீங்கள் அவசியம் ஒரு முறை இட்லரின் சுயசரிதையைப் படிக்க வேண்டும். அதன் சுருக்கப்பட்ட வடிவமொன்று தமிழில் கூட வெளிவந்துள்ளது (எனது போராட்டம் அல்லது ஹிட்லரின் சுயசரிதம், 1943). வேகமாக வளர்ந்து வந்த பொதுவுடைமைக் கட்சியைத் தேர்தலில் தோற்கடித்து மக்களாதரவோடு ஆட்சியைப் பிடித்தவன் இட்லர். பாசிசத்தின் வேதமாக விளங்கும் அவனது சுய்சரிதை அவனது அரசியலணுகல் முறைக்கு ஒரு சான்றாக விளங்குகிறது. அவனது பாசிசத் தர்க்கம் இதுதான்:

> "உலக இனங்களிலேயே உயர்ந்தது நம்முடைய (ஆரிய) இனமே. ஆனால் இன்று நமது இனம் தாழ்வுபட்டுக் கிடக்கிறது. அதற்கான காரணங்களாக யூத இன ஆதிக்கம், ஆளும் கட்சியின் ஊழல், ஒழுக்கமின்மை, பாரம்பரியங் களில் பற்றில்லாத நிலை முதலியன

> உள்ளன. நமது இனத்தின் பிரதான எதிரி யூதர்கள். அப்புறம் புதிய சிந்தனையாகவும் இயக்கமாகவும் வளர்ந்து வரும் பொதுவுடைமைச் சிந்தனையும் இயக்கமுமாகும். நமது பண்பாடு/வரலாறு குறித்த அறிவையும் ஒழுக்க மதிப்பீடுகளையும் மக்களிடையே பயிற்றுவித்து அவர்களைத் தேசிய உணர்வுடையவர்களாக ஆக்க வேண்டும். அது ஒன்றே நமது எல்லா விடிவுகளுக்கும் ஒரே தீர்வு

என்று கூறிய இட்லர் பொருளாதாரக் காரணிகளை முற்றாகப் புறக்கணித்து ஒதுக்குவான். இன மேன்மை பற்றிய உணர்வே எல்லாப் பிரச்சினைகவு என அடித்துப் பேசுவான். காரணமில்லாமல் பொதுவுடைமையர் மீதும் புதிய சிந்தனைகள் மீதும் காழ்ப்பைக் கக்குவான்.

குணாவின் திராவிடத்தால் வீழ்ந்தோம் நூலுக்கும் இட்லரின் சிந்தனைகளுக்குமிடையே பல ஒற்றுமைக்ளைக் காண முடியும். சில:-

இருவருமே பொருளியல் காரணங்களை முன் வைப்பதில்லை. குணாவில் காணப்படும் இரு பெரும் மவுனங்களாக ஏகாதிபத்திய எதிர்ப்பின்மையையும் ஆணாதிக்க எதிர்ப்பின்மையையும் நாம் சுட்டிக் காட்ட முடியும். இன்று உலகை எதிர்நோககி இருக்கக்கூடிய புதிய பொருளியல் கொள்கைகள் பற்றியும் பெண் விடுதலைச் சிந்தனைகள் பற்றியும் அன்று இட்லர் செய்தது போலவே இன்று குணாவும் வாய் திறப்பதில்லை.

இருவருமே மற்றெல்லா இனங்களைக் காட்டிலும் தம் இனமே உயர்ந்த இனம் என்கிற கருத்தை முன் வைக்கின்றனர்.

இருவருமே கடுமையான பொதுவுடைமை எதிர்ப்பாளர்களாகவும் புதிய சிந்தனைகளை வெறுப்பவர் களாகவும் உள்ளனர். இருத்தலியல், அமைப்பியல் போன்ற சிந்தனைகளை முன் வைப்பவர்களை 'உதிரிகள்' எனவும் 'செத்தைகளைத் தின்று வாழ்பவர்கள்' எனவும் 'இப்பிகள்', 'குலைப்பு வாதிகள்' எனவும் குணா காழ்ப்பைக் கக்குவது குறிப்பிடத்தக்கது.

பொதுவுடைமை இயக்கத்தின்பால் ஆரிய இனம் ஈர்க்கப்பட்டதே அதன் இழிவுகளுக்குக் காரணம் என இட்லர் சொன்னானெனில் திராவிட இயக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டதே தமிழின இழிவுக்குக் காரணமென்கிறார் குணா.

எல்லா இழிவுகளுக்கும் யூதர்களே காரணமென்பான் இட்லர். திராவிடர்களே காரணமென்கிறார் குணா. அரசியலில் ஊழல்கள் பெருகிப் போனது, வாழ்வில் ஒழுக்க மதிப்பீடுகள் சிதைந்தது, சுற்றுச் சூழல்கள் மாசுபட்டது - இப்படி எல்லாவற்றிற்கும் திராவிட இனத்தவரும், திராவிட இயக்கமுமே காரணம் என்கிறார் குணா. திராவிடக் கட்சிகளில் ஊழல்கள் பெருத்துப் போனது பற்றி நமக்கு இரண்டு கருத்துக்கள் இல்லை. இந்திரா காந்தி போல உலகமே ஊழல் மயமாகிப் போயிருக்கிறதே என நாம் நியாயம் பேசவுமில்லை. ஆனால் ஊழல் மயமானதற்குத் திராவிடக் கட்சிகள் மட்டுமே காரணம் எனச் சொல்வதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. காங்கிரஸ், பாரதீய ஜனதா என எல்லாக் கட்சிகளும் ஊழல் மயமாகியுள்ளன. இதில் இந்திக்காரன், தமிழன், கன்னடன், தெலுங்கன் என வேறுபடுத்திப் பார்ப்பதில் அர்த்தமில்லை.

குணா முன் வைக்கும் ஒழுக்கவாதத்தை நாம் கூர்மையாகக் கவனித்தல் தகும். பாசிசத்திற்கும் ஒழுக்கவாதம்/தூய்மைவாதம் ஆகியவற்றுக்குமிடையேயான உறவு குறிப்பிடத்தக்கதாக இருக்கும். அடிப்படையில் பாசிசம் என்பது ஒரு (இனத்) தூய்மைவாதந்தானே. மொழி, இனம், பண்பாடு ஆகியவற்றைத் தூய்மை செய்தலை அது முதன்மைப்படுத்தும். களைய வேண்டிய அழுக்குகளை அது சுட்டிக்காட்டும். அது இட்லருக்கு யூதர், இந்துத்துவத்திற்கு இசுலாமியர். குணாவுக்கு திராவிடர். குணா கடைப்பிடிக்கும் மொழித் தூய்மை வாதம் கவனிக்கத்தக்கது. தனது நூலில் ஆங்கில மேற்கோள்களை அப்படியே அச்சிட்டுக் கொள்ளும் குணா பிறரது தமிழ் மேற்கோள்களையே தூய்மைப்படுத்தி அச்சிடுவார். பெரியார் தமிழ் மொழியில் கலந்துபோன மதக் கறைகளை நீக்க வேண்டும் என்று சொன்னதற்கும் இதற்கும் வேறுபாடுண்டு. அவர் சகலத்திலும் கலந்துபோன வைதீகக்கூறுகளை நீக்க வேண்டும் என்றார். ஆனால் சகல அம்சங்களிலும் வைதீக மயமான கலாச்சாரத்தையே தமிழ்க் கலாச்சாரமாக எண்ணி மயங்கும் குணா மொழியில் மட்டும் தூய்மை கடை பிடிப்பது சிந்திக்கத்தக்கது. தனியாள் ஒழுக்கம், ஒருவனுக்கு ஒருத்தி மரபு ஆகியவற்றை அவர் வலியுறுத்திக் கூறுவதை மேலோட்டமாகப் பார்க்கும்போது சரிதான் எனத் தோன்றினாலும் அத்தோடு அவர் வலியுறுத்திப் பேசும் வேறு சில கூறுகளைக் கவனிக்கும்போது அவரிடம் மிகுந்து நிற்கும் தந்தைவழிச் சமூக மதிப்பீடுகள் வெளிப்பட்டு விடுகின்றன. பொட்டுக்கட்டி வாழ நேர்ந்துவிட்ட சகோதரிகளை அவர் மிக இழிவாகக் குறிப்பிடுவார் (தி.வீ. 41, 68). அவர் போற்றுகிற இராசராச சோழன்தான் பொட்டுக் கட்டும் வழக்கத்தைத் தோற்றுவித்தவன் என்பதைக் கூட மறந்துவிட்டு!

விளிம்பு நிலைச் சக்திகளை உதிரிகள் என இழிவுசெய்யும் அதிகாரத்துவக் குரலை ஃபூக்கோ முதலான நவீனச் சிந்தனையாளர்கள் கடுமையாக விமர்சிக்கின்றனர். குணாவோ 'உதிரி' என்னும் சொல்லையும் கருத்தாக்கத்தையும் எதிரிகளைத் திட்டும் ஒரு சொல்லாகவே பல இடங்களில் பயன்படுத்தியுள்ளது கவனத்திற்குரியது. பண்பாட்டு/அதிகார மையங்களிலிருந்து கொண்டு அதிகாரம் செலுத்தும் மைய ஆதிக்கச் சக்திகளின்மீது குணாவுக்குப் பெரு மரியாதையும் மையமயமாக்கும் நடவடிக்கைகளிலிருந்து தப்பித்தோட முயலும் விளிம்பு நிலை மக்களின் மீது அவருக்கு அருவெறுப்பும் மிகுந்துள்ளதை முன்பே குறிப்பிட்டோம்.

இதுவரை எழுதப்பட்ட வரலாறெல்லாம் மையங்களின் வரலாறாகவே (Sedantic History) இருந்து வந்திருக்கிறது. நாம் எழுத வேண்டியதோ மையங்களிலிருந்து தப்பித்தோடிய நாடோடி வரலாறு (Nomadic History) என நவீனச் சிந்தனையாளர்கள் குறிப்பிடுவர். ஆனால் குணாவோ அவரது தமிழர் வரலாறு நூல் முழுவதும் "நாடோடி அநாகரிகர்களை" எத்தனை இழிவாகப் பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள். ஏதோ 'படை எடுத்துவந்த' ஆரியர்களை அப்படிக் கோபமாகப் பேசுகிறார் என்று நினைத்து விடாதீர்கள். ரோமானியப் பேரரசன் தியோடேசியசின் கொடுமைகளுக்கு எதிரான கலகத்தை, "அந்த அநாகரிகரின் கலகத்தை உரோமப் பேரரசன் வலிய அடக்கினான்" என்று குறிப்பிடுவார் குணா (தி.வீ. 17). அவ்வாறு கலகம் செய்த அநாகரிகரை நாகரிகர்கள் உட்செறித்துக் கொண்டதை மகிழ்வோடு சொல்லும் குணா,

> "உரோமை வென்ற அநாகரிகச் செருமானியர்கள் தாழ்ந்த பண்பாட்டினர்; நகர்ப்புறப் பண்பாட்டைக் குறிக்கிற நாகரீகமும் எழுத்தும் செம்மையான இலக்கியமும் மெய்யியலும் அறிவியலும் கலையும் சமயமும் மதமும் இல்லாதவர்கள்"

என்று குறிப்பிடுவதை (தி.வீ. 19) நாம் கவனமாகக் கட்டுடைத்துப் பார்த்தால் அவரிடம் படிந்து கிடக்கும் அதிகாரத்துவ/ பாசிசக் கூறுகள் விளங்கும். பண்பாடுகளில் உயர்வு தாழ்வு எப்படிக் கற்பிப்பது? அதற்கென்ன அளவுகோல்? நீங்கள் குறிப்பிடும் கலை, சமயம், மதம் என்பதெல்லாம் யாருடைய அளவுகோல்கள்? உங்கள் வாதப்படி பார்த்தால் மேற்சாதியினர் தாழ்த்தப்பட்டவர்கள் மீது தீண்டாமை கடைப்பிடிப்பது சரியென்றல்லவா ஆகும்? லம்பாடியர், நறிக்குறவர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு கொடுக்கக்கூடாது எனக் குணா சொல்வதையும்

(தி.வீ. 50) நாம் இத்தோடு இணைத்துப் பார்க்க வேண்டும். தமிழ் இன்று 'சேரி மொழியாகிவிட்டது' எனவும், தமிழர் 'சேரிமக்களாக்கப்பட்டுள்ளனர்' எனவும் குணா (தி.வீ. 10) சேரி என்னும் சொல்லை எத்தனை இழிவாகப் பயன்படுத்துகிறார் என்பதையும் தோழர்கள் கவனித்தல் வேண்டும். "கொடுந்தமிழின் வெவ்வேறு வட்டார வடிவங்களைத் தரப்படுத்த வேண்டுமாம். உதிரிப் பாட்டாளிய நடைக்குத் தமிழைத் தாழ்த்திக் கெடுக்க வேண்டுமா.....இலக்கணமே வேண்டாமெனச் சொல்லி குலைப்பு (anarchism) வேலையைச் செய்யத்தான் வேண்டுமா.... இப்பியிசத்தையே இவை வளர்த்து விடும்" என்றெல்லாம் இவர்கள் விளிம்பு மக்களின் மொழியை இழிவு செய்வதையும் இணைத்துப் பார்க்க வேண்டும்.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒற்றைப் பெருந்தீர்வை முன்வைக்கும் பெருங்கதையாடல்கள் (MetnZarratives) தகர்ந்து போனதை நவீனச் சிந்தனையாளர்கள் மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றனர். குணாவோ இட்லர் போலவே தேசியத்தைப் பெருங்கதையாடலாக முன்வைத்து மகிழ்கிறார்.

> "சாதியொழிப்பிற்கும் பெண்விடுதலைக்குமான உயர் நுட்பக் கருவி தமிழ்த் தேசியம் என்னும் இன விடுதலைக் கொள்கையே. தமிழ்த் தேசியமே தமிழரினத்தின் அகப் பகைகளை அறிந்து அவற்றை வென்று புறப்பகையையும் புறமுதுகு காட்டி ஓடச் செய்ய வல்ல உயராற்றல். தமிழரில் ஒடுக்குண்டோரை அணிதிரட்டி, இயக்கி, பன்முகப் பணிகளையும் பகிர்ந்தளிக்கும் செயலாற்றலும் அத்தமிழ்த் தேசியமே. அனைத்துவகை அடிமைத்தனங்களையும் ஒழிப்பதற்கான திறவுகோல் அந்தத் தனியாற்றல். (உலக அளவில்) தமிழரினத்தின் மானத்தையும் பெருமையையும் நிலைநிறுத்தச் செய்யவும் வல்லது தமிழ்த் தேசியமே ஆகும் (த.இ.மா.மு. சூலை 95)

என்பது குணாவின் பிரகடனம். பாட்டாளி வர்க்கப் புரட்சியோ, தேசிய விடுதலையோ மட்டுமே ஒரு சமூகத்திற்கான அனைத்து விடுதலைகளையும் ஆக்கித் தரும் என்கிற கூற்று பொய்யானது என்பதை நமக்கு வரலாறு உணர்த்திவிட்டது. சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு அய்ரோப்பிய நாடுகளின் கதை நமக்குத் தெரியும். தேசிய விடுதலை பெற்ற பல நாடுகள் பாசிசமாக மாறிப்போன கதைகளையும் நாம் அறிவோம் (பார்க்க: 'தேசியம் ஒரு கற்பிதம்' நூல்). ஆனால் இதைப்பற்றி எல்லாம் கிஞ்சித்தும் கவலை

கொள்ளாத குணா மீண்டும் ஒரு பெருங்கதையாடலைக் கடை விரிக்கிறார்.

மொத்தத்தில் குணா ஒரு பழமைவாதி. ஒழுக்கவாதி, தூய்மைவாதி, கலாச்சாரவாதி, மரபுவாதி, ஆணாதிக்கவாதி. இவருக்குப் பெரியார் போன்ற எதிர்க்கலாச்சாரவாதிகளை வேரோடு பிடிக்காமற் போனது வியப்பில்லை.

குணாவிடம் ஒலிப்பது பார்ப்பன-வேளாள ஆதிக்கக் குரலே. பல்லவ-சோழராலும், பக்தி இயக்கத்தாலும் கட்டமைக்கப்பட்ட நாகரீகத்தையும் காணியாட்சி முறையையும் மையச் சரடாகக் கொண்டு அவர் கடைவிரிக்க முயலும் வைதீகத் தமிழ மாயை, ஆரிய மாயையையும் திராவிட மாயையையும் காட்டிலும் ஆபத்தானதாகவே இருக்கும்.

குணாவின் .நண்பர்களையும் பகைவர்களையும் கூர்ந்து கவனியுங்கள். பகைவர்கள் பற்றி விளங்கச் சொல்லி விட்டோம். நண்பர்களைக் கவனியுங்கள். தினமலர், நகைமுகன், எஸ்.என்.நாகராசன்......

குணாவிடம் காணப்படும் இன்னொரு அம்சத்தையும் இங்கே சுட்டிக் காட்டுவது பொருத்தம். சமண, பவுத்த மதங்களைத் தமிழ் மரபுக்கு ஒவ்வாதவை என ஒதுக்கும் அவர் கிறிஸ்தவத்தை வலிய அணைத்துக் கொள்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்பு இசுலாமிய மத மாற்றத்தை அவர் ஆதரித்துள்ள போதிலும் இன்று அவருக்குப் பாசமெல்லாம் கிறிஸ்தவத்தின் மேல்தான் (பார்க்க: 'கிறிஸ்துவத்தின் உள்ளீடு தேசிய விடுதலை இறையியலே', செம்மணி பதிபபகம், 1994). கிறிஸ்தவம் தேசிய ஓர்மைக்கு அணுக்கமானது எனவும் குறிப்பாகத் தமிழ்த் தேசியத்துக்கு அணுக்கமானது எனவும் குறிப்பிடும் குணா இட ஒதுக்கீட்டைக் காட்டிலும் மதமாற்றம் பரவாயில்லை, கிறிஸ்தவம் மதமாற்றத்தில் ஈடுபட வேண்டும் என்றெல்லாம் நீட்டிக்கொண்டு போகிறார். தமிழகத்தில் கிறிஸ்தவத்தின் தாக்கம் விரிவாக ஆராயத்தக்கது. தொடக்கக் கால மதமாற்றங்கள் சில விரும்பத்தக்க விளைவுகளுக்கு இடமளித்தன என்றாலும் கிறிஸ்தவமும் இங்கே சாதிமுறையை ஏற்றுக்கொண்டு வைதீகமயமானதே வரலாறு. அதோடு பொதுவுடைமையின் வீழ்ச்சிக்குப் பிந்திய "ஒருலகப்" பரிணாமத்தில் கிறிஸ்தவத்தின் பங்கு மிகவும் ஆபத்தானதாக இருக்கிறது. கிறிஸ்தவம் இன்று விரிவாக்கத்தின் அடையாளமாகத் திகழ்கிறது. பொதுவுடைமையின் வீழ்ச்சிக்குப் பிறகு புதிய எதிரி ஒன்று தேவைப்பட்டுள்ளதால் 'இசுலாமியப் பயங்கரவாதம்' என்கிற புதிய எதிரியை இன்று அது கட்டமைத்துள்ளது. எதிரிக்கு

எதிரி நண்பன் என்கிற வகையில் ஏகாதிபத்தியக் கிறிஸ்தவம் இன்று இந்துத்துவத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது (பார்க்க: அ.மார்க்சின் 'வகுப்புவாதம் நான்கு கட்டுரைகள்', நிறப்பிரிகை 7). இந்த ஓருலகக் கிறிஸ்துவத்தைத் தேசியத்தின் நண்பனாகக் கணிப்பது சிறுபிள்ளைத்தனமேயாகும். மதமாற்றத்தை ஒரு கலகமாக நாம் முன்வைத்தால் கூட இன்றைய சூழலில் இசுலாமிய மதமாற்றமே சரியான கலகமாக இருக்க முடியும். குணாவின் இந்தக் கிறிஸ்தவ ஆதரவு அவரைப் பற்றிய மதிப்பீட்டில் கவனத்தில் நிறுத்த வேண்டிய ஓரம்சமாகும்.

## ஐந்து

தமிழ்த் தேசியத்தை மறுப்பவர்களல்ல நாம். தமிழ்ப் பாசிசத்தையே மறுக்கிறோம். வரலாறு கற்பித்துள்ள பாடங்களை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு தமிழ்த் தேசியத்தை நாம் கட்டமைக்க வேண்டும். இங்கும் ஒரு இரத்தக் களரியை, மீண்டும் ஒரு அதிகாரத்துவச் சமூகத்தை உருவாக்கக் கூடாது என்பதே நமது கரிசனம்.

இன்று திராவிடரை ஒற்றைத் தேசிய இனமாகப் பார்ப்பதில் பொருளில்லை. கன்னடர், தெலுங்கர், மலையாளி, தமிழர் எனத் தனித்தனி இனங்களாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். திராவிட நாடு என்கிற கோட்பாடு இன்று அர்த்தமற்றது என்பதில் நமக்குக் கருத்து மாறுபாடு இல்லை. அந்தக் கோரிக்கையை வைத்து இன்று இயங்குவாரும் யாருமில்லை.

இன்றைய சூழலில் 'திராவிடர்' என்னும் பெயரை நாம் சுமந்து கொண்டிருக்க வேண்டியதில்லை என்பதிலும் நமக்குக் கருத்து மாறுபாடு இல்லை. 'குளிப்பாட்டிய நீரோடு சேர்த்துக் குழந்தையையும் கவிழ்த்தது போல' என்றொரு ஆங்கிலப் பழமொழி சொல்வார்கள். அது போலத் 'திராவிடர்' என்னும் பெயரோடு சேர்த்துப் பார்ப்பன எதிர்ப்பையும், வைதீக எதிர்ப்பையும் தூக்கி எறிந்துவிடக் கூடாது. ஆனால் குணா அதைத்தான் செய்கிறார். அதனால்தான் தினமலர் அவரைப் பாராட்டுகிறது. பொய்யையும் புனைசுருட்டையும் ஆதாரமாகக் கொண்டு பெரியார் மீது அவர் அவதூறு பொழிவது இந்த நோக்கில்தான். பார்ப்பனீயத்தை எதிர்ப்பது போலக் குணா ஆங்காங்கு பாசாங்கு செய்தாலும் அவர் அடிப்படையில பார்ப்பனீயத்தை / வைதீகத்தை ஆதரிப்பவராகவே உள்ளார் என்பது கண்கூடு.

குணா: பாசிசத்தின் தமிழ் வடிவம்

தமிழகத்தில் கிட்டத்தட்ட முப்பது சதம் பேர் சக்கிலியர், தோட்டி, நாயுடு, ரெட்டி..... உள்ளிட்ட 'பிற மொழியினர்' உள்ளனர். இவர்களில் பலர் வீட்டுக்குள் கூட தெலுங்கு, கன்னடம் பேசுவது கிடையாது. தமிழகத்தில் உள்ள திராவிட மொழிக்காரர்கள் எல்லோரையும் ஒரே மாதிரியாகப் பார்ப்பதில் பொருளில்லை. தமிழகத்தில் உள்ள மலையாளிகள் தமது பிறந்த மண்ணை மறந்து பல நூற்றாண்டுகளாக இங்கு வந்து குடியேறியவர்கள் அல்ல. கேரளத்தில் காலூன்றிக் கொண்டு இங்கே தொழில் செய்துகொண்டிருக்கும் இவர்களிடம் மலையாளி என்னும் இன உணர்வு கூடுதலாக இருக்கும். தெலுங்கு/கன்னட மொழிக்காரர்களை எல்லைப்போரத்தில் இருப்பவர்கள் என்றும் நடுப்பகுதியில் இருப்பவர்கள் என்றும் பிரித்து அணுகவேண்டி இருக்கிறது. சுற்றெல்லைகளில் இருப்பவர்களிடம் மொழி, இன உணர்வு கூடுதலாக இருக்கும். நடுப்பகுதிகளில் வாழ்பவர்கள் சொந்த மண்ணை மறந்து பல நூற்றாண்டுகளாக இங்கு வந்து குடியேறியவர்கள். இவர்களில் பலர் தெலுங்கு/கன்னட மொழிகளை மறந்தே போய்விட்டனர். இவர்களிடம் மொழி இன உணர்வைக் காட்டிலும் சாதி உணர்வே மிகுந்து இருக்கும். கள்ளர், மறவர், பார்ப்பனர், நாயுடு, சக்கிலி, நாயக்கர் எனத் தமிழ்ச் சாதிகளில் ஒன்றாகவே இவர்கள் மாறிவிட்டனர். ம.பொ.சி. சுட்டிக்காட்டுவதைப் போலப் பார்ப்பனர் வடமொழியையும் இசுலாமியர் உருதுவையும் இரண்டாம் மொழியாகக் கற்கத் தேர்வு செய்தபோது கூட இவர்கள் தமிழை மறந்தது இல்லை. தெலுங்கையோ கன்னடத்தையோ பள்ளிகளில் தேடியது இல்லை. தெலுங்கு உணர்வை ஊட்டி அரசியல் லாபம் பெற முயலும் கெங்கு சாமி நாயுடுகள் வெற்றி பெறுவது சாத்தியமில்லை.

இந்த உண்மைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் நாம் தமிழ்த் தேசியத்தைக் கற்பிக்க வேண்டும். குணா முன் வைக்கும் கறாரான மொழிவழித் தேசியம் இதற்கு உதவாது. மற்றெல்லாத் தேசியங்களையும் (எ.டு.: மதவழிப்பட்ட தேசியம்) கற்பிதம் என்று ஏற்றுக்கொள்ளும் குணா மொழி வழித் தேசியத்தை மட்டும் இயற்கையானது என நம்புவது (த.நா. மா.மு. நூலை 95) குழந்தைத்தன மானது. இது குறித்து விரிவாக நாம் ஏற்கனவே பேசியிருக்கிறோம் (தேசியம் ஒரு கற்பிதம்). ஒரே மொழி பேசும் பஞ்சாபியரும் சீக்கியரும் தனித்தனித் தேசியமாக உருப்பெற்றதேன்? பத்துக்கும் மேற்பட்ட மொழிகள் பேசும் நாகர்கள் ஒரு தேசிய இனமாக உருப்பெற்றது எப்படி? என்கிற கேள்விகளை எல்லாம் நாம் எழுப்பி இருக்கிறோம். கறாரான மொழி வழித் தேசியம் சாத்தியம் இல்லை என்பதைத் 'தமிழ் - தமிழர் இயக்கம்' , 'தமிழக ஒடுக்கப்பட்டோர்

விடுதலை இயக்கம்' முதலியன ஏற்றுக் கொண்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. மொழி வழித் தேசியம் என்கிற பெயரில் காலங்காலமாக உயர் சாதித் தமிழரின் மலத்தைச் சுமந்து திரிந்த தோட்டிகளையும் சக்கிலியரையும் எங்கே துரத்துவது?

ஆனால் அதற்காக மார்வாரிகளும் குசராத்தியரும் இங்கே சொத்துக்கள் வாங்கிக் குவிப்பதை அனுமதிப்பதா என்கிற கேள்வி நியாயமானதே. மார்வாரிகளையும் உள்நாட்டு நாயுடு, சக்கிலியர் போன்றோரையும் நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். மார்வாரிகள் சொந்த மண்ணில் வேர் பதித்து இங்கே கடை பரப்பிக்கொண்டு இருப்பவர்கள். காஷ்மீரைப் போல இங்கும் வேற்று மாநிலத்தவர் சொத்துகள் வாங்கத் தடை வேண்டும் என நாம் போரிடுவதே இதற்குச் சரியான தீர்வாக இருக்க முடியும். வேற்று மண்ணில் வேரில்லாத போதும் 'நாயுடு' போன்றோர் கொங்கு நாட்டில் பெருந்தொழிலதிபர்களாவதை அனுமதிப்பதா என்கிற கேள்வியைச் சிலர் எழுப்புகின்றனர். கவுண்டர்கள் வாங்கலாம், நாயுடுகள் வாங்கக் கூடாதா என நாம் யோசிக்க வேண்டும். தேசிய வரையறையில் மொழி, கலாச்சார அளவுகோல்களைத் தாண்டிப் பொருளியல் அளவுகோலை நாடவேண்டிய புள்ளி இது. பார்ப்பனர் உள்ளிட்ட யாருக்கும் நாம் அடிப்படை உரிமைகளை மறுக்க வேண்டும் எனச் சொல்லமுடியாது. பார்ப்பனீயம் உள்ளிட்ட பன்முகப் பண்பாடுகளிடையே சமத்துவம் என்பதே நம் முழக்கம். ஏதொன்றின் ஆதிக்கத்தையும் நாம் ஏற்க முடியாது என்பதே நமது வைதிக / பார்ப்பன எதிர்ப்பின் பொருள்.

சுருங்கச் சொல்வதானால் தமிழ்நாட்டுப் புவியியல் எல்லைகளுக்கு உட்பட்ட வேற்று மண்ணில் வேர்களற்ற மக்கள் திரளைத் தமிழ் மக்களாக அடையாளப் படுத்துவதென்பதில் வைதிக எதிர்ப்புப் பண்பாட்டுக் கூறுகளும் பொருளியல் கூறுகளும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். சுற்றெல்லைகளைத் தீர்மானிப்பதில் சிக்கல் வரும்போது வாக்கெடுப்பு மூலமாகவே அதனைத் தீர்க்க வேண்டும். பன்முகப் பண்பாட்டுக் கூறுகளையும் ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள் முதலியோரின் உரிமைக் குரலையும் ஏற்க வேண்டும். தமிழர் ஒற்றுமையைக் குலைப்பதாகச் சொல்லி இவற்றை ஒடுக்க முயல்வது பாசிசத்திற்கே இட்டுச் செல்லும். நாம் கட்டமைக்கும் தமிழ்த் தேசிய அடையாளத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினரின் வைதீக எதிர்ப்புப் பண்பாட்டுக் கூறுகளுக்கு இடமளிக்க வேண்டும். ஆனால் இதுவரை தமிழ்த் தேசியத்தைக் கற்பித்தவர்கள் அதைச் செய்ததில்லை. இனிமேலும் நாம் அந்தத் தவறைச் செய்யலாகாது.

*குணா: பாசிசத்தின் தமிழ் வடிவம்*

குணாவின் பாதை பாசிசத்திற்கு இட்டுச் செல்லும் பாதை. "நீலகிரியில் குடியேறியுள்ள படகர் நாய்களைப் பாடையில் ஏற்றிப் பிணமாகப் படகள்ளி அனுப்ப வேண்டும். அவர்கள் பிணத்தைக் கூடத் தமிழ் மண்ணில் புதைக்க அனுமதிக்கக் கூடாது. அவனுடைய மண்ணுக்கே அவன் உரமாகட்டும். ஆயுதம் ஏந்தத் தயக்கமே காட்ட மாட்டோம்" (திராவிடன், நவ. 95 பக். 9) என்கிற குரல்களுக்கே குணாவின் பாதை இட்டுச் செல்லும்!

★

*கட்டுரையில் கையாளப்பட்டுள்ள சுருக்க விளக்கங்கள்:*

| | | |
|---|---|---|
| தி.வீ. | - | திராவிடத்தால் வீழ்ந்தோம். |
| த.வ.- | - | தமிழர் வரலாறு. |
| த.இ.மா.மு. | - | தமிழ் இன மாணவர் முழக்கம். |
| மே.கு.க / மே.கு.நூ. | - | மேற் குறிப்பிட்ட கட்டுரை / நூல். |

நூற்பெயருக்கு அருகிலுள்ள எண்கள் பக்க எண்ணைக் குறிக்கின்றன.

தேசிய இனச் சிக்கலுக்கான தீர்வை ஒட்டுமொத்தத் தேசிய இனப் பார்வையிலிருந்து அணுக இயலாது. தமிழ்ச் சமூகம் தமக்குள் பகைமை கொண்டுள்ள சாதிகளாகவும் வர்க்கங்களாகவும் பிளவுகொண்ட இன்றைய சூழலில் இது வரலாற்று முரணாகும். அதுமட்டுமல்ல, இத்தகைய பார்வை உயர் சாதியினரும் மேல்நிலை வர்க்கத்தினரும் தமக்கான அரசியலை தமிழ்த் தேசிய அரசியலாக்கி ஒடுக்கப்பட்ட சாதியினரையும் அடிப்படை வர்க்கங்களையும் தம் அரசியல் வலைப்பின்னலுக் குள் இறுக்கிக் கொள்ளவும் முடியும். தமிழ்த் தேச விடுதலைக்குப்பின்னர் இன்னொரு போராட்டத்தை ஒடுக்கப்பட்ட சாதியினர்க்காகவும் அடிப்படை வர்க்கத்துக் காகவும் நடத்திக்கொள்ளலாம் என்ற குணாவின் நிலைபாட்டை அப்படியே நம்பிவிட முடியாது.

**கோ. கேசவன்**

குணா முன்வைக்கும் ஒழுக்கவாதத்தை நாம் கூர்மையாகக் காணுதல் தகும். பாசிசத்திற்கும், ஒழுக்கவாதம் /தூய்மைவாதம் ஆகியவற்றுக்கு மிடையேயான உறவு குறிப்படத்தக்கதாக இருக்கும். மொத்தத்தில் பாசிசம் என்பது ஒரு (இனத்) தூய்மை வாதந்தானே. மொழி இனம் பண்பாடு ஆகியவற்றைத் தூய்மை செய்தலை அது முதன்மைப்படுத்தும் களையவேண்டிய அழுக்குகளை அது சுட்டிக்காட்டும். அது இட்லருக்கு யூதர், இந்துத்துவத்திற்கு இசுலாமியர், குணாவுக்கு திராவிடர்......

**அ. மார்க்ஸ்**

ALANKAR OFFSET PRESS, CHENNAI - 24. ✆ 429746